விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 05 ஞாயிற்றுக்கிழமை (19.05.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 151

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## தடைகளைத் தாண்டி உறவுகளுக்கு அஞ்சலி



இறுதி யுத்தத்தின்போது முள்ளிவாய்க்காலில உயிர்நீத்த உறவுகளிற்கான அஞ்சலி நிகழ்வுகள் நேற்று உணர்வுபூர்வமாக தமிழர் தாயகம் எங்கும் அனுஷ்டிக்கப்பட்டுள்ளன. பல்வேறு அழுத்தங்கள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வடக்கின் பல பகுதிகளிலும் தமிழ் மக்கள் தமது உயிர்நீத்த உறவுகளுக்கு தீபமேற்றி அஞ்சலி செலுத்தினர். (23ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி வவுனியாவில் இடித்தழிப்பு




வன்னியில் 2009 ஆம் ஆண்டு இடம் பெற்ற இறுதிப்போரில் உயிர்நீத்த தமிழ் உறவுகளின் முதலாம் ஆண்டு நினைவாக 2010ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி வவுனியா - சம்மனங்குளத்தில் திறந்து வைக்கப்பட்ட நினைவுத்தூபி நேற்று முன் தினம் இரவு இனம்தெரியாத விஷமிகளினால் இடித்தழிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் தனித்தனியாக ஏற்பாடு செய்திருந்த முள்ளிவாய்க்கால் படுகொலையின் நான்காம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் நேற்று காலை இடம்பெறவிருந்து நிலையிலேயே, சம்மனங்குளத்தில் (23ஆம் பக்கம் பார்க்க)

## மக்களை பிளவுபடுத்தும் வெற்றி விழா கொண்டாட்டம்

### தேசிய சமாதானப் பேரவை தெரிவிப்பு

இலங்கையில் நடத்தப்படுகின்ற வெற்றி விழா கொண்டாட்டங்களால் நாட்டில் உள்ள அனைத்து மக்களின் உள்ளங்களையும் வெற்றிக்கொள்ளும்வகையில்அமையாது என்று தேசிய சமாதான பேரவை தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஒரு பகுதி மக்கள் இராணுவ வெற்றிக் கொண்டாட்டங்களை நடத்துகின்ற அதேவேளை, மற்றொரு பகுதி தமிழ் மக்கள் தங்களின் உறவினர்களை இழந்த நாளாக கருதுகின்றனர்.

இந்த கொண்டாட்டங்கள் தமிழ் மக்களின் உள்ளங்களை காயப்படுத்துவதாக அமையும். இதன்மூலம் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையின் பரிந்துரைகள் மீறப்பட்டுள்ளன.

காயப்பட்ட உள்ளங்களுக்கு ஆறுதல் வழங்க வேண்டும் என்று கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவில் பரிந்துரைக்கப்பட்டு, இரண்டு வருடங்கள் ஆகின்ற (23ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மக்களின் இதயத்தை நான் நன்கு அறிவேன்!

### யுத்த வெற்றி நிகழ்வில் ஜனாதிபதி

வடக்கு கிழக்கு மக்களின் இதயத்தைப் பற்றி எனக்கு நன்கு தெரியும், மீட்டெடுக்கப்பட்ட தாய் நாட்டிலிருந்து ஒரு அங்குலத்தையேனும் அபகரிப்பதற்கோ இன்றேல் நாட்டை பிரிப்பதற்கோ ஒருபோதும் நான் இடமளிக்கமாட்டேன என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் நிறைவடைந்ததை நினைவு கூர்ந்து நடைபெற்ற வைபவத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காலி முகத்திடலில் நேற்று நடைபெற்ற வைபவத்தில் அதிதிகளின் வருகைக்கு பின்னர் குதிரைப்படை மற்றும் மோட்டார் படையணிகள் புடைச்சூழ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது பாரியாரும் பிரதான மேடைக்கு வருகை தந்தனர்.



அவர்களை பிரதமர் தி.மு.ஜயரட்னவும் அவரது பாரியாரும்- பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் அவரது பாரியாரும் வரவேற்றனர்.

அதன் பின்னர் பாதுகாப்பு படைகளைச் சேர்ந்த 40 வீராங்கனைகள் தேசிய கீதமிசைக்க ஜனாதிபதியினால் தேசியக்கொடி ஏற்றப்பட்டது.

முப்படைகளின் மரியாதையை ஏற்றுக் கொண்டதன் பின்னர் ஜனாதிபதி படைகளின் அணிவகுப்பை விசேட வாகனத்தில் சென்று பார்வையிட்டார்.

அதற்கு பின்னர் நாட்டு மக்களுக்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு ஜனாதிபதி தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தாய் நாட்டை மீட்டெடுத்தமைக்கான வெற்றி விழாவை நான்காவது ஆண்டாகவும் கொண்டாடுவதையிட்டு பெருமையடைகின்றேன். (23ஆம் பக்கம் பார்க்க)

## கஜேந்திரன் கைது!

(குருமன்காடு)

யுத்தத்தில் உயிர்நீத்த தம் சொந்தங்களை நினைவு கூர்ந்து கண்ணீர்மல்க அமைதியாக அனுஷ்டிக்கப்பட்ட இரங்கல் கூட்டத்தில் வைத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் உள்ளிட்ட சிலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்று மாலை 4.00 மணியளவில் மன்னாரில் தமது உயிர்நீத்த சொந்தங்களை நினைத்து (24ஆம் பக்கம் பார்க்க)

## கடலில் மூழ்கிய கடற்படைப் படகு

யுத்த வெற்றி விழா கொண்டாட்டம் காலி முகத்திடலில் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது கடற்படைக்குச் சொந்தமான படகொன்று கடலில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. காலிமுகத்திடல் கடற்பரப்பில் மேற்படி படகு மூழ்கியுள்ளதாகவும் அப்படகிலிருந்து ஒருவர் காணாமல் போயுள்ளதாகவும்,3 பேர மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ)

### படையினரின் திடீர் குவிப்பால்

## யாழ்.பல்கலைச் சூழலில் நேற்று பதற்ற நிலை!

யாழ்.பல்கலைக் சூழலில் இராணுவத்தினரும், கலகமடக்கும பொலிஸாரும் நேற்றைய தினம் பெருமளவில் குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இதனால்நேற்று முழுவதும் அங்கு பெரும பதற்ற நிலையுடன் கூடிய அச்சநிலை நீடித்திருந்தது.

முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவு நாள தமிழர் தாயகம் எங்கும் நேற்றைய தினம் பரவலாக அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், யாழ். பல்கலையிலும் வருடாவருடம் மாணவர்களால் இவ் நினைவு நிகழ்வு அனுஷ்டிக்கப் படுவது வழமை.

இந்நிலையிலேயே அங்கு நேற்றைய தினம் இராணுவத்தினரும் கலகமடக்கும் பொலிஸாரும் பெருமளவில் குவிக்கப்பட்டு இருந்தனர். உயிரிழந்த உறவுகளை (24ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
செல்லா AC சினிமா



'விரைவில் பரத், சந்தானம் நடிப்பில்
TRIPLE FIVE'
எதிர்நீச்சல்
சிவகார்த்திகேயன், தனுஷ், நயன்தாரா மற்றும் பலர் நடிப்பில்
10.30, 2.30, 6.30, 9.30

## விற்பனைக்கு

நியூ பேனார்ட் (NEW BERNARD) NO.1 புறொயிலர் இன கோழி குஞ்சுகள் எம்மிடம் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

"ஒவ்வொரு புதன்கிழமையும் கோழிக் குஞ்சுகள்" விநியோகிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
செல்வரெட்ணம்
70/11, கச்சேரோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
0778448295, 0776176370

(சி-3353)

# தமிழ் மொழி ஊடாக பௌத்தம் - கோத்தபாய

தமிழ் மொழியின் ஊடாக பௌத்த மதத்தை தெளிவுபடுத்த வேண்டுமென பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழியின் ஊடாக பௌத்த மதச் சிந்தனைகளை போதிக்க பௌத்த பிக்குகள் இன்மையினால், தமிழ்மக்களபிழையாக வழி நடத்தப்படுகின்றனர். என அவர் குறிப்பிட்டார். (செ-11)

## வாடகைக்கு

யாழ்.பிரதான வீதி, சுண்டுக்குளியில் அலுவலக / வதிவிடத்திற்கேற்ற வசதியான கீழ்த்தள வீடு வாடகைக்குண்டு. முற்பணம் தேவை.

தொ.பே. : 071 428 5739 / 071 479 7357

(2674)

2009 தொடக்கம்
சிகரம் தொடு சஞ்சிகை => ஊடகப் பயிற்சி => கல்வி-தொழில் வழிகாட்டி சேவை => வெளிநாட்டுக் கல்வி => தொழில் வாய்ப்புக்கள் => www.sikaram.lk இணைய ஊடகம் என...

## 3 ஆண்டுகளைக் கடந்து சிகரம் வெற்றிப் பயணம்

இப்போது புதிய இடத்தில், மேலும் பல புதிய சேவைகளுடன்...




- O/L அல்லது A/L உடன் UK, Australia, New Zealand, Canada, USA, Malaysia, Thailand பல்கலைக்கழக அனுமதிகள் & தொழில்வாய்ப்புக்கள்
- O/L சித்தியடையாதவர்களுக்கும், மாதம் 50,000/- வருமானம், University of East London, AETS Australia சான்றிதழ்களுடன் ஹொட்டேல் பயிற்சிநெறி
- எந்தவொரு நாட்டுக்குமான Student Visa, Job Visa, Visit Visa, Skilled Migration, Visa Rejection Appeal etc.
- ENGLISH, THE EASY WAY, Modern 5 Way Approach இலகுவழி ஆங்கிலக் கற்கைநெறி
- 500க்கு மேற்பட்ட உள்நாட்டு-வெளிநாட்டு கல்வி நிறுவனங்கள், கற்கை-நெறிகள் தொடர்பான விபரங்களுடன் சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி விபரக்கொத்து 2012-2013 (விலை 300/-)
- சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி: (மாத இதழ்)
- கல்வி-தொழில் வழிகாட்டி விபரங்களை தினமும் அறிந்துகொள்ள www.sikaram.lk, facebook.com/edusikaram

**எவருக்கும் அவரவர் தராதரத்துக்கேற்ற உள்நாட்டு, வெளிநாட்டு கல்வி-தொழில் வாய்ப்புக்கள்**

சிகரம் SIKARAM கல்வி - தொழில் வழிகாட்டி MEDIA & EDUCATION
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 00 11
நேரடி: 0773 616 798
மி.அ.: edusikaram@gmail.com

## அறைகள் வாடகைக்கு

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வசதியான அறைகள் வாடகைக குண்டு. சாப்பாட்டு வசதிகளும் செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு: 077 661 8815
071 951 1411

(2675)

CALL TODAY...
START TOMORROW...

33 வருடங்களாக இயங்கி வரும் எமது கனேடிய நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய இடங்களிலிருந்து திறமையாளர்கள் கோரப்படுகின்றார்கள்.

Management Trainee - Marketing
Administration - Accounting

தகைமை :- O/L, A/L
வயதெல்லை :- 18-29
தேவையாயின் தங்குமிட வசதியும் செய்து தரப்படும்.
பயிற்சியின் போது 12,000/=
பயிற்சியின் பின்னர் நிரந்தரமாக்கலுடன் 40000/= + ETF, EPF
தொடர்புகளுக்கு :- 0776969459, 077 9297992
0214993166

(2669)

**சொந்த பாவிப்பில் இருந்த SAFARI 4 S மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.**

R.மருதலிங்கம் J.P
8/1, அம்மன் றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 6661

(2674)

## உடனடி தொழில் வாய்ப்பு

**VACANCY FOR MANAGEMENT (FREE TRAINING)**

ஆசியாவில் மிகப் பெரிய நேரடி விளம்பர நிறுவனங்களில் ஒன்றான THE GRANTON GROUP நிறுவனத்தின் முழுமையான பக்கபலத்துடன் இயங்கும் முன்னணி விளம்பர நிறுவனத்திற்கு அதன் வட மாகாண (யாழ்ப்பாணம் / வவுனியா / கிளிநொச்சி / முல்லைத்தீவு) கிளைகளுக்கு பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களுக்கு ஒரு வாரத்தில் உடனடி பதவி வெற்றிடங்கள்.

- சர்வதேச தரத்தில் பயிற்சிகள் வழங்கப்படும்.
- சகல பயிற்சிகளும் இலவசமாக வழங்கப்படும்.
- பயிற்சியின் போது கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
- பயிற்சியின் பின்னர் கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவுடன் மாதாந்தம் 50,000 /= பெறலாம்.
- பயிற்சியின் பின் நிரந்தரமாக தொழில்
- பயிற்சிக் காலம் 03 - 06 மாதங்கள்
- பிரதேச ரீதியாக பயிற்சி வழங்கப்படும்.

**கல்வித் தகைமை**

A/L பரீட்சையில் தோற்றியவர்களும், தொழிலை எதிர்பார்த்து காத்திருப்பவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

குறிப்பு : தூர பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு பயிற்சிக் காலத்தில் (ஆண்கள்) தங்குமிட வசதி செய்து தரப்படும்.

அசாதாரண சூழ்நிலைகளில் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்புகளுக்கு : 0777-27 4795, 021-5686466

(2717)

# சிக்கலில் ரணில் - மகிந்த

வடக்கு மாகாண சபை தேர்தலுக்கு முன்னதாக காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை ரத்து செய்ய வேண்டும் என்று கோரி, ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை தாக்கல் செய்யவுள்ளமை தொடர்பில் ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய இருவருக்கும் சிக்கல் தோன்றி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் உயர்மட்ட தகவல்களை மேற்கோள் காட்டி ஆங்கில ஊடகம் ஒன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

முன்னாள் வட கிழக்கு முதலமைச்சர் வரதராஜ பெருமாள், விடுதலைப் புலிகள் மற்றும் இந்தியாவின் உதவியுடன் வடக்கில் தனியான பொலிசாரை நியமித்தார்.

இதேபோன்று வடக்கு தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு வெற்றி பெறும் பட்சத்தில், அது மீண்டும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு உயிர்ப்பினை வழங்கி விடும் என்ற நிலையில், எதிர்வரும் தேர்தலுக்கு முன்னதாக காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் ரத்து செய்யப்பட வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய கோருகிறது.

இந்த நிலையில் தாம் தாக்கல் செய்யவுள்ள பிரேரணைக்கு கட்சிகளின் உறுப்பினர்கள் சுதந்திரமாக வாக்களிக்க அனுமதிக்க வேண்டும் என்று கட்சித் தலைவர்களிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பில் ரணில் விக்ரமசிங்க மற்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் செய்வதறியாது இருப்பதாக கூறப்படுகிறது.

ஏற்கெனவே மக்கள் சுதந்திர முன்னணியும், சில அடிப்படை வாத கட்சிகளும் 13ம் திருத்தச் சட்டத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டு வரும் நிலையில், இந்த பிரேரணை நிறைவேற்றப்படுமாக இருந்தால், அது அரசாங்கத்துக்கு பாரிய சிக்கலை தோற்றுவிக்கும் என்று கூறப்படுகிறது. (செ-11)

## மரண அறிவித்தல்



**திருமதி சுயந்தினி கணேசமூர்த்தி**
(இலங்கை வங்கி - திருநெல்வேலி)

60, சேர் பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுயந்தினி கணேசமூர்த்தி 17.05.2013 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : கணேசமூர்த்தி (கணவர்)
இலங்கை வங்கி – யாழ்ப்பாணம்.
60, சேர் பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

(2680)

## ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் - 2013

காலம் :- 19.05.2013 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணி
இடம் :- நிறுவன மண்டபம்

விழா தலைவர்
**திரு. ந. கனகசுந்தரன்**
(ஆசிரியர், யாழ்.வட்டு மத்திய கல்லூரி, கலைவாணி கல்வி நிலைய கணிதப் பொறுப்பாசிரியர்)

பிரதம விருந்தினர்
செஞ்சொற் செல்வர் கலாநிதி **ஆறு. திருமுருகன்** அவர்கள்
(தலைவர், சிவபூமி அறக்கட்டளை துர்க்காதேவி தேவஸ்தானம், உபதலைவர் அகில இலங்கை இந்துமா மன்றம்)

**திரு. அ. சோதிநாதன்** அவர்கள்
(பிரதேச செயலர், வலிகாமம் மேற்கு, சங்கானை)

சிறப்பு விருந்தினர்
**திரு க. கணேசலிங்கம்** அவர்கள் (கிராமசேவகர், வட்டு மேற்கு)

கௌரவ விருந்தினர்
**திரு. வி. பத்மசிவம்** அவர்கள் (நிலைய தொடக்குனர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கலைவாணி கல்வி நிலையம்**
**சிவன் கோவிலடி, வட்டுக்கோட்டை.**

(சி-3373)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்
**ஸ்ரீமான். முத்துவேலு வேல்நாயகம்**

அம்பன் அ.மி.த.க பாடசாலை அதிபர் பரமேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தையார்.



ஸ்ரீமான். முத்துவேலு வேல்நாயகம் 18.05.2013 அன்று திடீரென சிவபதம் அடைந்த செய்தி கேட்டு துணுக்குற்றோம். எமது பாடசாலையின் அதிபர் பரமேஸ்வரன் குடும்பத் தினருக்கும். அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்காக இறைவனை பிரார்த்தனை செய்கின்றோம்.

தோற்றம் 1932-06-13
மறைவு 2013-05-18

பிரதியதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ அம்பன் அ.மி.த.க.
பாடசாலை சமூகம்.

(சி-3375)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெல உறுமயவின் நடவடிக்கையில் தலையைப் பிய்க்கும் பெருந்தலைகள்

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் சில நடவடிக்கைகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் நெருக்கடியில் ஆழ்த்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாகாண சபைகளில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் இரத்துச் செய்யப்படவேண்டும் எனக்கோரி ஜாதிகஹெல உறுமய விரைவில் உத்தேச சட்டமூலமொன்றை பாராளுமன்றில் சமர்ப்பிக்கத்திட்டமிட்டுள்ளது.

எனினும் இந்தச் சட்டத் திருத்தம் ஆளும், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு பெரும் தலையிடியாக மாறியுள்ளது. ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் சுய விருப்பின் அடிப்படையில் இந்த உத்தேச சட்டம் தொடர்பான வாக்கெடுப்பின் போது வாக்களிக்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சித் தலைவர்களிடம் கோரவுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சிக் கொள்கைகளுக்கமைவாக அன்றி சுயவிருப்பின் அடிப்படையில் வாக்களித்தால் இந்தச் சட்டத்திருத்தத்தை இலகுவில் அமுல்படுத்த முடியும் என ஜாதிக ஹெல உறுமய நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண சபையில் வரதராஜப்பெருமாள் செய்தவற்றை எவரும் மறந்துவிடக்கூடாதென ஜாதிகஹெல உறுமயக் கட்சியின் தலைவர் ஓமல்பே சோபிததேரர் தெரிவித்துள்ளார்.

புலி ஆதரவு புலம்பெயர் சமூகத்தின் ஒத்துழைப்புடன் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு வடக்கில் மீண்டும் பிரிவினைவாதத்தை தூண்டக்கூடிய அபாயம் காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். (அ)

# வடக்கில் தமிழர்களுக்கு ஏற்ற நிர்வாகத்தை ஏற்படுத்துக!

## அமைச்சர் வாசு வலியுறுத்து

குறிப்பிட்ட சில அரசியல் கட்சிகளின் பேச்சுக்களை கேட்கப்போனால் இன்னும் பல வருடங்களுக்கு வட மாகாணசபைத் தேர்தல் நடத்த முடியாமல் போகும் என வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் வடக்கில் தேர்தலை நடத்தி அம் மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்ற நிர்வாக முறையை ஏற்படுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த சிங்கள மக்களை மீள் குடியமர்த்திய பின்பு தேர்தல் நடத்தினால் தமிழ் மக்களும் அதேபோன்று கோரிக்கையை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் முன் வைப்பார்கள்.

ஏனெனில் இந்தியாவில் மாத்திரம் இடம்பெயர்ந்த 40 ஆயிரம் இலங்கை தமிழர்கள் முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஆகவே, உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ள வட மாகாணத்தைச் சேர்ந்த மூவின மக்களுக்கும் வாக்களிக்கக்கூடிய புதிய சட்டத்தை அரசு கொண்டுவர உள்ளது என்றும் அவர் குறிப்பட்டுள்ளார். (அ-2)

# 100 பிள்ளைகளுக்கு கொடுப்பனவு

(மல்லாவி)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஏற்பாட்டின் கீழ் வவுனியா நகரசபை மண்டபத்தில் அமைக்கப்பட்ட சிறப்பு நினைவுத்தூபியில் வன்னி இறுதிப்போரில் மரணித்த மக்களுக்கான அஞ்சலி நிகழ்வுகள் நேற்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தாய், தந்தையை இழந்த 100 பிள்ளைகளுக்கு பிரான்ஸிலிருந்து செயற்படும் TRT தமிழ்வானொலியின் அனுசரணையுடன் தலா 3ஆயிரம் ரூபா வீதம் பிள்ளைகளின் பெயரில் வவுனியா இலங்கை வங்கியில் வைப்பில் இடப்பட்டு வைப்புப் புத்தகம் குறித்த பிள்ளைகளிடம் வழங்கப்பட்டது.மேலும், இவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. (அ-3-15)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மத்திய மின்நிலையத்தில் உள்ள மின்பிறப்பாக்கிகளில் தொழில்நுட்பப் பரிசோதனைகள் செய்யவேண்டியிருப்பதால் இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணிவரை வடமராட்சி, வடமராட்சியிலிருந்து சுன்னாகம் வரை, தென்மராட்சி, தென்மராட்சியிலிருந்து கரந்தன் வரையான பிரதேசங்கள் தவிர்ந்த யாழ்குடாநாட்டின் ஏனைய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (அ-2)

# இராசி பலன்

19.05.2013
(வைகாசி 05, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
நவமி மாலை 6.49 மணிவரை
பூரம் பின்னிரவு 2.09 மணிவரை
இராகுகாலம் 4.22- 5.52 மணிவரை
சுபநேரம் 8.52-10.22 மணிவரை
சித்தாமிர்தம்

**மேடம்** பிள்ளைகள் வழியில் வந்த தொல்லைகள் அகலும், வருங்கால நலன்கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

**இடபம்** தனவரவில் இருந்து தண்டகள் அகலும், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிக்க நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் சகோதர ஒத்துழைப்பால் பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும், குடும்பத்தில் சிலரைத் திருப்திப் படுத்துவதற்காக கூடுதல் பொறுப்புக்களை எடுத்து நடத்த வேண்டி வரலாம்.

**கடகம்** தொலைதூரத்தில் இருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், செய்தொழிலை விருத்தி செய்ய பிறரிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**சிங்கம்** அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், மனக் குழப்பங்கள் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணை புரிவர், கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி** அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், சுப செலவுக்ள் அதிகரிக்கும்.

**துலாம்** பணவரவு அதிகரிக்கும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், உறவினர் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** விருந்தினர் வருகையுண்டு, பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், கட்டட பணியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** மருத்துவ செலவுகள் குறைந்து மன நிம்மதியைக் கொடுக்கும், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, பெரிய மனிதர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு, தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**மகரம்** எந்தக் காரியத்தையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது, போசன சுகமுண்டு, கௌரவக் குறைவான சம்பவங்கள் ஏற்படலாம், குடும்பத்தில் இடையிடையே சில விவாதங்கள் ஏற்பட்டு மறையும்.

**கும்பம்** வாழ்க்கை துணை வழியே வரவுகள் வந்து சேரலாம், அபூர்வ சந்திப்புண்டு, சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன நன்மையுண்டு,தொழில் நன்மை கருதி தகுந்த நடவடிக்கை எடுப்பீர்கள்.

**மீனம்** காணாமற் போன பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## எதிரிகளின் சமரசம்

அழகான அரண்மனை, அங்கே ஒரு மூலையில் குருவி ஒன்று கூடு கட்டி குஞ்சு பொரித்திருந்தது.

அதேநாளில் மன்னருக்கும் குழந்தை பிறந்தது. இரண்டும் வளர்ந்தன.

அரசகுமாரன் குருவி குஞ்சுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது ஏதோவொரு கோபத்தில் குருவிக் குஞ்சின் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டான்.

இதைப் பார்த்த தாய் பறவைக்கு கோபம் வந்தது. பாய்ந்து சென்று அரசகுமாரனின் கண்களை கொத்தியது. அவன் பார்வையினை இழந்தான்.

இதனால், மன்னர் குருவியை சந்தித்து ஒரு குற்றம் நடந்துள்ளது. அதற்கான தண்டனையும் கிடைத்துவிட்டது. இனிமேல் நாம் அதை மறந்து இருவரும் சமாதானமாக போகலாம் என்று ஒரு சமரசத் திட்டத்தை முன்வைத்தார்.

இதற்கு குருவி சொன்னது மன்னா! என் குஞ்சுக்கு உன் மகன் தீங்கிழைத்து விட்டான். எனவே, உன் மகனுக்கு நான் தீங்கிழைத்து விட்டேன் என்றது.

ஒரு சமயம் ஒருவனுக்கு கெடுதல் செய்து விட்டு இன்னொரு சமயம் அவன் மீது நம்பிக்கை வைப்பவன் இறுதியில் ஏமாற்றத்தை சந்திப்பான். மக்கள் இடையே நடந்ததை இனி நீயோ நானோ முற்றிலுமாக மறந்து விடுவது என்பது முடியாத காரியம்.

இனிமேல் நான் எவ்வளவுதான் விசுவாசமாக நடந்து கொண்டாலும் உன் செயற்பாடுகளில் எனக்கு சந்தேகம் இருந்து கொண்டே தான் இருக்கும். எனவே இந்த இடத்தில் தங்குவது எனக்கு நல்லது அல்ல. தீங்கு செய்த இடத்தில் திரும்பவும் ஆதரவை நாடக்கூடாது.

நான் வருகிறேன்! எனக்கூறி குருவி பறந்துபோய்விட்டது. மன்னனுக்கு ஒரு உண்மை உதயமாகியது...

ஒரு சந்தையை நடத்துவதற்கு சரியான வழி அதை ஆரம்பிக்காமலே இருந்து விடுவதுதான்!"

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 60 | 80-120 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 120 | 80 |
| தக்காளி | 140 | 50 | .120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 60 |
| கோவா | 100 | 60 | 80 | 80 |
| கரட் | 100 | 80 | 120 | 140 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 120 | 120-160 | 120-160 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60-80 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | -- | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 | 80 |
| லீக்ஸ் | 140 | 120 | 140 | 140 |
| பீற்றூட் | 120 | 60 | 80 | 120 |
| கறிமிளகாய் | 100 | 90 | 220 | 120 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 600 | 400 |
| போஞ்சி | 120 | 110 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 70 | 50 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 120 | 40 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 45-50 | 40-45 |
| இராசவள்ளி | 100 | 80 | 120 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.நகரில் திறந்த நிலையில் பழங்கள் விற்கப்படுகின்றன

யாழ். நகரப் பகுதியில் பழ வியாபாரம் நடைபெறுகின்ற கடைகளில் பழங்கள் திற ந்த நிலை காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படுவதால் அவற்றை வாங்கி உண் ணும் மக்கள் தாம் பாதிக்கப்படுவதாக குற்றம் சாட்டுகின்றனர்.


யாழ்ப்பாண பேருந்து நிலையத்தைச் சுற்றி பழ வியாபாரக் கடைகளை நடத்துப வர்கள் பொதுமக்களின் நலனில் எள்ளளவும் அக்கறை இன்றி தமது சுய இலாபத்தை நோக்கமாகக் கொண்டு செயற்படுவதா லேயே இவ் அவல நிலை காணப்படுகின்றது.

மக்கள் பாவனைக்கு உதவாத மருந்து களை பழங்களுக்கு தெளித்தும் திறந்த நிலையிலும் பழங்களை விற்பனை செய்கி ன்றனர்.

சிறுவர் முதல் பெரியோர்கள் வரை இவ ற்றை வாங்கி நீரில் கழுவி சுத்தப்படுத்தாது உடன் உண்பதால் வாந்தியுடன் வயிற்று ளைவு உட்பட பல நோய்களுக்கு ஆளாகின் றனர்.

தற்போது வன்னியில் இருந்து கொண்டு வரப்படும் பாலைப் பழங்களைத் திறந்த நிலையில் காட்சிப்படுத்தி தமது கைகளால் அள்ளியே அவற்றை விற்பனையும் செய்கி ன்றனர்.

எனவே, சுகாதாரத் துறைக்குப் பொறுப் பான சுகாதார அதிகாரிகள் பழக்கடைகள் மீது திடீர் பரிசோதனை மேற்கொண்டு தர மான பழங்கள் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (அ-3-15)




நன்றி: அததெரண

## சி.க.கூ. சங்க பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற் பிள்ளை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க 26 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சதா வதானி கதிரவேற்பிள்ளை சி.க.கூ. சங்க மண் டபத்தில் சங்கத்தலைவர் பா.இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கங்களின் தலைவர் செ.இலகுநாதன் கலந்து சிறப்பிக்க வுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கூட்டுறவு அபி விருத்தி அலுவலர் அ.தயாளன், நல்லொ ழுக்க நிறுவன உப தலைவர் திருமதி தி.சரஸ் வதி நக்கீரன், சி.க.கூ சங்கத் தலைவர் கி.கணே ஷன், சதாவதானி சனசமூக நிலையத் தலை வர் வே.நடராஜா, புலோலி மேற்கு கிராம சேவையாளர் வே.வன்னிமரம், புலோலி மத்தி கிராம சேவையாளர் சீ.லம்போதரன் ஆகி யோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(அ-3-10)

## யாழ்.மாவட்ட செயலகத்தில் கொன்சுயூலர் பிரிவு ஆரம்பம்

வெளிமாவட்டங்களில் இருந்து வரும் பொதுமக்கள் கொன்சுயூலர் பிரிவால் உறு திப்படுத்தப்பட்ட தமது ஆவணங்களை உரிய உயர்ஸ்தானிகராலயத்தில் அல்லது தூதுவ ராலயங்களில் விரைவாக சமர்ப்பிப்பதை கருத்தில் கொண்டு புதிய நடைமுறை ஒன்றை வெளிநாட்டு அமைச்சின் பிரதியமைச்சர் நியோமல் பெரேரா ஆலோசனையின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.உதவி மாவட்டச் செயலாளர் எஸ்.சுதர்சன் அறி வித்துள்ளார்.

இப்பிரிவானது கடவுச்சீட்டு, தேசிய அடை யாள அட்டை, பிறப்பு, இறப்பு, விவாக சான் றிதழ், பொலிஸ் ரிப்போட், சாரதி அனுமதிப் பத்திரம், கல்விச் சான்றிதழ், மருத்துவச் சான்றிதழ், அற்றோனித் தத்துவம், சத்தியக் கடதாசி, தங்கி வாழ்வோர் சான்றிதழ், வதிவிட சான்றிதழ் மற்றும் ஏற்றுமதி தொடர்பான சான்றிதழ் ஆகியவற்றை உறுதிப்படுத்து கிறது.

வெளிநாட்டு அமைச்சு கொன்சுயூலர் பிரிவின் ஆவணங்களை அத்தாட்சிப்படுத்தி உறுதிப்படுத்தும் செயற்பாடுகள் காலை 6 மணி முதல் ஆரம்பிக்கப்படுகின்றன. ஆகவே, பொதுமக்கள் காலை 6 மணி முதல் விண் ணப்ப படிவங்களை 5 ஆம் மாடியில் பெற் றுக் கொள்ள முடியும்.

இவ் ஆவணங்கள் யாவும் உரிமையாள ராலோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் நபராலோ சமர்ப்பிக்கப்பட முடியும். ஆவ ணங்கள் சமர்ப்பிக்கும் போது உரிய மூலப் பிரதியுடன் சமர்ப்பிக்க வேண்டும். போட்டோப் பிரதிகளில் பொருத்தமான நபரால் சான்று உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பொதுமக்களால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவங்கள் 3 ஆம் மாடியிலுள்ள கரும பீடங்களில் காலை 6.30 மணியில் இருந்து ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இவ் வாறு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆவணங்கள் பரிசோதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு மிக விரைவில் பொதுமக்களுக்கு வழங்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 0112385571 என்ற இலக்கத்திலோ mea.slt.net.lk என்ற இணையத்தளத்திலோ பார்வையிடலாம். (அ)

## வெசாக் தினத்தில் சில கடைகள் மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

வெசாக் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் அனைத்து மதுபா னக் கடைகளையும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உள்நாட்டலுவல்கள் அமைச் சின் செயலாளர் கோரியுள்ளார்.

மேலும் சிறப்பு அங்காடிகளில் மதுபான விற்பனையை நிறுத்துவதற்கும் கொல்கள நிலையங்கள், பந்தய நிலையங்கள், சூதாட் டக் கூடங்கள், இறைச்சிக் கடைகள் ஆகிய அனைத்தையும் மூடுவதற்கும் சிறப்பு அங் காடிகளில் இறைச்சி விற்பனையை நிறுத் துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் கோரியுள்ளதாக யாழ்.உதவி மாவட்டச் செயலாளர் எஸ்.சுதர் சன் அறிவித்துள்ளார். (அ)




# விரிவுரைகளை தவிர்க்க பல்கலை. ஆ.ச.ச. முடிபு

(யாழ்ப்பாணம்)

மின்கட்டண உயர்வுக்கு எதிர்ப்புத் தெரி விக்கும் முகமாக அனைத்துத் தொழிற்சங் கங்களும் கூட்டாக நாளை மறுதினம் செவ் வாய்க்கிழமை ஒழுங்கு செய்துள்ள எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதென பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் (FUTA) தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக தமது நிலைப்பாட்டைத் தீர்மானிப்பதற்காக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்க பொதுக்குழு கூடி ஆலோசித்தது.

மேற்படி கூட்டத்தில் FUTA வின் நிலைப் பாட்டிற்கு ஆதரவாக நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை விரிவுரைகளைத் தவிர்ப் பதற்கு விஞ்ஞான ஆசிரியர்கள் தீர்மானித் துள்ளனர். எனினும் மேற்படி தினத்தில் நடை பெற தீர்மானிக்கப்பட்டிருக்கும் பரீட்சைகள் சுமுகமாக நடைபெறும்.

மேலும் அன்றைய தினம் நண்பகல் 12 மணி முதல் ஒரு மணி வரை பல்கலைக்கழக பிரதான வாயிலுக்கு அண்மையில் எதிர்ப்புத் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு விஞ்ஞான ஆசிரியர்கள் தீர்மானித்துள்ளனர். (அ)

# வாகன விபத்தில் ஒருவர் படுகாயம்

(கரவெட்டி)

மோட்டார் சைக்கிள், வடி வாகனம் மோதிய விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் படு காயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் வடமராட்சி நெல்லியடிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவது, நெல்லியடி மாலு சந்தி வீதியில் அமைந்துள்ள சிலிங்கோ லைப் நிறுவனத் திற்கு முன்பாக வடி வாகனமும் மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த அல்வாய் கிழக்கு வட்டுவத்தையைச் சேர்ந்த எஸ்.ஜங்கரன் (வயது 27) என்ற இளம் குடும்பஸ்தர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-24)

## போரின் வடு....



இரண்டு கால்களையும் இழந்த ஒருவர் தனது கைகளின் உதவியுடன் யாழ்ப் பாணம் ஆஸ்பத்திரி வீதியை கடந்து சென்றபோது... (படம்:-உ.சாளீன்)

## பருத்.மெதடிஸ்த பெண்கள் வெற்றி

(கரவெட்டி)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடை யேயான 15 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் சண்டி லிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை அணி வெற்றி பெற்று சம்பி யனானது.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடை யேயான பெரும் விளையாட்டுக்களில் வலை ப்பந்தாட்டப் போட்டி யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதன் இறுதிப் போட்டியில் சண்டிலிப் பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை அணி மோதியது. இதில்



22:13 என்ற புள்ளி அடிப்படையில் சண்டி லிப்பாய் இந்துக் கல்லூரி அணியை பருத் தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி வென்று சம்பியனானது.

மூன்றாமிடத்தை பொன்னாலை வரத ராஜப் பெருமாள் வித்தியாலய அணி பெற் றுக் கொண்டது.(அ-3-24)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமாதானப் பெருந்தொனி

வாருங்கள் இலவசம்!

கவலை, கண்ணீர்,
தீராத வியாதி,
பிசாசின்பிடி, வியாபாரத் தோல்விகள்
பில்லி-சூனியக்கட்டு, பாவங்கள்,
பரம்பரை சாபங்கள்,
அடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து

**இயேசு விடுதலை கொடுக்கிறார்!!!**

இடம்: பொதுவிளையாட்டு மைதானம்,
முல்லைத்தீவு
(மக்கள் வங்கி முன்பாக)

காலம் : 17,18,19 வைகாசி 2013
(வெள்ளி, சனி, ஞாயிறு)
நேரம் : தினமும் மாலை 4.00மணி

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." (மத்தேயு 11:28)

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை,
1ம் வட்டாரம், வேணாவில், புதுக்குடியிருப்பு.

(சி/3345)


## சமுர்த்தி வங்கிகள் திறக்கப்படவுள்ளன

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் இரு சமுர்த்தி வங்கிகள் திறக்கப்படவுள்ளன.

நாளை திங்கட்கிழமை கந்தபுரத்திலும் எதிர் வரும்22 ஆம் திகதி புதன்கிழமை வட்டக் கச்சியிலும் இவை திறக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் சமுர்த்தி வேலைத் திட்டம் நடைபெற்று வருகின்றமையால் இதனை இலகுபடுத்தும் முகமாக இவ் வங்கிகள் திறக் கப்படவுள்ளன. (அ-3-254)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணார் பண்ணை வீரமாகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ திருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி வியா ழக்கிழமை காலை 10 மணிக்கு கெடியேற் றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இருபத் தைந்து தினங்கள் நடைபெறவுள்ளன.

உற்சவத்தில் ஜூன் 20 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 8 மணிக்கு வேட்டைத் திரு விழாவும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப் பறமும் 22 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தமும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (அ)


# NOTICE OF NAME CHANGE



ExpoAir your friend in the skies... இப்போது FitsAir friend in the skies...

எமது மேலான ExpoAir வாடிக்கையாளர்களுக்கு...

எமது நிறுவனத்தின் பெயரான ExpoAir என்பது FitsAir என 20/03/2013 முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை இதன்மூலம் உங்களுக்கு அறியத்தருகின்றோம். மேலும் எமது பதிவு செய்யப்பட்ட நிறுவனப்பெயராகிய Expo Aviation (Pvt) Ltd. என்பது தற்போது FITS Aviation (Pvt) Ltd. என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இது வெறும் பெயர் மாற்றம் மட்டுமே அன்றி எமது நிறுவனத்தின் இயக்குனர்குழு, நிர்வாகம், செயற்பாட்டு விதிமுறைகள், பணிப்பாளர்கள், உடைமைகள் போன்றவற்றில் எந்த மாற்றங்களும் கொண்டிருக்கவில்லை என்பதை உங்கள் மேலான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றோம்.

இந்த பெயர் மாற்றம் குறித்த மேலதிக விபரங்களுக்கு எமது பிரதிநிதிகளை நாடவும்.
தொலைபேசி இலக்கம் (+94) 112 555158

உங்களுக்கான சிறந்த மேலான சேவையினை தொடர்ந்து வழங்குவோம் என்பதனை இத்தால் உறுதி கூறுகின்றோம்.

your,

Friend In The Skies.

The Management,
FITS Aviation (Pvt) Ltd.

FITS

www.fitsair.com

(சி/3360)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1977 இந்து (KO)<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம் : 5'3"<br>தகைமை/தொழில்: வியாபாரம்<br>எ.பா:மதம் மாறச் சம்மதம், விவாகரத்து ஏற்கப்படும்<br>தொ.இ: B -1811 | பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>உயரம்:5'6"<br>கி.பா: 16, 4 இல் செவ்.<br>தகைமை/தொழில்: BA, MBA<br>தொ.இ: G -1822 |
| பிறப்பு: 1970 இந்து (KO)<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்: 5'4"<br>கி.பா: 38, 2 இல் சூரி,செவ்<br>தகைமை/ தொழில்: O/L, சவுதி அரேபியா<br>தொ.இ: B -1812 | பிறப்பு: 1976 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>உயரம் : 5'2"<br>கி.பா: 18<br>தகைமை/ தொழில்:BA (Eco Spl) நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்<br>தொ.இ: G-1824 |
| பிறப்பு: 1984 இந்து குருகுலம்<br>நட்சத்திரம்: விசாகம் 3, 8 இல் செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/ தொழில்: UK (Blood Technical)<br>தொ.இ: B -1816 | பிறப்பு: 1986 இந்து (V)<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>உயரம்: 5'4"<br>கி.பா: 46, 7 இல் செவ்<br>தகைமை/ தொழில்: HNDM, கணக்கு உதவியாளர், தனியார்<br>தொ.இ: G -1827 |
| பிறப்பு: 1977 இந்து (V)<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>உயரம்: 5'4"<br>கி.பா: 33<br>தகைமை/தொழில்: A/L, ஆசிரியர்<br>எ.பா: சைவபோசனம்<br>தொ.இ: B -1817 | பிறப்பு: 1984 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>உயரம்: 5'3"<br>கி.பா: 32.25, 1 இல் செவ்<br>தகைமை/ தொழில்: பட்டதாரி வங்கி<br>தொ.இ: G -1828 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி



1717 FOLLOW US www.mobitel.lk

**அவர்கள் இன்றி உங்களால் இருக்க முடியாது...**

சகல பயணங்களின் போதும் தொடர்ந்தும் தொடர்பில் இருங்கள்

மொபிடெல் ரோமிங்



உலகின் சகல நாடுகளுக்கும் மிகச் சிறந்த கட்டணத்தினை பெற்றுத் தருகின்றது.


20 Sri Lanka Telecom Mobitel

(சி/3365)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் நினைவுகளுடன்...

## வவுனியாவில்...









## யாழ்ப்பாணத்தில்...








## கரையான் முள்ளிவாய்க்காலில்...





## தமிழகம் - புதுக்கோட்டையில்...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்காக வாழத்துடிக்கும் ஆத்மாவை போற்றிடுவோம் அன்னையர் தினத்தில்

ஒவ்வொரு வருடமும் மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையை அன்னையர் தினமாக் பெரும்பாலான நாடுகளில் கொண்டாடுகின்றார்கள்.

வயிற்றில் எம்மை சுமக்க ஆரம்பித்த கணம் முதல், எம்மைப் பற்றிய கனவுகளோடும் கவலைகளோடும் கருணையும் அன்பும் கலந்து எமக்காகவே வாழத் துடிக்கும் அந்த ஆத்மாவை பெருமைப்படுத்தும் ஒரு தினமாக இந்த நாளை உலகம் முழுவதும் ஒவ்வொரு மகனும் ஒவ்வொரு மகளும் தனது தாயுடன் பரிசில்களையும் வாழ்த்துக்களையும் குவித்து அன்பை வெளிப்படுத்தி கொள்கிறார்கள்.

ஒவ்வொரு நிகழ்வும் வரலாறு ஆகாது. ஆனால், சில விசேடமான குறிப்பிட்ட நிகழ்வுகள் சம்பிரதாயங்களாக ஏதே ஒரு வரலாற்றின் சுவடுகளாக எம்மோடு கூடவே வருகின்றன. அதேபோல் அன்னையர் தினத்திற்கென்றும் பல காரணங்களும் வரலாறுகளும் பண்டைக்காலம் தொட்டு இருக்கத்தான் செய்கின்றது.

பண்டைக்காலங்களில் அன்னையர் தினம் என்பது பெண் கடவுள்களை அன்னையாக போற்றி கொண்டாடப்பட்டது.

உலகத்தில் தோன்றிய எல்லா மதத்திலும் பெண் கடவுள்கள் இன்றியமையாத தொரு படைப்பாகி இருந்திருக்கின்றன. ஏன் நமது இந்து சமயத்தை அதற்கு பெரிய தொரு உதாரணமாகக் கொள்ளலாம். இயற்கையும் அமானுஷ சக்தியையும் பெண்ணின் வடிவாக போற்றி இருப்பது கண்கூடான விடயங்கள். நதியில் இருந்து விதிவரை பெண்ணின் வடிவமாக கொள்ளப்பட்டு பெரும்பாலும் தாயின் வடிவாகவே போற்றினர்.

உலகத்தில் அன்னையர் தின வரலாற்று சுவடுகளை தேடிக் கொண்டு போனால் பண்டைய எகிப்திய காலம் வரை அவை உங்களை அழைத்துச் செல்லும். பண்டைய கூலங்களில் அன்னைக்கான மேன்மையையும் பெருமையையும் மானிட அன்னையரை விட, அமானுஷ்யமாயிருந்த இயற்கை அன்னைக்கு கொடுத்திருந்தன என்று சொல்லலாம்.

இந்த வகையில் பண்டைய எகிப்தியர் தான் அநேகமாக உலகத்தில் முதன் முதல் அன்னையர் தினத்தை கொண்டாடியவர்கள் எனக் கூறமுடியும். இவர்கள் ஐஸிஸ் என்ற பெண் கடவுளை மேம்படுத்தும் வகையில் இந்த நாளை கொண்டாடினர்.

இந்தப் பெண் தெய்வமான ஐஸிஸ் (Mother of Hours) இயற்கை அன்னை



யாக போற்றப்பட்டது. இந்தப் பெண் தெய்வமானது அடிமைகளுக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் நோய்வாய்ப்பட்டோருக்கும் சிநேகமானவளாகவும் ஏழை எளியோரின் பிரார்த்தனைகளை செவி மடுப்பவளாகவும் நம்பப்பட்டாள். இந்த பெண் தெய்வத்தை போற்றும் விழாவையே உலகத்தின் முதலாவது அன்னையர் தினமாக கொள்ளலாம். இந்த எகிப்து தெய்வமானது பின்நாளில் ரோமையரின் சமயத்திலும் கிறிஸ்தவர்களின் பகானிஸிதத்திலும் கூட வணங்கப்படுபவராக இருந்திருக்கிறதாம்.

இந்த எகிப்தி பெண்கள் தெய்வமானது ஐஸிற்கான விழாவை ரோமானியர்களும் கொண்டாடினர். பின்னாளில் ரோமானியர்களின் பிரத்தியோக தெய்வமான ஸீஸஸ் (Zeus) உட்பட பல தெய்வங்களுக்கும் சிரேஷ்ட தாயாக வணங்கப்பட்ட ரெஹா (Rhea) என்ற பெண் தெய்வத்தைக் குறித்து அன்னையர் தினத்தை மூன்று நாட்கள் கொண்டாட்டமாக கொண்டாடி வந்தார் என்று ஐதீகம். இந்தக் கொண்டாட்டம் வருடத்தின் நள்ளிரவில்தான் தொடங்குமாம். இதேபோல் கிரேக்கத்தின் பெண் தெய்வங்களுக்கும் ஆசியாவின் பெண் தெய்வங்களுக்கும் இத்தகைய விழாக்கள் கொண்டாடப்பட்டு வந்திருக்கின்றன. நாகரிக முன்னேற்றமும் மனிதப்பரம்பலின் விரிவும் தெய்வ வழிபாடுகளிலிருந்த இந்தப் பெண் தெய்வங்களுக்கான கொண்டாட்டங்களை வெவ்வேறு பரிமாணங்களில் உருவெடுக்க காரணமாக அமைந்தன எனலாம்.

பின்னாளில் பெண் தெய்வங்களை முன்னிறுத்தி கொண்டாடப்பட்ட அன்னையர் தினம் முதன் முதலாக மானுடத் தாய்மாருக்காக பரிணாமமெடுத்தது ஐரோப்பாவில் என்று தான் சொல்ல வேண்டும். ஈஸ்டர் பெருநாளுக்காக 40 நாட்கள் விரதமிருக்கும் கிறிஸ்தவர்கள் அந்த மாதத்தின் 4 ஆவது ஞாயிற்றுக்கிழமையில் தாம் ஞானஸ்ஞானம் பெற்ற தேவாலயம் (mother church) சென்று வழிபாடுகள் நடத்துவார்களாம். அந்த தேவாலயங்களில் தேவமாதாவுக்கு இவர்களின் பரிசுகளாக சமர்ப்பிக்கப்படும் நகைகளும் மலர்களும் வேறு பல பரிசுப் பொருட்களும் அந்நாட்களில் நிரம்பியிருக்குமாம்.

ஆயிரத்து 600 களில் தான் இந்த உண்மையான அன்னையர் தினத்தை தம்மைப் பெற்றவளுக்காக ஒதுக்கினார்களாம். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வேலையாட்களுக்கு மே மாதத்தின் 4 ஆவது ஞாயிற்றுக்கிமையை தமது தாய்மாருடன் சென்று கழிக்க அனுமதி வழங்கப்படுமாம். தாயை சந்திக்கச் செல்லும் வேலையாட்கள் அவளுக்காக மலர்கள், இனிப்பு வகைகள், கேக் வகைகள் மற்றும் தத்தமது வசதிக்கேற்ப பரிசுப் பொருட்களுடன் சென்று தத்தமது தாய்மாரை சந்திக்கச் செல்வது வழக்கமாக இருந்தது. அப்போது மதரிங் சன்டே (Mothering sunday) என்று அழைக்கப்பட்டதாம்.

அமெரிக்காவுக்கு இடம்பெயர்ந்த ஐரோப்பியர்கள் வாழ்வில் பிரிட்டிஷ் நாட்டில் வழக்கப்படுத்திக் கொண்ட மதரிங் சன்டே பாரம்பரியம் நாளடைவில் மறைந்து போய் சில நூற்றாண்டு காலத்தில் அது மறைந்தே போய்விட்டது எனலாம். ஏனெனில், அமெரிக்காவுக்கு இடம்பெயர்ந்த ஐரோப்பியரின் வாழ்வு அங்கு மிகவும் நெருக்கடியும் நீண்ட நேர உழைப்புக்கு பலவந்தமாக உந்தப்பட்டவர்களாக இருந்ததாலும் அவர்களால் ஐரோப்பாவில் பின்பற்றிய பாரம்பரியங்களை தொடர முடியாமல் போனமையாகும்.

முதன் முதலாக வடஅமெரிக்காவில் 1870 ஆம் ஆண்டில் ஜுலியா வார்ட் ஹோவ் (Julia Ward Howe) என்ற தாயார் அன்னையர் தினத்தைப் பற்றி பிரகடனம் செய்தார். அமெரிக்காவில் நடந்த சிவில் யுத்தத்தில் இறந்தவர்களின் மறைவும் யுத்தம் கொடுத்த பேரழிவும் ஜுலியா வார்ட் அவர்களை மிகவும் பாதித்தது. ஒரு தாயின் மகன் இன்னொரு தாயின் மகனைக் கொல்லும் அடிப்படையிலான யுத்தங்களை எதிர்க்கும் நாளாக அன்னையர் தினத்தை முன்னிறுத்தி யுத்த களத்திலிருக்கும் வீரர்களுக்காக குரல் கொடுக்க அனைத்துலக தாய்மாரையும் ஒன்றிணையச் சொல்லி அழைப்பு விடுத்தார். உலகின் அமைதியையும் தாய்மையையும் பேணும் நாளாக அன்னையர் தினம் உலகளவில் கொண்டாடப்பட வேண்டும் என்று அந்த அம்மையார் விரும்பினார்.

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முன்னிலையானார் ஷிராணி

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க நேற்றுமுன்தினம் மீண்டும் இலஞ்ச ஊழல் மற்றும் மோசடி விசாரணை ஆணைக்குழுவிடம் முன்னிலையானார்.

தவறான முறையில் சொத்துக்கள் சேகரிக்கப்பட்டதாக அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த முறைப்பாடு தொடர்பாக நேரடியாக வாக்குமூலம் அளிக்குமாறு அவருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து அவர் சட்டத்தரணிகள் ஊடாக ஆணைக்குழுவில் முன்னிலையாகி, வாய்மொழியான வாக்குமூலம் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இது தொடர்பான மேலதிக தகவல்களை வழங்குவதற்காக நாளை மீண்டும் ஒரு தடவை அவரை இலஞ்ச மற்றும் மோசடி ஆணைக்குழு எதிரில் முன்னிலையாகும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-2)

## பிரபாகரன் தப்பிச் சென்றாரா?


(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தப்பிச் சென்றுள்ளதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரபாகரனின் கைவிரல் அடையாள சாட்சியங்களின் மூலம் அவர் உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்திய அதிகாரிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கைவிரல் அடையாள மாதிரிகளும் நந்திக்கடல் பகுதியில் இருந்து மீட்கப்பட்ட பிரபாகரனின் சடலத்தின் கைவிரல் அடையாள மாதிரிகளும் ஒத்துப்போவதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி புலிகளின் மூன்று படகுகளை கடற்படையினர் தாக்கி அழித்ததாகவும் அவ்வேளையில் எவரும் தப்பிச் செல்லவில்லை என்றும் கடற்படை பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)





வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் நிலுவைகளுக்குரிய காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆளுநர் பணிமனையில் இடம்பெற்றது. இதன்போது 100 ஆசிரியர்களுக்கு மேற்படி காசோலைகள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆசிரியர் ஒருவரிருக்கு காசோலை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஆசிரியர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்-என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் தினமாக ஜூன் முதலாம் திகதி பிரகடனம்


இலங்கையில் வாக்காளர் தினமாக ஜூன் முதலாம் திகதி பிரகடனப்படுத்தப்படவுள்ளதாகவும் இந்த தினத்தில் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வீதி நாடகங்களையும் கருத்தரங்குகளையும் நடத்த தேர்தல் திணைக்களம் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது எனவும் பிரதித் தேர்தல் ஆணையாளர் (நிர்வாகம்) எம்.எம்.மொஹமட் யாழ்ப்பாணத்தில், வைத்துத் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியல் மீளாய்வு, வாக்காளர் தினம் மற்றும் தேர்தல் நடைமுறைகள் தொடர்பில் விளக்கமளிக்கும் வகையில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று முன்தினம் முற்பகல் யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில் யாழ்.தேர்தல் திணைக்களத்தால் நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் அன்னையர் தினம், சிறுவர்கள், பெண்கள் தினம், முதியோர் தினம் எனப்பல தினங்கள் கொண்டாடப்படுகின்றன. ஆனால், ஒரு நாட்டில் முக்கிய பங்களிக்கும் வாக்காளர்களுக்கென்று இதுவரை ஒரு தினம் இல்லை. இலங்கையின் சனத்தொகையில் 3.2 பகுதியினர் வாக்காளர்களாகவுள்ளனர். இவற்றைக் கருத்தில் எடுத்து வாக்காளர் தினமாக ஜூன் முதலாம் திகதி பிரகடனப்படுத்தவுள்ளது எனத் தெரிவித்தார்.

மேலும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்க யாழ்.மாவட்டத்தில் 4 இலட்சத்து 26ஆயிரத்து 703 பேரும் மன்னார் மாவட்டத்தில் 70 ஆயிரத்து 85 பேரும் வவுனியா மாவட்டத்தில் 69 ஆயிரத்து 702 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 52 ஆயிரத்து 409 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 68 ஆயிரத்து 589 பேரும் வாக்காளர்களாகவுள்ளனர்.

2012ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் பிரகாரமே வாக்காளர்கள் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்கள் எனவும் தேர்தல் திணைக்களத்தில் தற்போது 64 கட்சிகள் பதிவை மேற்கொண்டுள்ளன எனவும் மேலும் கட்சிகள் தேவையா என்பதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.



அத்தோடு, இறுதியாக 2010ஆம் ஆண்டுதான் கட்சிப்பதிவுகளுக்கான கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும் இதன்போது 84 கட்சிகள் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை என்பதால் நிராகரிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# இராணுவத்தை மீளப் பெறமுடியாது

(கொழும்பு)

வெளிநாட்டு சக்திகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் தேவைக்கு அமைய வடக்கில் இருந்து இராணுவத்தை திரும்ப பெறுவதில்லை என அரசாங்கம் இறுதியான முடிவை எடுத்துள்ளது.

வன்னி இராணுவ நடவடிக்கைகளுக்கு நேற்றுடன் 4 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டு அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது. அரசாங்கம் இந்த தீர்மானம் குறித்து மேற்குலக நாடுகளின் தூதுவர்களுக்கு அறிவித்துள்ளது.

மேற்குலக நாடுகளை சேர்ந்த 6 தூதுவர்கள் அடிக்கடி வடபகுதிக்கு சென்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை சந்தித்து இராணுவ முகாம்கள் குறித்து விசாரித்து அறிந்துள்ளனர். இலங்கையின் பாதுகாப்பு தொடர்பில் வெளிநாட்டு தூதுவர்களுடன் இணைக்கத்தை ஏற்படுத்த முடியாது என தெரிவித்துள்ள அரசாங்கம் அவர்களின் கோரிக்கையை நிராகரித்துள்ளது. (அ-2)

# ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பதவியில் இருந்து இறக்க முயற்சி

## வலி.தென்மேற்கு உறுப்பினர்களின் குற்றச்சாட்டுக்கு தவிசாளர் பதில்

ஆதாரமற்ற பல குற்றச்சாட்டுக்களையும் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்து என்னையும் எனது கட்சியினரையும் இழிவுபடுத்தியதோடு பதவியிலிருந்து இறக்க வேண்டுமென்றதற்காகப் பல முயற்சிகளை எடுத்து சபை நடவடிக்கைகளைக் குழப்பி வருகின்றனர் என ஆளுங்கட்சி உறுப்பினரான க.கௌரிகாந்தன் உள்ளிட்டவர்கள் மீது வலி.தென்மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள விளக்க அறிக்கையில்,

கடந்த 3ஆம் திகதி யாழ்.ஊடக அமையத்தில் மானிப்பாய் பிரதேச சபை க.கௌரிகாந்தன் தலைமையில் ச.சிவகுமார், சி.மகேந்திரன் ஆகியோருடன் ஆளுங்கட்சி உறுப்பினர் சிலர் கலந்துகொண்டு பிரதேசபை பற்றியும் தவிசாளரான என்னைப் பற்றியும் எமது கட்சி பற்றியும் பல ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களையும் பொய்யான தகவல்களையும் குறிப்பிட்டு ஊடகவியலாளர்களுக்கு தவறான விளக்கத்தைக் கொடுத்திருந்தார் கள்.

இந்நிலையில், இவ்விடயம் சம்பந்தமான உண்மைத் தன்மையை மக்களுக்குத் தெளிவுபடுத்தும் தேவையும், அதில் என்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மறுக்க வேண்டிய தேவையும் எனக்கு உள்ளது.

என் மீது ஊழல், முறைகேடுகள் என ஆதாரமற்ற பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர். இவற்றை மறுக்கவேண்டிய தேவை எனக்குள்ளது. மாரீசன்கூடல் வீதி அமைக்கப்பட்டபோது அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவித்து வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அந்த வேலைகள் முற்றாகத் தவறானவை என்று பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து வந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் குறிப்பிட்டுள்ளார் என்பது முற்றிலும் பொய்யானது. அத்தோடு, அறிக்கையைத் திரிபடுத்தி ஊடகங்களுக்கும் மக்களுக்கும் வழங்கியுள்ளார்கள்.

வடலியடைப்பு வாய்க்கால் வேலை மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் வாய்க்காலின் ஒரு பக்கத்தில் 3 கம்பிகள் வைக்கப்படாது 2 கம்பிகளே வைக்கப்பட்டுள்ளன. இதனை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியபோது, நான் நேரே அங்கு சென்று அவதானித்து உறுதிப்படுத்தி சபைக்கு இது தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்தேன்.

இவ்வறிக்கையை ஏற்றுக்கொள்ளாது பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடமிருந்து அறிக்கை பெறவேண்டுமென்ற சபையின் ஆலோசனைக்கு அமைய பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருடன் பிரதம தொழில்நுட்ப உத்தியோகத்தரும் சென்று ஆராய்ந்து அறிக்கை வழங்கியிருந்தும் எனது அறிக்கையையும் பொறியியலாளரது அறிக்கையையும் ஏற்றுக்கொள்ளாது மேற்கொள்ளப்பட்ட அனைத்து நிர்மாணங்களையும் முழுமையாக அகற்றி மீண்டும் ஆரம்பத்திலிருந்து மதிப்பீட்டின்படி செய்யவேண்டுமென தெரிவித்துள்ளனர்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அறிக்கையை மீறி நாங்கள் எதையும் நடைமுறைப்படுத்தமுடியாது என பிரதேச சபையின் பிரதம தொழில்நுட்ப உத்தியோகத்தர் அதனைசெயற்படுத்தமறுத்தார். பிரதேச செயலர் இத்திட்டம் உரிய காலத்தில் செய்து முடிக்கப்படாவிட்டால் அதற்குரிய ஒதுக் கீட்டைப் பெறமுடியாது போகுமெனவும் எச்சரிக்கை செய்தமையை சபைக்குத் தெரிவித்தும் இவ் வேலைத்திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதில் இழுபறி நிலையே காணப்படுகின்றது. இதனால் ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்லும் நிலையில் உள்ளது.

தவறான கண்காணிப்பு மேற்கொண்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு, உள்ளூராட்சி ஆணையாளருக்கு அதிகாரமுள்ளது என்பதால் அவர்களுக்குத் தகவலைத் தெரியப்படுத்தவே முடியும். அவ் வேலைத்தலத்தில் பிழை நடந்துள்ளது என்பதற்காக இலஞ்சம், ஊழல் இடம் பெற்றுள்ளது எனவும் அதற்குள் நானே தொடர்புபட்டுள்ளேன் எனவும் எவ்வித ஆதாரமுமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளமையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கட்டட விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்குவதற்கு சபையில் ஒரு குழு தெரிவு செய்யப்பட்டு அதன்மூலம் அனுமதி வழங்கப்பட்டு வந்துள்ளது. மேலும் உறுப்பினர் க.கௌரிகாந்தன் கடந்த 10 வருடங்களுக்குட்பட்ட சட்டரீதியற்ற கட்டடங்களின் விபரங்களைச் சபைக்குத் தர வேண்டும் என்ற பிரேரணையை சபைக்குக் கொண்டு வந்தார். அத்தோடு அவற்றுக்கெதிராக சபை நடவடிக்கை எடுக்கவேண்டு மென சபையைத் தூண்டி சபைக்கெதிராக மக்களையும் திசை திருப்பிவிட்டார்.

இதுதவிர, உறுப்பினர் கௌரிகாந்தன் தன்னைத் தலைவராகக் கொண்ட குழுவே இனிவரும் காலங்களில் கட்டடங்களுக்கு அனுமதி வழங்கவேண்டுமென சபையில் தீர்மானிக்க அதை உள்ளூராட்சி ஆணையாளர் மறுத்து தவிசாளருக்கே இந்த அதிகாரம் உள்ளது. அவரே செய்யவேண்டுமென அறிவித்திருந்தார்.

காசோலையில் கையொப்பமிடுவது தொடர்பாகவும் உறுப்பினர் க.கௌரிகாந்தன் முன்னுக்குப் பின் முரணான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். இதுதவிர தொலைத்தொடர்புக் கோபுரங்களுக்கான அனுமதி என்னால் தன்னிச்சையாக எவருக்கும் தெரியாது வழங்கப்பட்ட தென ஊடகங்களுக்கு பொய்யான தகவல் தெரிவித்து என்னை இழிவுபடுத்தியுள்ளார்.

தொலைத்தொடர்புக் கோபுரத்திற்கு அனுமதி வழங்கும் கட்டடக்குழுவில் உதவித் தவிசாளரும் உறுப்பினர் சி.மகேந்திரமும் உள்ளார்கள். இந்நிலையிலும்கூட என்மீது குற்றஞ்சாட்டப்பட்டமை எனக்குத் தெளிவுறுத்த வேண்டுமென விரும்புகின்றேன்.

அந்த அனுமதி சகல சட்டதிட்டங்களுக்கும் அமைய சபையால் தீர்மானிக்கப்பட்ட கூட்டக்குழுவினால் வழங்கப்பட்டதேயன்றி என்னால் தனித்து வழங்கப்பட்டதல்ல.

மேலும் உறுப்பினர் கௌரிகாந்தன் சபையின் ஆரம்பக்கூட்டத்தில் இருந்து என்னைப் பதவியில் இருந்து இறக்கவேண்டும் என்பதற்காக பல முயற்சிகளை எடுத்து சபை நடவடிக்கைகளை தொடர்ந்து குழப்பி வருகின்றார். எனவே சபையினதும் பொது மக்களினதும் நலன்கருதி இவ் உண்மை நிலை களை வெளிக்கொணர்ந்துள்ளேன் என அவர் மேலும் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-6)

# உயிர்த் தியாகத்துடனேயே கண்ணிவெடி அகற்றப்பட்டது

## *10 இலட்சத்திற்கும் அதிகமான கண்ணிவெடிகள் மீட்கப்பட்டன*



வடக்கில் 72 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பும் கிழக்கில் 21 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பும் வடமத்திய மாகாணத்தில் 3 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்புகளுமே கண்ணிவெடிகள் அகற்றும் பிரதேசங்களாக எஞ்சியுள்ளன. யுத்தத்திற்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடி அகழ்வு நடவடிக்கையின் மூலம் இதுவரை வடக்கில் ஆயிரத்து 345 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பிலிருந்தும் கிழக்கில் 623 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பிலிருந்தும் கண்ணிவெடிகள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன என இராணுவ பேச்சாளர் நிரோஷன் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

இதுவரை காலம் மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கைகளின் போது சுமார் 10 இலட்சத்துக்கும் அதிகமான கண்ணிவெடிகள், மிதிவெடிகள், யுத்த தாங்கி அழிப்பு வெடிகள் மற்றும் பல்வேறு வகையான வெடிபொருட்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையின் போது உயிரிழப்பு சம்பவங்கள் பல இடம் பெற்றுள்ளதாக தெரிவித்த அவர், இதற்கமைய 2ஆயிரத்து 64 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கைகளின் போது ஒரு இராணுவ வீரர் உயிரிழந்துள்ளதுடன் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தக் கண்ணிவெடி அகழ்வு நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்துடன் ஐ.நா.மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பல நிதியுதவிகளை வழங்கி வருகின்றன.

இராணுவத்துடன் இணைந்து பல தொண்டர் அமைப்புகள் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன எனவும் குறிப்பிட்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தர் காட்டிய வழி



ஆன்மீகம் 08

அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

..."ராஜா! இது கடினமான பணி தான்! சிற்றுளி, ஒருபெரும் பாறையை அழகிய சிற்பமாக வடித்து விடுவ தில்லையா! இனி நீ பாறைகளைத் தேடு! தர்மத்திற்கு உகந்த பாறை களில் சிற்றுளியாய் செதுக்கத் துவங்கு, சிலைகள் உருவாகும். நீயும் பெரிய சிற்பி ஆவாய், என்று கூறி விட்டு எழுந்து குடிலின் பின்பக்கத் தில், ஒரு ஆலமரத்தின் அடியில் இருந்த ஐயனார் கோயிலின் அருகே சென்று, அங்கு கிடந்த ஒரு மரக் கட்டையின் மீது அமர்ந்தார்! நானும் உடன் சென்று அவர் காலடியில் அமர்ந்தேன். சாமிகள் கஞ்சாவை பற்ற வைத்தார்... என் மனதில் எழுந்த கேள்விகளும் பற்றிக்கொண்டன, "சாமி நீங்க சொன்ன மாதிரி தர்ம நெறியிலே இருந்த இந்தநாடு, இன்னைக்கு, ஏன்! அதை மறந்து கிடக்கிறது." என்றேன். எல்லாம் கால வித்தியாசம்தான். மனிதன் இன்று மனிதனாகவே இல்லை. ராமலிங்க வள்ளலார் வாழ்ந்திருந்த போது ஒருநாள் தனிமை நாடி ஊருக்கு வெளியே ஒரிடத்தில் அமர்ந்திருந்தாராம். அப்போது அங்கு மனநிலை சரியில்லாதவர்போல் தோற்றமளித்த வயோதிபர், அந்த பகல் நேரத்தில், கையில் அரிக்கன் விளக்குடன் சாலையில் செல்லும் ஒவ்வொரு மனிதனாக, அந்த விளக்கு வெளிச்சத்தில் முகத்தைப் பார்த்து விட்டு "சே இது நரி, இது ஆடு, இது மாடு, இது புலி, இது நல்ல பாம்பு, கட்டுவிரியன்" என்று பலவாறு கூறிக் கொண்டே வந்தாராம். கடைசியில் தனியே அமர்ந்த வள்ளலாரிடம் சென்று அவர் முகத்தருகே, விளக்கைத் தூக்கிப் பார்த்துவிட்டு மகிழ்ச்சி மேலிட்டதால்: "ஆஹா! நான் மனிதனை பார்த்துவிட்டேன்!" என்று கூறியவாறு ஓடினாராம். அப்படி



ஓடியவர், ஒருசித்தர். மனிதர்களைத் தேடி அலைந்தவர். இறுதியாக வள்ளலாரை மட்டும்தான் மனிதனாக பார்த்தார் என்றால், நாட்டில் வாழும் அனைத்து ஜீவராசிகளும் மனித ரூபங்கள் அல்ல என்று தானே பொருள்!" என்று கூறிவிட்டு என் முகத்தைப் பார்த்தார். அப்போதும் சரியாக விளங்கவில்லை. இருட்டில் இருப்பவனைப்போல் நான் இருப்பதை உணர்ந்த அந்த மகான், "ராஜா, நமது பழங்கால சாத்திரங்கள், மன்னர்களை மகாவிஷ்ணு அம்சமாக குறிப்பிடுகின் றன. அதனால்தான் அரசனை "கோ" என்றும், அவன் வாழும் அரன் மனையை, கோயில் என்றும் அழைப் பர். அதனால்தான் ஆண்டவன் ஆலயத்தையும் கோயில் என்று அழைக்கிறோம். இந்துமதம், மனிதனுக்கு, ஏழு பிறப்புக்கள் உண்டு எனச் சொல்கிறது! இறை வனே பல பிறப்புகள் எடுத்திருக்கின்றான்! அவன் மிருகப்பிறவிகள் எடுத்தபோது அந்த மிரு கங்களைப் போலவே, வாழ்ந்து இருக்கிறான். மனிதப் பிறப்பின்போது அந்த மனிதர்களைப்போலவே வாழந்து மறைந்திருக்கின்றான். "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி வழுவாதிருக்க வரம் தரவேண் டும்" என்று அப்பர் சுவாமிகளும், மாணிக்கவாசகரும் பாடவில்லையா, "புல்லாகிப் பூண்டாகி புழுவாய் மரமாகி" என்றெல்லாம் பாடி இருக் கிறார்கள். நன்மையும், தீமையும் இரட்டைப் பிள்ளைகள். இருளும் ஒளியும் இரட்டையர்கள். இலட்சுமி யும் மூதேவியும் உடன்பிறப்புகள். அதைப்போலவே தேவர்களும் அசுரர் களும், ஒரு தந்தைக்கு, வெவ்வேறு தாய்க்கு பிறந்தவர்கள். அதாவது அதிதிக்கு தேவர்களும், சுரை என்ப வளுக்கு அசுரர்களும் பிறந்தனர், தேவர்கள் நல்லவர்கள், அசுரர்கள் மூர்க்கமுடையவர்கள்.

(தொடரும்)

# இந்தியாவின் கூட்டணி அரசின், அமைச்சர்களின் ராஜினாமா படலங்கள்

பிரதமர் மன்மோகன்சிங் தலைமை யிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அர சின் இரண்டாவது இன்னிங்ஸ் அமைச்சர் களின் ராஜினாமா படலங்கள், நீக்கும் படல ங்களில் சிக்கிக் கொண்டிருக்கிறது.

மிஸ்டர் க்ளீன் என்ற இமேஜ் இருந்ததால் 2009 நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு மிகப்பெரும் வெற்றியைப் பெற்றுத் தர முடிந்தது. இந்த வெற்றியை மீண்டும் காங்கிரஸ் கட்சி பெற்றுவிடக்கூடாது என்ற பின்னணியில் நடைபெறும் இந்த ராஜி னாமா படலங்கள் இந்திய அரசியலை கலக் கிக்கொண்டிருக்கிறது. பிரதமரின் வீட்டிற்கே பேரணியாகச் சென்று நீங்கள் ராஜினாமா செய்யுங்கள் என்று கூறும் அளவிற்கு அடுத்து ஆட்சிக்கு வரமுயற்சி செய்யும் பாரதீய ஜனதா கட்சி போராட்டத்தை உசுப்பி விட்டிருக்கிறது.

ஐக்கிய முற்போக்குக்கூட்டணி அரசின் இரண்டாவது இன்னிங்ஸ் பிரதமர் மன்மோ கன்சிங் நம்பிக்கையுடனும் நல்ல மெஜாரி ட்டியுடனும் தொடங்கினார். ஏனென்றால் 1996 இல் இந்திய நாடாளுமன்ற தேர்தலுக் குப் பிறகு முதன் முதலாக 2009 நாடாளு மன்ற தேர்தலில்தான் காங்கிரஸ் கட்சி 200 இற்கும் மேற்பட்ட எம்.பி.க்களை பெற்று இருக் கின்ற கட்சிகளுக்குள் தனிப்பெருங்கட்சி யாக திகழ்ந்தது. அதேபோல் திராவிட முன் னேற்றக்கழகம், மேற்கு வங்க மாநிலத்திலுள்ள திரிணாமூல் காங்கிரஸ், மஹாரா ஷ்டிரா மாநிலத்தில் உள்ள தேசிய வாதகாங்கிரஸ் கட்சி ஆகிய மூன்று கட்சிகளும் உற்றதுணை யாக நின்றன. இவர்கள் தவிர உத்தரபிர தேச மாநிலத்தைச்சேர்ந்த மாயாவதி, முலாயம் சிங்யாதவ் இருவருமே போட்டி போட்டுக் கொண்டு பிரதமர் மன்மோகன் சிங்கை ஆதரித்தார்கள். இதனால் ஐக்கிய முற்போக் குக் கூட்டணிக்கு எந்தச் சிக்கலும் இல்லை என்ற நிலைதான் மேலோங்கியிருந்தது.

இதற்கு முதல் சிக்கல் காங்கிரஸ் வடிவி லேயே வந்தது. வெளியுறவுத்துறை இணை அமைச்சராக இருந்த சசிதரூரின் மனைவி க்கு ஐ.பி.எல். கிரிக்கெட்டீமை வைத்திருக்கும் ஒரு கம்பெனியில் பங்குகள் இருக்கின்றன என்ற புகார் வெடித்தது. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளை நடத்திய கமிஷனர் லலித்மோடி மீதான புகார்கள் எழுந்தபோது இந்த புகாரும் சேர்ந்தே வந்தது. அதனால் சசிதரூர் தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். இதுதான் ஐக்கிய முற்போக்குக்கூட்டணி அரசின் இரண்டாவது இன்னிங்ஸில் நிகழ்ந்த முதல் ராஜினாமா. அடுத்து, தி.மு.க. வடிவில் திருகுவலி வந்தது. அக்கட்சியைச் சேர்ந்த அ.ராஜா, கம்யூனிக்கேசன் மற்றும் இன்பர்மே ஷன் துறைக்கு மத்திய அமைச்சராக இருந்தார். அவருக்கு எதிராக இந்திய கணக்காயம் 1.76 லட்சம் கோடி ரூபாய் நஷ்ட அறிக்கை ஒன்றைக் கொடுக்க 2-ஜி அலைக்கற்றை விவகாரம் விஸ்வரூபம் எடுத்தது. இதனால் நாடாளு மன்றம் முடங்க, சி.பி.ஐ. விசாரிக்க ஒருவழியாக ராஜா அப்பதவியிலிருந்து ராஜினாமா செய் தார். இது இரண்டாவது ராஜினாமா. அடுத்து பலியானதும் தி.மு.க. மத்திய அமைச்சர்தான். அவர் டெக்ஸ்டைல் துறை அமைச்சராக இருந்த தயாநிதிமாறன். ஏர்செல்- மாக்ஸி கம்பெனி டீலிங் விவகாரத்தில் தனது அமைச்சர் பதவியை தவறாக பயன்படுத்தினார் என்று சி.பி.ஐ. வழக்கு பதிவு செய்து விசாரிக்கத் தொடங்கியதும் தயாநிதி மாறனும் ராஜினாமா செய்தார். இது மூன்றாவது ராஜினாமா! இந்த இரு ராஜினாமாக் களும் கனிமொழி கைதும் தி.மு.க.விற்கும் காங்கிரஸுக்கும் இடையே உள்ள இடைவெளியை பெரிதுபடுத்தியது. இறுதியில் இலங்கை பிரச்சி னையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கவுன்சிலில் இந்தியாவின் நிலைப் பாட்டை கண்டித்து ஐக்கிய முற்போக்கு கூட்டணி யிலிருந்து விலகியது தி.மு.க.

இது ஒருபுறமிருக்க இன்னொரு கூட்ட ணிக்கட்சியான திரிணாமூல் காங்கிரஸும் ராஜினாமா படலத்தை தொடக்கியது. இதுவேறு வகையில் மத்திய ரயில்வேத்துறை அமைச் சராக இருந்தார் மம்தா பானர்ஜி. ஒருகட்டத் தில் அவர் மேற்குவங்க சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றார். அவரது கட்சி அங்கே ஆட்சி அமைத்தது. அதனால் தன் பதவியை ராஜி னாமா செய்துவிட்டு மேற்கு வங்க முதலமைச் சரானார் மம்தா பானர்ஜி. அவருக்குப் பதிலாக அவர் கட்சியைச் சேர்ந்த தினேஷ் திரிவெதி ரயில்வே அமைச்சரானார். மம்தாவை கலந்து ஆலோசிக்காமல் ரயில்வே பட்ஜெட் தயாரித் தார் என்ற குற்றச்சாட்டில் அவரை நீக்க வேண் டும் என்று மம்தா போர்க்கொடி தூக்கினார். அதனால் திரிவேதிபோய், முகுல்ராய் ரயில்வே அமைச்சரானார். இவரும் மம்தாவின் கட்சி யைச் சேர்ந்தவரே. ஆனால், சில்லரை வணிக த்தில் அந்நிய முதலீட்டை அனுமதிக்கும் மத்திய அரசின் முடிவை எதிர்த்து பிரதமர் மன்மோ கன்சிங்கிற்கு அளிக்கும் ஆதரவை வாபஸ் பெற்றார் மம்தா பானர்ஜி. அதனால் ரயில்வே அமைச்சராக இருந்த முகுல்ராய் பதவி விலகி னார். தி.மு.க விலகுவதற்கு முன்பே மம்தா பானர்ஜி ஐக்கிய முற்போக்குக்கூட்டணியை விட்டு வெளியேறிவிட்டார். ஆகவே ஒருகட்டத் தில் ஐக்கிய முற்போக்குக்கூட்டணி தி.மு.க.வும் இல்லை. மம்தாபானர்ஜியும் இல்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டது.

அதைவிட முக்கியமாக காங்கிரஸ் கட்சி யின் அமைச்சர்களே ஊழல் புகார்களில் சிக்கிக்கொள்வது அதற்கு பதில் சொல்லமுடி யாமல் பிரதமர் மன்மோகன்சிங்கும் காங் கிரஸ் தலைவி சோனியாகாந்தியும் முழிப்ப தும் காங்கிரஸ் கட்சியின் எதிர்காலத்திற்கு சவாலாக அமைந்துவிட்டன. சசிதரூர் முதலில் ராஜினாமா செய்த பிறகு பல அமைச்சர்கள் இதுபோன்ற சிக்கலில் மாட்டிக்கொண்டார்கள். வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்தார் எஸ்.எம்.கிருஷ்ணா. அவருடைய கர்நாடக மாநிலத்தில் முதலமைச்சராக இருந்தபோது எழுந்த நிலக்கரிச்சுரங்க புகாரில் அங்குள்ள லோக் அயுக்தாநீதிமன்றம் அறிக்கை கொடுத் தது. அதேபோல் இங்கிலாந்தில் நடைபெற்ற விம்பிள்டன் டென்னிஸ் போட்டியைப் பார்க் கச் சென்றார் என்ற சர்ச்சையும் வெடித்தது. இதுபோன்ற சூழ்நிலையில அவரை அமைச் சராக வைத்திருக்கமுடியாமல் போனது. எனவே, எஸ்.எம். கிருஷ்ணாவே தன்பதவியை ராஜி னாமா செய்தார். அதுவும் யூ.பி.ஏ- டூவின் மிகப் பெரிய அமைச்சரவை விரிவாக்கத்திற்கு முன்பு தன்பதவியை ராஜினாமா செய்தார். இதன்பிறகு நிலக்கரி ஒதுக்கீடு முறைகேடு இந்திய கணக்காயத்தின் அறிக்கையால் வெளிச்சத்திற்கு வந்தது. அதுவும் 1.86 லட்சம் கோடி நஷ்ட அறிக்கை. இன்னும் சொல்லப் போனால் 2-ஜிஅலைக்கற்றை விவகார த்தைவிட பெரிய நஷ்டம்.

நிலக்கரி ஒதுக்கீடு முறைகேடு விவகாரம் வெளிச்சத்திற்கு வந்தபோது சுற்றுலாத்துறை அமைச்சராக இருந்த சுபோத் காந்த் சகாய் சிக்கினார். அவருக்கு வேண்டிய ஒரு கம்பெனி க்கு நிலக்கிரி சுரங்கம் ஒதுக்கீடு செய்ய பிரத மர் மன்மோகன்சிங்கிற்கு கடிதம் எழுதினார். என்ற சர்ச்சை வெடித்தது. அதனால் அவரும் தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். அடுத்து நடைபெற்ற அமைச்சரவை விரிவாக்கத்தில் அவர் கழற்றி விடப்பட்டார். ஆனால், இதேபிரச்சினையில் புகார் சுமத்தப் பட்ட நிலக்கரித்துறை அமைச்சர் ஸ்ரீபிரகாஷ் ஜெய்வால் இன்னும் அதே பதவியில்தான் தொடருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ஏனென்றால் அதற்கு நிலக்கரி சுரங்கங்கள்



ஒதுக்கீடு நடைபெற்றது பெரும்பாலும் பிரத மர் மன்மோகன்சிங் நிலக்கரித்துறை அமைச் சர் பொறுப்பையும் வகித்த காலத்தில் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

எம்.காசிநாதன்

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிறுவர் அரங்கம்

460

## ஜெயஸ்தம்பம்



உஜ்ஜயின், அவந்தி இரண்டும் அடுத்தடுத்த ராஜ்ஜியங்கள். ஆயினும், அவை நீண்ட காலமாக ஒன்றோடு ஒன்று பகமை பாராட்டி வந்தன.இந்த நிலையில் அவந்தி நாட்டு மன்னர் இறந்துபோக , அவர் மகன் அபிஷேக் ஆட்சி பீடத்தில் அமர்ந்தான்.


அபிஷேக் இயற்கையிலே மிகவும் நல்லவன். தன் குடிமக்களை உயிரினும் மேலாக நேசித்தான். அவர்களுக்காகக் கணக்கற்ற நல்வாழ்வுத் திட்டங்களை அமைத்து, மக்களின் வாழ்வை வளம் பெறச் செய்தான். மக்களும் அபிஷேக்கை தெய்வமாக மதித்தனர். தன் முன்னோர்கள் காலந்தொட்டு உஜ்ஜயினுடன் நிலவி வந்த பகமையை அகற்ற விரும்பிய அபிஷேக் , உஜ்ஜயின் மன்னன் ஜெய்சிங்குக்கு நட்புக்கரம் நீட்டி கடிதம் அனுப்பினான். ஆனால், ஜெய்சிங் அதை ஏற்காமல், அபிஷேக் உடன் போர் தொடுக்க முடிவு செய்தான். அரசியல் அனுபவமற்ற அபிஷேக்கை எளிதாக முறியடித்து விடலாம் என்ற நம்பிக்கையே அதற்குக் காரணம்.

ஆனால், அபிஷேக் போரை விரும்பவில்லை. போரின் பெயரில் தன் வீரர்கள் இரத்தம் சிந்துவதை அவன் விரும்பவில்லை. அதைத் தன் கடிதத்தின் மூலம் அபிஷேக், ஜெய்சிங்கிற்கு தெரியப்படுத்தினான். ஆனால், அவந்தியைக் காப்பாற்ற ஆசை கொண்ட ஜெய்சிங் தன் நோக்கத்திலேயே குறியாக இருந்தான்.

இந்த நிலையில் அபிஷேக்கின் பிரதம சேனாதிபதி மிக மோசமாக நோய்வாய்ப்பட, இது தான் சரியான தருணம் என்று எண்ணி, உடனே ஜெய்சிங் அவந்தி கோட்டையை சூழ்ந்து கொண்டு தாக்குதலைத் தொடர்ங்கினான். அபிஷேக் தன் வீரர்களுடன் பகைவர்களை எதிர் கொண்டு போரிட்டான். என்னதான் வீரத்துடன் போரிட்டபோதிலும், அபிஷேக்கின் சிறிய படை எதிரிகளின் படை பலத்தை தாங்க முடியாமல் போரில் தோல்வியை தழுவியது. அபிஷேக் சிறைப்பிடிக்கப் பட்டான். அவந்தி,உஜ்ஜயினின் ஆதிக்கத்தில் கீழ் வந்தது.

போரில் வெற்றி பெற்ற ஜெய்சிங் தன் வெற்றியைக் கொண்டாட, அவந்தியின் தலைநகரில் ஒரு ஜெயஞ்தம்பத்தை நாட்டி, அதில் தன் மகத்தான வெற்றயை எழுத்துக்களில் பொறிக்க விரும்பினான்.

உடனே, அவந்தி நாட்டு சிற்பிகளை அழைத்து, ஜெயஸ்தம்பம் எழும்பு பணியில் ஈடுபடுத்தினான். ஒரு



மாதத்தில் அதை முடிக்கும்படி உத்தரவிட்டு, வேலையை மேற்பார்வையிட தன்னுடைய நாட்டு அதிகாரிகளை நியமனம் செய்தான்.

சில நாட்கள் கழிந்தன. ஜெயஸ்தம்ப கட்டுமானப் பணியை மேற்பார்வையிட்டு வந்த அதிகாரிகள் ஜெய்சிங்கிடம் வந்து, "மன்னா சிற்பிகள் மிக மெதுவாக வேலை செய்கின்றனர். இந்த நிலையில், வேலை ஒரு மாதத்தில் நிறைவு பெறாது" எனறு புகார் செய்தனர்.

உடனே ஜெய்சிங், "அவர்கள் கூலியை இரண்டு மடங்காக ஆக்குங்கள். அதன் பிறகுவிரைவாக வேலை செய்வார்கள்" என்று கட்டளையிட்டான்.

மீண்டும் ஒரு வாரங் கழித்து அதிகாரிகளை சந்தித்த ஜெய்சிங், "என்ன தகவல் இப்போது? தொழிலாளர்கள் விரைவாக வேலை செய்கின்றனரா?" என்றான்.

அதற்கு அவர்கள் "இல்லை, மன்னா! கூலியை இரட்டிப்பாக்கியும் பலனில்லை. அவர்கள் இன்னமும் மெதுவாகத்தான் வேலை செய்கின்றனர்" என்றான்.

அது கேட்டு பயங்கர கோபமுற்ற ஜெய்சிங், சிற்பத் தொழிலாளர்களின் தலைவனை உடனடியாகத் தன்னிடம் அழைத்து வரச்சொன்னான். உடனே, தலைமைச் சிற்பி கோண்டா தோரா ஜெய்சிங் முன் அழைத்து வரப்பட்டான்.

அவனைப் பார்த்து ஜெய்சிங், "என்னப்பா? உங்கள் கூலியை இரட்டிப்பாக்கியும் நீங்கள் வேண்டும் மென்றே மெதுவாக வேலை செய்கிறீர்களாமே! உங்களுக்கு என்னதான் வேண்டும்?" என்று கேட்டான்.

அதற்கு கோண்டா தோரா, "ராஜா! நாங்கள் எங்கள் மன்னர் அபிஷேக்கை உயிருக்குயிராக நேசிக்கிறோம். அவர் சிறையில் வாடும்போது, எங்களால் எப்படி மனம் லயித்து வேலை செய்ய முடியும். எங்களால் வேலை செய்யவே முடியவில்லை" என்றான்.

அதைக் கேட்டு மேலும் சினமுற்ற ஜெய்சிங், "வாயை மூடு! இன்னும் ஒரு வாரத்தில் வேலை முடியாவிட்டால், உங்கள் அனைவரையும் தூக்கிலிடுவேன், ஜாக்கிரதை" என்று சீறினான்.

அப்படியும் ஒரு வாரத்திற்குள் ஜெயஸ்தம்பம் கட்டுமான வேலை முடியவில்லை. ஜெய்ஸிங்கின் கோபம் அளவு கடந்தது. அவர்கள் அனைவரையும் தன்முன் இழுத்துவர உத்தரவிட எண்ணுகையில் அந்த சிற்பிகளே கூட்டமாக தேடிவந்தனர்.

"மன்னா! உங்கள் கட்டளையின் படி, ஜெயஸ்தம்ப வேலையை முடிக்க எங்களால் முடியவில்லை. ஆகவே, எங்கள் அனைவருக்கும் தண்டனை விதியுங்கள். எங்களைத் தூக்கிலிடுங்கள்" என்றனர்.

அவர்களின் ராஜபக்தியைக் கண்டு திகைத்துப் போனான் ஜெய்சிங்.

"அட, பைத்தியங்களா! உங்கள் உயிரைவிடவாஉங்கள் மன்னவன்



உசத்தி?" என்றான் வியப்புடன்!

"ஆம். அரசே! எங்கள் மன்னனை உயிருக்கும் மேலாக நேசிக்கிறோம். அவரில்லாத இந்த நாட்டில் மானம் கெட்டு நீங்கள் இட்ட வேலையை செய்வதை விட, உயிரை விடுவதே மேல்!" என்றனர் அனைவரும்.


"அப்படி என்னதான் அவன் உங்களுக்காக செய்து கிழித்து இருக்கிறான்? என்னமோ அவனை வானளாவ உயர்த்திப் பேசுகிறீர்களே!"என்றான் ஜெய்சிங்.

"ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல! அவர் இதுவரை எங்களுக்கு செய்துள்ள நன்மைகள் வார்த்தைகளில் வடிக்க முடியாது. நாங்கள் சிரித்தால், அவர் மனம் மகிழ்வார். நாங்கள் கண்ணீர் வடித்தால், அவர் இதயத்தில் இரத்தம் வடியும். அவர் ஒரு தெய்வம்! அந்த தெய்வத்திற்காக எதையும் செய்வோம்!" என்றனர்.

அவர்களுடைய உணர்சிப் பெருக்கை கண்டு நெகிழ்ந்து போன ஜெய்சிங் "நான் தான் தவறு செய்துவிட்டேன். உங்கள் மன்னர் உண்மையிலேயே ஒரு தெய்வப் பிறவியாகத் தான் இருக்க வேண்டும். அத்தகைய நால்வரை சிறையில் அடைத்தது மிகப்பெரிய தவறு. இன்றே விடுதலை செய்கிறேன். அத்துடன் அவந்தி ராஜ்யத்தை அவருடமே ஒப்படைக்கிறேன்." என்று கூறியவாறு ஜெய்சிங் சபையை விட்டு சென்றான். மறுநாளே,அந் நாட்டு படைகளும் திரும்பிச் சென்றன. அபிஷேக் விடுதலையாகி, மீண்டும் அவந்தி சிம்மாசனத்தில் அமர்ந்தான்.

ஒரு சில நாட்களில் அபிஷேக்கிடம் இருந்து , ஜெய்சிங்குக்கு ஒரு கடிதம் வந்தது. அதில்"பிரிய நண்பரே! உங்கள் கட்டளையை மதித்து,என் சிற்பிகள் நான்கே நாட்களில் ஜெயஸ்தம்ப வேலையை முடித்து விட்டனர். கடைசியாக மிகவும் பெருந்தன்மையுடன் நீங்கள் நடந்து கொண்டதற்காக, இந்த ஜெயஸ்தம்பம் உங்கள் திருக்கரங்களினால் திறந்து வைக்கப்பட வேண்டும் என்ற என் குடிமக்களின் ஏகாபித்த விருப்பத்தின் பேரில் உங்களை அழைக்கிறேன்" என்று எழுதப்பட்டிருந்தது.


வரவேற்பிதழை ஏற்று, அவந்திக்கு வந்த ஜெய்சிங் ஜெயஸ்தம்பத்தைத் திறந்து வைத்த பின் "அன்புள்ள அபிஷேக் மற்றும் அவந்தி நாட்டு மக்களே! இந்த ஜெயஸ்தம்பம் என் வெற்றியைக் குறிக்கும் சின்னமாக நான் கருதவில்லை. ஏனெனில், நான் வெற்றி பெறவில்லை. உண்மையில் வெற்றி பெற்றது நீங்கள்தான்! உங்கள் மன்னனுக்கு நீங்கள் காட்டிய அன்பினால் என்னை வென்றுவிட்



டீர்கள். இந்த வெற்றியை உங்களுக்குக் காணிக்கையாக்குகிறேன்" என்று கூறவும் பலத்த கரகோஷம் எழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்



**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

**பஞ்சம ஸ்தானம் வரும் குருவால் பாக்கியம் அனைத்தும் வந்தடையும்** 70/100

**அன்பு நண்பர்கள் அதிகம் பெற்றிருக்கும் கும்ப இராசிய நேயர்களே!**

நீங்கள்எதிர்பார்த்துக் காத்திருந்த குருப் பெயர்ச்சி இப்பொழுது வந்துவிட்டது. இனி உங்களுக்குக் கவலையில்லை. கடந்த ஓராண்டில் அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கத்தில் சிக்கி ,நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்யமுடியவில்லையே என்று கவலைப் பட்ட உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி குதூகலம் தரும் பெயர்ச்சியாக அமையப்போகிறது.

குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியின் மீது பதிகிறது. அதுவும் தனலாபாதிபதியாக விளங்கும் குரு பார்ப்பதால் பொருளாதார நிலை உயரும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். பட்ட கடன்கள் தீரும். பாசம் செலுத்தாமல் விலகிச் சென்றவர்கள் பணம் வந்தவுடன் தானாக வந்து இணைவர்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உள்ளம் மகிழும் விதம் உயர்வு கிட்டும். சம்பள உயர்வு பெற்று சந்தோஷம் காண்பர். சிந்தனை தெளிவாகும். சேமிப்பு கூடும். வாக்கு வலிமை கூடும். திட்டமிட்ட காரியங்களைத் திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள்.

மனச் சுமை குறையும். பணச்சுமை கூடும். கடன் சுமை குறைந்தது என்று சொல்லிக் கடகடவென்று காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். இடமாற்றம், ஊர் மாற்றங்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். கடமையைக் கண்ணும் கருத்துமாகச் செய்து காசினியில் புகழ் ஏணியின் உச்சிக்குச் செல்லப் போகிறீர்கள். இத்தனை நல்ல பலன்களையும் கொடுக்கும் குரு உங்களைப் பார்க்கும் முன்பு நீங்கள் அதைப் பார்க்கச் செல்ல வேண்டாமா? எனவே, நீங்கள் அருகில் உள்ள சிவாலயத்திற்குச்சென்று அங்குள்ள திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபாடு

அறிந்து வைத்திருப்பீர்கள். சொந்த காரியங்களை விட்டுவிட்டு அடுத்தவர் காரியங்களில் அதிக அக்கறை எடுத்துக்கொள்வீர்கள். உங்கள் இராசிக்கு சப்தமாதிபதியாக சூரியன் அமைவதால் திருமணம் நடைபெறும் சமயத்தில் நல்ல தாரத்தைத் தேர்ந்தெடுப்பதன் மூலமே இல்லறத்தை இனிமையானதாக ஆக்கிக் கொள்ள முடியும்.

உள்ளதைக்கொண்டு நல்லதைச் செய்வோம் என்று சொல்வீர்கள். மற்றவர்களின் பார்வைக்கு ஆடம்பரமாகக் காட்சியளிப்பது உங்களுக்குப் பிடிக்காது. இராசிநாதன் சனியை மந்தன் என்று அழைப்பது வழக்கம். எனவே, எதிலும் நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதியைத் தேடிக் கொள்வீர்கள். இப்படிப்பட்ட குணாதிசயங்களைப்பெற்ற உங்களுக்கு இந்தக் குருப்பெயர்ச்சி எப்படி அமையப்போகிறது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**ஐந்தினில் குருதான் வந்தால் அனைத்திலும் வெற்றி கிட்டும்! பைதனில் பணமும் சேரும்! பாராளும் யோகம் வாய்க்கும்! வையகம் போற்றும் வண்ணம் வாழ்க்கையும் அமையும் உண்மை! செய்தொழில் வளர்ச்சியாகும்! செல்வாக்கும் அதிகரிக்கும் என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.**


அந்த அடிப்படையில் பார்த்தால் ஐந்தாம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு உங்களுக்கு அனைத்து வழிகளிலும் வெற்றியைக் கொடுக்கப் போகிறார். அடிப்படைவசதிகளைப்பெருக்கிக் கொள்வீர்கள். கொடுக்கல்– வாங்கல்கள் சீராகும். கொற்றவர்களும் மற்றவர்களும் போற்றும் விதத்தில் வாழ்க்கை அமையும்.

தந்தைவழி உறவில் இருந்த விரிசல்கள் அகலும். பங்காளிப் பகை மாறும். பகல் இரவாகப் பாடுபட்டதற்கு ஏற்றபலன்கிடைக்கும். தகராறு செய்தவர்கள் தானாக வந்திணைவர். வணிகம் செய்பவர்களுக்கு வங்கிச் சேமிப்புகள் பெருகும். கணிசமான தொகை கைகளில் புரளும் விதத்தில் இந்த குருப் பெயர்ச்சி அமையப்போகிறது.

**வெற்றிகளைக் குவிக்கும் வியாழனின் பார்வை!**

இராசியைக் குருதான் பார்த்தால் இனியதோர் வாழ்க்கை சேரும்! ஒன்பதைக் குருதான் பார்த்தால் உன்னத நிலைதான் வாய்க்கும்! பதினொன்றைக் குருதான் பார்த்தால் பணத்தேவைகள்

## கும்பம்



குடும்பசுமை கூடும். அத்தனை உறவுகளிலும் இருந்து வந்த பிரச்சினைகள் அகலும். பகை விலகி பாசம் கூடும்.

குருவின் அருட்பார்வையால் தேடி வந்த சிக்கல்கள் எல்லாம் விலகும். கோடி கோடியாய் பணம் குவிக்க வாய்ப்புகள் வாயில்க் கதவைத் தட்டும். ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும். இனி தினம் தினம் திருவிழா! என்று சொல்லும் அளவிற்கு சுப நிகழ்ச்சிகள் அலைமோதப் போகின்றன.

குருவின் பார்வை பலம் ஒன்பதாமிடத்தில் பதிவதால் மண்ணைத் தொட்டாலும் பொன்னாகும் நேரமிது. என்ன நினைத்தாலும் அதைச் செய்ய இனி நண்பர்கள் ஒத்துழைப்புச் செய்வர். கூட்டு முயற்சிகளை விட்டு இனி தனி முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு அரசு வழிச் சலுகைகள் அனைத்தும் கிடைக்கப்போகிறது.

குருவின் பார்வை லாப ஸ்தானத்தில் பதிவது மிகுந்த யோகம் தான். எதிர்பார்த்ததைக் காட்டிலும் லாபம் தொழிலில் இருமடங்காக வந்து சேரும். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து பழைய தொழிலை தொடர்ந்து நடத்த ஒத்துழைப்புக் கொடுப்பர். கிளைத் தொழில்களும் வேறு வேறு துறைகளில் தொடங்குவீர்கள்.

பூர்வீக சொத்துக்களை விற்று புதிய சொத்துக்கள் வாங்குவீர்கள். ஆர்வத்தோடு கட்டடப் பணியைத் தொடருவீர்கள். பவுர்ணமி நாளில் கிரிவலம் வருவதன் மூலமும் பிரதோஷ நாளில் நந்தி வழிபாட்டை நீங்கள் மேற்கொள்வதன் மூலமும் அபூர்வ பலன்களை அதிகம் பெற முடியும் நல்லவர்களின் சிநேகத்தால் பல சுபகாரியங்கள் நடைபெறும். அந்நிய தேசத்திலிருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ளுங்கள். பொன்னும் பொருளும் போற்றுகிற செல்வாக்கும் இன்னும் அதிரிக்க இந்த குருவின் பார்வை பலம் உங்களுக்கு கொடுக்கப்போகிறது.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலங்கள்!**

மிதுனத்தில் சஞ்சரிக்கும் குரு 13.11.2013 முதல் 12.03.2014 வரை வக்ர கதியில் இயங்குகிறார். இந்த வக்ரம் அவ்வளவு நல்லதல்ல. எனவே, எதிலும் கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டிய நேரமாக அமைகிறது. கொடுக்கல்– வாங்கல்களில் ஏமாற்றத்தைச் சந்திக்க நேரிடும். அடுத்தடுத்து விரயங்கள் வந்து ஆட்கொள்ளும். அருகில் இருப்பவர்கள் உங்களை புரிந்து கொண்டு செயற்பட மாட்டார்கள். உரிய நேரத்தில் காரியங்கள் முடியும் என்பது சந்தேகம்தான்.

உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் வைத்து பேசுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். பணம் பற்றாக்குறை ஏற்படும். தொழிலுக்கு மூலதனம் இல்லையே எனக் கவலைப்படுவீர்கள். உத்தியோகத்திலும் உடன் பணிபுரிபவர்களால் பிரச்சினைகள் அதிகரிக்கும். யார் என்ன சொன்னாலும் சரி, என்ன செய்தாலும் சரி நாம் நம்முடைய வேலையை மட்டும் கவனித்துக்கொண்டு இருப்போம். பிறர் விடயத்தில் தலையிட வேண்டாம் என்று இருந்தால் மட்டுமே நிம்மதியைக் காண இயலும்.

குடும்பத்தினர்களை அனுசரித்து செல்ல வேண்டிய நேரிமிது. நீண்டதூரத்திலிருந்து



**28.05.2013 - 12.06.2014**

| | | | |
|---|---|---|---|
| | கேது | செவ்வாய் சூரியன் சுக்ரன் | புதன் வியாழன் |
| | குருப் பெயர்ச்சி 28.5.2013 | | |
| | | | |
| சந்திரன் | | சனி (வ) ராகு | |

***சுபஸ்ரீவிஜயவருடம்வைகாசி மாதம் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (28.05.2013) இரவு 9.18 மணிக்கு மிருகசீரிட நட்சத்திரம் மூன்றாம் பாதத்தில் மிதுன இராசியில் குரு பகவான் சஞ்சரிக்கப் போகிறார்.***

**குருவின் வக்ரகாலம் 13.11.2013 முதல் 12.03. 2014 வரை வியாழன் வக்ர கதியில் இருக்கிறார்.**

**01.06.2013 முதல் 01.07 2013 வரை குரு அஸ்தமனம் பெறுகிறார்.**

**பிறகு 13.06.2014இற்கு கடகத்தில் குரு உச்சம் பெற்று சஞ்சரித்து உன்னத பலன்களை உலகிற்கு வாரிவழங்கப் போகிறார்.**

அம்மன், நந்திதேவர் போன்றவர்களையும் யோக பலம் பெற்ற நாளில் வழிபாடு செய்து வாருங்கள். தேக நலனும்கூடும்; செல்வ நிலையும் கூடும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்!**

கும்ப இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி சீரும் சிறப்பும் செல்வாக்கும் கொடுக்கப்போகிறது. பதவியில் இருப்பவர்களுக்கு பதவி வாய்ப்புகள் வந்து சேரும் வீட்டில் சுபகாரியங்கள் நடைபெறவில்லையே என்ற கவலைகள் இனி அகலும். வாகன யோகம் முதல் இனி அனைத்து யோகங்களும் வந்து சேரப் போகிறது. பணப்பற்றாக் குறை அகலும். கணவன்– மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குருவின் வக்ர காலத்தில் மட்டும் கூடுதல் கவனம் தேவை. உங்கள்

# பஞ்சம ஸ்தானத்தில் வரும் குருவால் பாக்கியம் அனைத்தும் வந்தடையும்

செய்யுங்கள்.

**வேடிக்கையாகப்பேசுவதை வாடிக்கையாகக் கொண்டவர்கள்!**

எல்லோரும் பதவிக்கு ஆசைப்படுவார்கள். நீங்கள் உதவி செய்ய ஆசைப்படுவீர்கள். உதவும் மனப்பான்மை உங்களுக்கு இருப்பதால்தான் ஒவ்வொருமனதிலும் இடம் பிடிக்கிறீர்கள். நாட்டுப் பற்று உங்களுக்கு அதிகமாகவே இருக்கும்.

வேடிக்கையாகப்பேசும் சுபாவம் உங்களுக்கு உண்டு. எந்தக் காரியத்தை எப்பொழுது செய்தால் வெற்றி கிடைக்கும் என்பதை

பூர்த்தியாகும்! என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

குருபகவான் ஐந்தாம் இடத்தில் இருந்து கொண்டு அதன் பார்வை பலத்தால் ஜென்ம இராசியையும் 9,11 ஆகிய இடங்களையும் புனிதப்படுத்தப்போகிறது. எனவே, அந்த இடங்களில் ஆதிபத்தியங்கள எல்லாம் சிறப்பாக நடைபெறத் தொடங்கும்.

குருவின் பார்வை பதியும்இடங்களான 1,9,11 ஆகிய இடங்களால் என்னென்ன காரியங்கள் நடைபெறவேண்டுமோ அந்தந்த காரியங்கள் எல்லாம் சிறப்பாக நடைபெறும்.

வரும் தொலைபேசித் தகவல் நிம்மதியைக் குறைக்கலாம். வழிபாட்டின் மூலம் வளர்ச்சியைக் கூட்டிக்கொண்டால் வக்ர காலம் கூட பொற்காலமாக மாறும். விஸ்வரூப ஆஞ்சநேயர் தரிசனம் மற்றும் ராகு, கேது பரிகாரம் முறையான சர்ப்ப சாந்தி திசை மாறிய தென்முகக் கடவுள் வழிபாடு ஆகியவற்றின் மூலம் நல்ல பலன்களை வரவழைத்துக் கொள்ளலாம்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

வியாழக்கிழமை தோறும் குரு தட்சிணாமூர்த்தியையும் முருகன், விநாயகர் , சுவாமி,

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

பெயரிலேயே தொழில் தொடங்கும் வாய்ப்பும் கட்டடப்பணியைத் தொடங்கும் வாய்ப்பும் உருவாகலாம். சனிக்கிழமை தோறும் சனி பகவான் வழிபாடும், யோகம் பலம்பெற்ற நாளில் சர்ப்ப சாந்தியையும் செய்து கொண்டால் சந்தோஷங்களை நாளும் சந்திக்கலாம்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரபுரத்தில் 400 ஏக்கர் காணிகளை அபகரித்து சிங்கள குடியேற்றம்

## தடுக்கக்கோரி வவு. அரச அதிபருக்கு மகஜர்

(கருமன்காடு)

**வவுனியா வீரபுரப் பகுதியில் தமிழ் மக்களின் 400 ஏக்கர் காணி சிங்கள மக்களுக்கு வழங்கப்படுவதைத் தடுத்து தமது நிலத்தை பெற்றுத் தருமாறு கோரி வீரபுரம் கிராம அபிவிருத்தி சங்கத்தினரால் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவிலுள்ள வீரபுரம் கிராமத்தில் 1994 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வசித்து வரும் 400 குடும்பங்களை அங்கத்தவர்களாக கொண்ட வீரபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகிய நாம், எமது காணிகளை எமக்கு தாருங்கள் என்ற கோரிக்கையை பணிவுடன் முன் வைக்கின்றோம்.

வீரபுரம் வீட்டுத்திட்டத்தில் வசிக்கும் பெரும்பாலான குடும்பங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா போன்ற மாவட்டங்களைச் சொந்த இடமாகக் கொண்டு வாழ்ந்தோம். 1990 ஆம் ஆண்டு யுத்த சூழல் காரணமாக இடம் பெயர்ந்து அடம்பன் குளம் மற்றும் மடு நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த வேளையில், 1994 ஆம் ஆண்டு வீரபுரம் வீட்டுத் திட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டோம். அத்துடன் வீரபுரம் வீட்டுத் திட்டம் அமைக்கப்பட்டதன் மூலம், தமது காணிகளை இழந்த வீரபுரம் கிராமத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட குடும்பங்களும் இங்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்டன.

மீள்குடியேற்றம் என்ற பெயரில் எம்மை இக்கிராமத்தில் குடியேற்றம் செய்தபோதும் ஏனைய மீள்குடியேற்றக் கிராமங்களில் வீடுகள் மானியமாக வழங்கப்பட்டமை போலன்றி, எமக்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் சிறு காணித்துண்டுகளில் வீடுகள் அமைத்து தரப்பட்டு இவற்றுக்கு வருடாந்தம் 2 ஆயிரத்து 400 ரூபா வீதம் 40 வருடங்களில் 96 ஆயிரம் ரூபாவை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் 1994 ஆம் ஆண்டு வீடுகள் வழங்கப்பட்டன. இதன்படி இன்று வரை நாம் மாதாந்த வாடகை கொடுப்பனவை செலுத்தி வருகின்றோம். அதேவேளை, மீள் குடியேற்றத்தின் போது விவசாயக் செய்கைக்கென 400 குடும்பங்களுக்கும் தலா ஒவ்வொரு ஏக்கர் காணி வீழங்கப்பட்டதுடன், அக் காணிகளுக் கான LDO அனுமதிப் பத்திரமும் 1995 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. ஆயினும் இன்று வரை அக்காணிகளில் நாம் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியவில்லை.

மேலும் எமது காணிகளுக்குள் செல்லவோ பயிர் செய்கையை மேற்கொள்ளவோ முடியாமைக்கு, 1995 ஆம் ஆண்டு இக்கா ணிகளின் எல்லைகள் எமக்கு பொதுவாக அடையாளம் காட்டப்பட்ட போதும், காணிகளுக்கு செல்வதற்கான பாதைகள் அமைக்கப்படாமையுடன் காணித்துண்டுகளுக்கு தனித் தனியான நிரந்தர எல்லைகள் இடப்படாமையும் முக்கியமான காரணமாக இருக்கின்றது.

மேலும் எமது கிராமத்திற்கு அருகிலுள்ள உலுக்குளம் கிராமத்தில் வாழும் சிங்கள கிராமவாசிகள் சிலரால் எமது காணிகளில் குறிப்பிடத்தக்க அளவான ஏக்கர் காணிகள் கடந்த 5 தொடக்கம் 6 வருடங்களுக்குள் அத்துமீறிப் பிடிக்கப்பட்டும் உள்ளன.

நாட்டின் போர்ச்சூழல் நிலவிய காலப் பகுதியில் அச்சம் மற்றும் அச்சுறுத்தல் காரணமாகவும் காணிகளுக்குள் எம்மால் செல்ல முடியாத நிலை காணப்பட்டது. அத்துடன் 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் இடம் பெயர்ந்து வந்த மக்கள் தங்கியிருக்கவென எமது காணிகளில் குறிப்பிடத்தக்க அளவான காணிகளில் நலன்புரி நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டு செயற்பட்டு வந்தது. தற்போது அம்மக்கள் வெளியேறிய நிலையில் அக்காணியில் இராணுவ முகாம் செயற்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தகைய காரணிகளால் தான் எமது காணிகளில் இன்றுவரை எம்மால் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியவில்லை. விவசாயத்துக்கு காணிகள் வழங்கப்பட்ட போதும், தொடர்ந்தும் விவசாயக் கூலிகளாகவும், சொந்தமாக வேறு வயற் காணிகளோ விவசாயக் காணிகளோ இல்லாத வறுமை நிலையிலும் நாம் வாழ்ந்து வருகின்றோம்.

பிரதேச செய லக அதிகாரிகளிடம் இது தொடர்பில் கோரிக்கை விடுத்த போதும் எதிர் பார்த்த பலன் எதுவும் எமக்கு கிடைக் கப்பெறவில்லை. எமது நிலையை கருத்திற் கொண்டு எம் வாழ் வாதாரத்திற்காக காணிகளைப் பெற்றுத் தருவதற்கும் நில அளவை செய்வதுடன் பாதைகள் அமைத்துத் தருவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று அதில் தெரி விக்கப்பட்டுள்ளது (அ-2-250)

# மின்கட்டண உயர்வை எதிர்த்து போராட்டம்

### ஒன்றிணைய கோருகிறது ஐ.தே.க

(கொழும்பு)

மின்கட்டண உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள தொழிற்சங்க வேலை நிறுத்தப் போராட்டத்தில் அனைத்து மக்களும் கட்சி பேதங்களை மறந்து பங்குபற்ற வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் ராஜகிரியவில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு ரவி கருணாநாயக்க எம்.பி கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொய்வாக்குறுதிகளைக் கூறி மக்களை ஏமாற்றும் அரசாங்கத்திற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து நல்ல பாடத்தைப் புகட்ட வேண்டும். இம்முறைக்கான மின் கட்டண உயர்வை அரசாங்கம் வாபஸ் பெற வேண்டும். அதனைக் குறைத்து அல்லது சலுகைகளை வழங்கி மக்களை ஏமாற்ற முனையக்கூடாது.

தற்போது எண்ணெய் விலை குறைந்துள்ள நிலையிலும் அரசாங்கம் ஏன் மின் கட்டணத்தைக் குறைக்க முயற்சி எடுக்கவில்லை?.

எனவே, அன்றைய தினம் இடம்பெறவுள்ள மக்கள் எதிர்ப்பு போராட்டத்தில் அனைத்து மக்களும் கட்சி பேதங்களை மறந்து மக்களை ஏமாற்றும் அரசாங்கத்திற்கு எதிராக போராட ஒன்றிணைய வேண்டும் என்றார். (அ-2)

# நாட்டின் பிரதான நகரங்களில் கமராக்கள் பொருத்தப்படும்

(கொழும்பு)

பாதுகாப்பின் பொருட்டும் வீதி விபத்துக்களைத் தடுக்கும் நோக்குடனும் கொழும்பு நகரில் சீ.சீ.ரீ.வி கமராக்கள் பொருத்தப்பட்டிருப்பதைப் போன்று நாடு முழுவதுமுள்ள பிரதான நகரங்களில் கமராக்களைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தொலைத் தொடர்புகள் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சர்வதேச தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப தினத்தைக் கொண்டாடும் முகமாக கேகாலை ஸ்ரீலங்கா ரெலிகொம் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

மாகாண அரசாங்க உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பிரதேச வாழ் இளைஞர் யுவதிகளின் கணனி அறிவு மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவு என்பவற்றை அதிகரிப்பதற்கு வழிசமைக்கும் சுவய சப்ரகமுவ மாகாண தகவல் நுட்ப நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு, ஸ்ரீலங்கா தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவகம் மற்றும் சப்ரகமுவ மாகாணசபை என்பன ஒன்றிணைந்து இந்நிலையத்தை கேகாலை வலயக் கல்வி அலுவலகத்தில் நிறுவியுள்ளன.

2005 ஆம் ஆண்டிலே இந்நாட்டின் கணனி தொழில்நுட்பம் 4 வீதமாகக் காணப்பட்டது. தற்போது அது 40 வீதம் வரையில் அதிகரித்துள்ளது. 2016 ஆம் ஆண்டளவில் அதனை 75 வீதமாக அதிகரிப்பதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நோக்கமாகும் அமைந்துள்ளது எனவும் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய சுட்டிக்காட்டினார். (அ-2)



யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியேறிய முஸ்லிம் மக்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மானிப்பாய் வீதியிலுள்ள பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மேற்படி 50 பயனாளிகளுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. இதன் போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ சந்திரசிறி, ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் ஆகியோர் இணைந்து பயனாளி ஒருவருக்கு துவிச்சக்கரவண்டியை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு உதவிய நபருக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உதவிகளை வழங்கிய சிங்களவர் ஒருவருக்கு பத்து ஆண்டு கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.பதுளை உயர் நீதிமன்ற நீதவான் சம் பத்பீ.அபேகுணவர்த்தன இந்தத்தண்டனையைவிதித்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணைகள் மொனராகல உயர் நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு வந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு ஒத்துழைப்பு வழங்கியதாக குறித்த நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டு நீண்டகாலம் விசாரணை நடத்தப்பட்டு வந்தது.கிம்புல்யாய என்னும் பிரதேசத்தைச் சேர்ந்த முதியன் சேலாகே திஸாநாயக்க என்பவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கபடப்படுள்ளது.பொலிஸ் விசேட அதிரடிப்படை யினர் பயணம் செய்யும் பேருந்து மீது குண்டுத்தாக்குதல் நடத்த முயற்சி செய்ததாகவும் அதற்கான வெடி பொருட்களை வைத்திருந்ததாகவும் தெரிவித்து 2009 ஆம் ஆண்டில் திஸாநாயக்க கைது செய்யப்பட்டிருந்தார் எனத் தெரிய வருகின்றது. (அ-2)

# செப்பு கம்பிகளை விற்பதற்கு முயன்ற இருவர் கைது

(கொழும்பு)

வவுனியா புகையிரத நிலையத்திற்கு அருகில் காணப்பட்ட புகையிரத சமிக்ஞை வயர்களை அறுத்து அதிலிருந்த செப்புக் கம்பிகளை விற்பனை செய்ய முற்பட்ட இருவர் வவுனியா குற்றத் தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்,

40கிலோகிராம் வரையிலான செப்புகம்பிகளை விற்பனை செய்ய முற்பட்ட போது பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா குற்றத் தடுப்பு பிரிவைச் சேர்ந்த எஸ். ஜ.சிறிமன்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர் இருவரையும் கைது செய்துள்ளதுடன் அவர்களிடம் இருந்த செப்பு கம்பிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இருவரும் வவுனியா கற்குழியைச் சேர்ந்தவர்கள் எனவும் விசாரணைக்காக இருவரும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் வவுனியா குற்றத் தடுப்பு பிரிவைச் சேர்ந்த எஸ்.ஜ. சிறிமன்ன தெரிவித்துள்ளார். (அ-2-250)

# நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு ஜனாதிபதியே பொறுப்புக்கூற வேண்டும்

## ரவி கருணாநாயக்க எம்.பி. தெரிவிப்பு

நாட்டில் காணப்படுகின்ற ஊழல் மோசடிகளுக்கும் பொருளாதார வீழ்ச்சிக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே பொறுப்புக் கூற வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய அமைப்பாளருமான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ராஜகிரியவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர்களும் ஜனாதிபதியுமே நாட்டில் ஊழல் மோசடிகள் இடம்பெறுவதாக பகிரங்கமாக கூறுகின்றனர். இந்நிலையில் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ள அரசு தான் தப்பித்துக் கொள்வதற்காக மக்கள் மீது சுமைகளைச் சுமத்துவது முறையானதல்ல.

மின்கட்டணஉயர்வுமற்றும்ஏனைய பொருட்களின் விலையேற்றத்தின் பின்னணியில் அரசின் ஊழல் மோசடிகளும் களியாட்ட செலவுகளுமே காணப்படுகின்றன.

போலியான தேசப்பற்றைக் காட்டி மக்களை ஏமாற்றும் செயல் எதிர்வரும் காலங்களிலும் தொடரப்போவதில்லை. இதேவேளை, மக்கள் அரசுக்கெதிராக போராட ஆரம்பித்து விட்டனர் என்றும் அவர் மேலும் கூறினார். (அ-2)

# பாகிஸ்தான் புலமை பரிசிலுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது

(கொழும்பு)

கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தினால் ஜின்னா புலமைப் பரிசிலிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம், கல்விப் பொதுத் தராதர உயர் தரம் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் இந்த புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்க விரும்புவர்கள் http://www.pakistanhc.lk/jinnah-scholarship/ என்ற இணையத்தள முகவரியிலிருந்து இதற்கான விண்ணப்பத்தைப் பெற்று அதே முகவரிக்கு எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (அ-5)

# ஐ.தே.கட்சிக்கு நிதி நெருக்கடி!

இலங்கையில் மிக முக்கியமான கட்சிகளில் ஒன்றான ஐக்கிய தேசியக் கட்சி பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கிறது. கட்சியின் தலைமையகத்தை கொண்டு நடத்தக்கூடிய அளவிற்குக் கூட நிதி இல்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

கட்சி பாரியளவில் நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதால் கட்சித் தலைமையகம் மொத்தமாக 4.2 மில்லியன் ரூபா பணத்தை, வங்கி மேலதிகப் பற்றாகவும் வங்கி கடனாகவும் பெற்றுக் கொண்டுள்ளது. மேலும் கட்சி உறுப்பினர்கள் நிதி உதவிகளை வழங்க வேண்டு மெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-2)

## வளிமண்டலவியல்

# திணைக்களத்திற்கு எதிரான முறைப்பாடு

வங்கக்கடலில் மையம் கொண்ட புயலுக்கு மகாசேன் என்ற பெயர் பயன்படுத்தப்பட்டமைக்கு எதிராக வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் முறைப்பாடு ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன கலாசார உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய சபையில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மகாசேன் என்ற பெயரை வளிமண்டலவியல் திணைக்களம் பிரேரித்துள்ளதாகவும் தேசிய மட்டத்திலான அபகீர்த்தி தொடர்பில் அந்த திணைக்களம் மன்னிப்புக் கோர வேண்டுமெனவும் நீர்ப்பாசன கலாசார உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய சபையின் பொதுச் செயலாளர் நிமல் வீரதுங்க தெரிவித்துள்ளார். இலங்கை சமூகத்தவர்களால் மகாசேன மன்னன் கடவுளாக போற்றப்படுகின்றார்.ஆனால் சூறாவளி ஒன்றுக்கு மகாசேனன் மன்னனின் பெயரை வைத்துள்ளனர். வளிம ண்டலவியல் திணைக்களம் மன்னர் ஒருவருக்கும் இலங்கை வரலா ற்றுக்கு செய்த பாரிய அபகீர்த்தி யாகவே இதனைக் கருதுகின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2004 ஆம் ஆண்டு பிரேரிக்கப்பட்ட பெயருக்கு அமைவாகவே வங்காள விரிகுடாவில் உருவாகிய புயலுக்கு மகசேன் என்ற பெயரிடப்பட்டது என வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.எச். காரியவசம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய வரலாறு மற்றும் நாட்டின் கீர்த்தியை பாதிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப் படவில்லை என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் சுட்டிக் காட்டியுள்ளது. (அ-2)




- ❖ *1535* - பிரெஞ்சு நடுகாண் பயணி ஜாக் கார்ட்டியே வட அமெரிக்கா நோக்கிய தனது இரண்டாவது பயணத்தை 110 பேருடன் மூன்று கப்பல்களில் ஆரம்பித்தார்.
- ❖ *1536* - லண்டனின் எட்டாம் ஹென்றியின் இரண்டாம் மனைவி "ஆன் பொலெயின்" வேறு ஆண்களுடன் தொடர்பு வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு தலை துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட் டாள்.
- ❖ *1604* - கனடாவின் மொன்ட்றியால் நகரம் அமைக்கப்பட்டது.
- ❖ *1649* - லண்டனை பொதுநலவாய நாடாக அங்கீகரிக்கும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. அடுத்த பதினொரு ஆண்டுகளுக்கு லண்டன் குடியரசாக இருந்தது.
- ❖ *1848* - மெக்சிக்கோ-அமெரிக்கப் போர்: கலிபோர்னியா, நெவாடா, யூட்டா ஆகிய பல பகுதிகளை ஐக்கிய அமெரிக்காவுக்கு $15 மில்லியன்களுக்கு கொடுக்க மெக்சிக்கோ முன்வந்ததை அடுத்து போர் முடிவுக்கு வந்தது.
- ❖ *1897* - ஐரிய எழுத்தாளர் ஆஸ்கார் வைல்டு லண்டனின் ரெடிங் சிறையில் இருந்து விடுதலை பெற்றார்.
- ❖ *1961* - சோவியத்தின் வெனேரா 1 வீனஸ் கோளைத் தாண்டி, வேறொரு கோளைத் தாண்டிய முதலாவது விண்ணூர்தி ஆனது.
- ❖ *1971* - சோவியத் ஒன்றியம் மார்ஸ் 2 விண்கலத்தை ஏவியது.
- ❖ *1991* - அனைத்து மக்கள் வாக்கெடுப்பில் குரொவேசியர்கள் தமது விடுதலைக்காக வாக்களித்தனர்.

*பிறப்புக்கள்*

- ❖ *1762* - யோஃகான் ஃபிக்டே, ஜேர்மனிய மெய்யியல் அறிஞர் (இ. 1814)
- ❖ *1882* - மொஹம்மது மொஸாடெக், ஈரானியத் தேசிய இயக்கத்தின் தலைவர்
- ❖ *1890* - ஹோ ஷிமின், வியட்நாமியத் தலைவர் (இ. 1969)
- ❖ *1925* - பொல் பொட், கம்போடிய சர்வாதிகாரி (இ. 1998)
- ❖ *1925* - மால்கம் எக்ஸ், அமெரிக்க மனித உரிமைச்செயற்பாட்டாளர் (இ. 1965)
- ❖ *1976* - கெவின் கார்னெட், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

• *இறப்புகள்*

- ❖ *1904* - ஜாம்செட்ஜி டாடா, இந்தியாவின் நவீன தொழில்துறையின் முன்னோடி (பி. 1839)
- ❖ *2007* - ஜோதி, தமிழ்த் திரைப்பட நடிகை

*யோஃகான் ஃவிக்டெ*



யோஃகான் கோட்லீப் ஃவிக்டெ 1762 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி பிறந்தார். இவர் ஒரு டாய்ட்ச் நாட்டு மெய்யியல் அறிஞர். இவர் பௌட்சன் என்னும் ஊருக்கு அருகில் ரம்மெனௌ ஊரில் பிறந்தார். இவர் ட்டாய்ட்ச் நாட்டுணர்வினால் அந்நாட்டு மெய்யியலில் புதுப்போக்குக்கு வித்திட்டார். இவர் டாய்ட்ச் நாட்டின் கருத்தியம் என்னும் மெய்யியல் இயக்கத்தை தோற்றுவித்தவர்களில் ஒருவர். ஃவிக்டெ மெய்யியல் துறையில் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டுயேனா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றினார்.

இவருடைய தன்னுணர்வுநிலை பற்றிய நுட்பமான கருத்துக்களுக்காக இவர் பெரிதும் மதிக்கப்படுகின்றார். இவரின் படைப்புகளைப் புரிந்து கொள்வது கடினம் என்று பலரும் நினைக்கின்றனர். கடவுள் மறுப்புக் கொள்கையர் என்று குற்றம் சாட்டப்பட்ட இவர் பேராசிரியர்

என்னும் நூல் டாய்ட்ச் நாட்டினருக்கு புகழை ஏற்படுத்தி கொடுத்தது.

1796 ஆம் ஆண்டில் வெளியாகிய இவருடைய, *இயல்பான வலதுசாரிக் கொள்கைகளுக்கான அடித்தளங்கள* என்னும் நூலில் தன்னுணர்வு நிலை பற்றியும், சமூக நிகழ்வியக்கம் பற்றியும் எழுதியுள்ளார்.

இந்நூலில்ஒவ்வொருவரின் தன்னுணர்வு நிலைக்கும் ஏற்றதாக ஏனைய அறிவுடையவர்கள் இருப்பது மிகத்தேவையானது என்று கூறிப்பிட்டுள்ளார். இப்படி ஏனைய அறிவுடைவர்களும் இருப்பதன் தாக்கத்தால் தான் ஒருவர் தன் அறிவுநிலையைட் உணர முடிகின்றது என்று வலியுறுத்தியுள்ளார். இவர் 1814 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி உயிர் நீத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய மாநாட்டுக்குமுன் மனித உரிமை வேலைத்திட்டம்

## முன்னெடுக்கப்படுகிறது என்கிறார் இலங்.ம.உ.ஆணையாளர்

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்கென அங்கு மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பான செயல்நுட்ப உதவிகளை (Technical support) முன்னதாகவே வழங்க பொதுநலவாய செயலகம் முன்வந்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணையாளர் டாக்டர் பிரதீபா மஹநாம தெரிவித்துள்ளார்.

மனித உரிமைமீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில் தேசிய மட்டத்திலான விசாரணைகள் நடத்துவதற்கு பொது நலவாய செயலகத்தின் ஊடாக பல நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர் என அவர் பி.பி.சிக்கு தெரிவித்துள்ளார்.

*மனித உரிமை, துஷ்பிரயோகம்*

பொதுநலவாய செயலாளர் கமலேஷ் சர்மா குழுவினருடன் அண்மையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர், அடுத்த 6 மாத காலத்துக்குள் மனித உரிமை, துஷ்பிரயோகம் தொடர்பான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதன்பொருட்டு, வட-அயர்லாந்து, கென்யா, உகண்டா, சியேராலியோன் உள்ளிட்ட பல நாடுகளின் மனித உரிமை நிபுணர்கள் இலங்கைக்கு வருகை தந்து நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை மீறல்கள் பற்றிய தேசிய விசாரணை நடைமுறை தொடர்பில் பயிற்சிகளை வழங்குவார்கள்.

கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் குறைந்து வருகின்றன.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இராணுவத்தினருக்கு மனித உரிமைகள் பற்றி தெளிவூட்டும் செயற்பாடுகளும் பல வாரங்களாக நடந்துள்ளன.

பொதுநலவாய மாநாடு நடைபெறவுள்ள இலங்கையின் மீதே அனைத்து தரப்பினரின் கவனமும் குவிந்துள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் குற்றஞ்சாட்டுவோர் இலங்கைக்கு வருகை தரும்போது, நிலைமைகளை நேரில் காண வேண்டும். பொதுநலவாய செயலாளரும் செயலக அதிகாரிகளும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை போலல்லாது, இலங்கையுடன் ஒத்துழைத்துச் செயற்படுகிறார்கள்.

இதேவேளை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுயாதீனமாக இயங்கவில்லை என்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஏராளமான முறைப்பாடுகள் தேங்கிக்கிடப்பதாகவும் சர்வதேச மட்டத்தில் கடுமையான குற்றசாட்டுக்களும் இருந்து வருகின்றன.

ஆனால், அவ்வாறான குற்றச்சாட்டுக்களை இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு மறுக்கிறது.

இலங்கையில், இறுதிக்கட்ட போர்க்காலத்தில் நடைபெற்ற பாரதூரமான மனித உரிமை மீறல்களையிட்டு சுயாதீனமான விசாரணைகளை இலங்கை நடத்த வேண்டும் என்று சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கோரி வருகின்றன.

இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்துவது அதன் விழுமியங்களுக்கு ஏற்பட்டுள்ள சோதனை என்றும் கனடா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# முன்னாள் போராளிகள் இருவர் கொழும்பில் கைது

தமிழீழ விடுதலைப் புலிகளின் இரண்டு முன்னாள் போராளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் வைத்தே குறித்த சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் இருவரும் கைதாகினர். மேலதிக விசாரணைகளுக்காக இருவரும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களில் ஒருவர் மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் மற்றையவர் சில காலம் சிறைத்தண்டனை அனுபவித்தவர் எனவும் தெரிய வருகிறது. இவர் புறக்கோட்டை பேருந்து குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டே சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இவர்கள் இருவர் மீதும் மேலதிக விசாரணைகளை பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர். (அ-2)

# வெள்ளை நிற சீனியில் இரசாயன பதார்த்தம்

## விவசாய அமைச்சு கண்டறிவு

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்யப்படும் வெள்ளை நிற சீனியில் கெட்மியம் எனும் இரசாயனப் பதார்த்தம் அடங்கியுள்ளதாக விவசாய அமைச்சு மேற்கொண்ட பரிசோதனை மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறையிட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சீனி மற்றும் பால்மா என்பவற்றில் இரசாயனப் பதார்த்தங்கள் கலந்துள்ளதாக அண்மைக்காலமாக குற்றச்சாட்டுகள் எழுந்து வருகின்றன.

இலங்கைக்கு பிரேசில், சிங்கப்பூர் மற்றும் மத்திய அமெரிக்க நாடுகளில் இருந்து வெள்ளைச் சீனி இறக்குமதி செய்யப்படுகிறது.

இவற்றின் மாதிரிகள் விவசாய அமைச்சினால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. இவற்றில் கெட்மியம் எனும் இரசாயனப் பதார்த்தம் இருப்பது உறுதியாகி உள்ளதென கூறிய அமைச்சர், இதனையடுத்து அது குறித்து நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை இது தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்கவுள்ளது. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் சீனியில் 90 வீதமானவை வெள்ளை நிற சீனியாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சிறுவர், பெண்கள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு

(சிவநகர்)

சிறுவர்கள், பெண்கள் தொடர்பான அபிவிருத்தி மற்றும் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை கரைச்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கரைச்சிப் பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அவுஸ்திரேலியா ஒக்ஸ்பாம் திட்ட இணைப்பாளர்களின் பங்களிப்புடன் நடைபெறவுள்ள இவ் விசேட கலந்துரையாடலில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பங்குபற்றி, பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு மற்றும் சேவை வழங்குநர்கள் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவுள்ளனர்.

இது தொடர்பான கருத்துக்களை மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வாசுதேவன், கரைச்சிப் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந் நிகழ்விற்கு நான்கு பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள சிறுவர்கள் மற்றும் பெண்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-254)






சர்வதேச செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி கிளையினால், கரைச்சிப் பிரிவின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட கிளிநொச்சி மாவட்ட மட்டத்திலான மரதன் ஓட்டப்போட்டி அண்மையில் பரந்தன் சந்தியில் இருந்து ஆரம்பமாகி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை முன்றிலில் நிறைவடைந்தது. இம் மரதன் ஓட்டத்தில் பங்கு கொண்ட வீரர், வீராங்கனைகளையும் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய சிறுமி ஒருவர் பரிசில் பெறுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



**பரீட்சை**
வேதனையாய் ஆரம்பித்து
சோதனையாய் வந்து
சாதனை படைக்க வழிவகுப்பது

**காதல்**
ஏமாற்றுபவன்
இருக்கும் வரை
உனக்கு மதிப்பில்லை

**அன்பு**
அளவாய் இருந்தால்
அது உன் பலம்
அளவுக்கு மிஞ்சினால்
அது உன் பலவீனம்

**பெயர்**
உனக்கான ஓர்
அறிமுகச் சொல்

**தன்னம்பிக்கை**
இரு கையில் உள்ளது
என்பதைவிட- உன்
மனம் தன்னம்பிக்கையுடன்
இலட்சியப்பாதையை நோக்கி
முன்னேறிச் செல்வதே
மேலானது

பொ.இளவரசி
பருத்தித்துறை

---

தட்டுங்கள் திறக்கப்படும்
உழைக்கும் தோழர்களே
விழித்துக்கொள்ளுங்கள்
நீங்கள்
சிரச்சேதம் செய்யப்பட்ட
தீக்குச்சிகள் அல்ல
உரசிப் பாருங்கள்
பற்றிக் கொள்வீர்கள்
நீங்கள் பாலைவன
சுடுமண் அல்ல
உழுதுபாருங்கள்
ஈரங்கசியும்
இலை உதிர்த்திய
கிளைகள் நீங்கள்
துளிர்கள் உங்களுக்குள்
வேருக்கு நீரூற்றுங்கள்
வெயிலுக்கு நிழல்தருவீர்கள்
உங்கள் வாய்ப்புக்கள்
மறுக்கப்பட்டிருக்கலாம்
வாழ்க்கை உங்கள் கையில்தான்
உங்கள் வியர்வைத் துளியின்
சூடு பட்டு விழித்துக்கொள்ளட்டும்
முதலாளி வர்க்கங்கள்

ஆர்.எஸ்.ஆனந்தன்
தும்பளை

---

**ஒரு கவிஞனின்**
**கண்ணீரில் இருந்து...**
என் ஓர்மத்திற்காய்- ஓர்
உயில் எழுதுகின்றேன்
தமிழனே- அதன்
தலைமை வரிகளை-நான்
தவமிருந்து எழுதுகின்றேன்...
உயிர்ப்பிச்சை கேட்டு- உன்
உடலோடு உன்னை
விடலாக்கி விட்டாய்- பூமியின்
மிச்சக்கலாசாரத்தை
கச்சையாய்க்கட்டி
கழிவாய் வாழ்கின்றாயே...
உன் காரம் நிறைந்த
கலாசார வெக்கையால்...
தமிழனே
கண்திறந்து பார்- எம்
கலைகள்
எக்கல்லறைகளில் என்று
தமிழனே...
காது கொடுத்துக்கேள்- ஒவ்வொரு
கவிதைகளினதும் குமுறல்களையும்
கணக்கெடுத்தால்- இன்னும்
பல கவிதைகளுக்கு
கடைசி வரிகள் இல்லை...
இதற்கு
கவிஞனாகிய என்னிடமும்
காரணமில்லை...

பி.ஜதீஸ்குமார்
கள்ளப்பாடு

---

## இமயம் தொட...



உன்னால் முடியுமெனும்
நம்பிக்கை உன்னில்
துளிர்விட்டாலே போதும்
அந்த நம்பிக்கையே
உன்னை தூக்கி நிறுத்திவிடும்
நம்பிக்கையின் துளிர்ப்பு
பெருமலையைக்கூட
கைக்குள் பொடியாக்கிவிடும்


மாவை. நா. கஜேந்திரன்

---

**மீள தரமுடியுமா?**
வன்னிப்போரினால்
வாழவழியின்றி
வறியவர்களானார்கள்
எம்மின மக்கள்
உண்ண உணவின்றி
உடுக்க உடையின்றி
உறைய இடமின்றி
உடைந்து போனார்கள்
எம் தமிழ் மக்கள்
வன்னிப்போரினால்
அகதியான மக்களை
மீளக்குடியேற்றம் செய்யலாம்
ஆவியான எம்மினங்களை
மீளத் தரமுடியுமா?

பா.சத்யா
அல்வாய்.

---



### ஓசிப்பயணம் ஓவராகாதே

வாலிப வயதிது;
வந்ததோ பேராசை;
ஜாலியா சென்றிட
ஜமகாவோ ஓசி;
போலியான போதையில்
போவதோ படுகுஷி;
காலியாக்கிடும்
உயிரைக் காலனோ
கடும் வேகம் வேண்டாம்;
பாதையோ படுகுழி

பொ.புவிதன்

### திருந்தமாட்டீரோ?

இருவர் சென்றாலே விபத்து
ஆறுபேர் சென்றால் விபத்து
ஏற்படாது என்பது நிச்சயமா?
கொஞ்சம் யோசியுங்கள்
ஒருவரால் பலர் உயிர்
பறிபோகும் அல்லவா!

செ.மிதுஷா
தம்பசிட்டி

### வி(வீ)தி விளையாட்டு

பயமறியா இளங்கன்றுகள்
காப்பெற்றைக் கண்ட சந்தோசத்தில்
குதூகலிக்கிறார்களோ- இல்லை
எரிபொருள் சிக்கனத்தை
ஆதரிக்கிறார்களோ தெரியவில்லை
விதிவலையில் நீவிர் விழாதிருந்தால்
நாளைய எதிர்காலம் உம் கையிலே
இல்லையேல் அது எமன் கையில்

உதயரூபன்
நயினா

### புரியாதவர்கள்

நிறைகூடிய நிறையுடன்
நிகரில்லா வேகம் காட்டும்
இளைஞர்களை!
நிழற்படமாய் பிரசுரித்தாலும்
நிஜங்கள் புரிவதில்லையே

கே.ரஞ்சித் விஜயகுமார்
யாழ்ப்பாணம்

## மௌனத்தின் தேடல் - 154

### யார் காப்பார்?

சட்டத்தை மதிக்காது இள
வட்டங்கள் கூடிக்குடித்துக்
கொட்டமடிக்கும் காலமிது
பட்டப் பகலில் மேலாடையோ
தலைக்கவசமோ இன்றி
விதியில் மோட்டார் சைக்கிளில்
உல்லாசமாகப் போகின்றார்
யார் காப்பார் இவர்களை

துரை
தென்மட்டுவில்

### அழகு தரும்

ஊதாரித்தனம் எம் வாழ்வை
சிதைத்தழிக்கும் என்று
சிந்தையில் நினைக்காது
மனம் போன போக்கில்
ஆடி மகிழும் தம்பிகளே...!
பொறுப்போடு பிறர் மதிக்க
உழைத்து வாழ்தலே
உயர்விற்கு அழகுதருமென
சிந்தையில் பதிக்காயோ

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

### ஏதிலிகளாய்

ஏதிலிகளாக்கப்பட்ட
எம்மினத்தின் இளைஞர்கள்- இன்று
எதிர்காலமின்றித் திட்டமிட்ட
சதிவலையில் சிக்கித் தவிக்க
சிறுசுகளோ அவர் பின்னே
சீரழியச் செல்கின்றனர்

சூரியகலா
யாழ்ப்பாணம்

### இறைவா நீயே துணை

தம்பிமார்களே!
வாழவேண்டிய பருவம்
இலட்சியங்கள் பல
படைக்க வேண்டியவர்கள்- நீங்கள்
ஆறுபேரும் அடுக்கடுக்காய்
ஆனந்தமாய் சவாரி செய்து
மகிழும் நேரம் இதுவல்ல
வழுவழுப்பான வீதிதனில்
வழுக்கி விழாமல் இருக்க
தெய்வமே நீயே துணை

### காவு

ஏய் மனிதனே!
உனக்குத்தானே கடவுள்
ஆறு அறிவு படைத்துள்ளான்
நீ ஏன் ஐந்தறிவுள்ள
குரங்கினைப் போல
தாவித் திரிகின்றாய்
மனிதனாகவே வாழடா!
மிருகத்தைப் போல வாழாதே!

வி.வின்சிகா
ஆழியவளை

### எம்மண்ணின் வெளிச்சம்

கடுகதி வேகம்
இதனை தாங்காது
மோட்டார் சைக்கிளின் இதயம்?
இவர்கள் துணிகரம்
இவர் ஆயுள்
முடிவின் தொடக்கம்
ஆசியாவின் அதிசயமல்ல இது
எம்மண்ணின் ஓர் வெளிச்சம்

ம.அருள்யோன்சன்
புதுமுறிப்பு

### ஏன்? இந்த அவலம்

நவீன உலகத்தின்
மனித முயற்சிகள்
அதிகரித்துள்ளது
ஏன்? போக்குவரத்திற்கு
இவ்வளவு கஷ்டமா?
ஏன்? இந்த அவலம்

ஆ.கஜவேந்தன்
யா/மட்டுவில் கமலாசனி
வித்தியாலயம்

### விஞ்ஞானத்தின் விந்தை

மனிதனை வியக்க வைக்கிறது
விஞ்ஞானத்தின் விந்தைகள்- ஆனால்
விஞ்ஞானமே வியக்கிறது
மனிதனின் செயற்பாட்டால்

ந.செல்வானந்தராசா
கந்தர்மடம்

### உயிர் வேண்டாமா?

ஆறறிவு படைத்த மனிதா
உன் ஆறாம் அறிவாகிய
பகுத்தறிவு எங்கே
கையிலே லீசிங் மோட்டார் வண்டி
அதிலே ஆறுபேர் சவாரி
ஓட்டமோ அதிரடி
மோட்டார் வண்டியோ மதிலடி
பிளந்தது மோட்டார்வண்டி
போனது உயிர்

ஜெ.புவிசிந்து
செல்வாபுரம்

### ஆண்டவனே துணை

அடுக்கடுக்காய் ஆறுபேர்
ஆனந்தமாய் செல்கிறீர்கள்
அடுத்துவரும் ஆபத்தை
அறியாமல் செல்கிறீர்கள்
(வீதி) விதிமுறைகளை
மதிக்காமல் செல்கிறீர்கள்
எனிமேல் உங்களுக்கு
ஆண்டவனே துணை

அ.மேரி அல்போன்சா
குருநகர்

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் -155



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 23.05.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் மையச் சுழல் அச்சாக மாறும் மாலைதீவும் இலங்கையும் !

முள்ளிவாய்க்கால் பேரழிவு நிகழ்ந்து, நான்கு ஆண்டுகளாகியுள்ள இம்மாதத்தில், அந்த அழிவில் பங்காளிகளாக இருந்த வல்லரசாளர்கள், வேறொரு மோதல் களத்தினை, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் திறந்துள்ளதாக அரசியல் நோக்கர்கள் நம்புகின்றனர்.

அந்தக் களம், கேரளாவின் திருவனந்தபுரத்திலிருந்து 200 மைல் தொலைவில் இருக்கும், 1191 தீவுக் கூட்டங்களைக் கொண்ட மாலைதீவாகும்.

அமெரிக்காவின் அணுவாயுதப் படைத்தளமான தியாகொர்காசியா, இந்தத் திவிலிருந்து சற்றுத் தொலைவில்தான் இருக்கிறது. பிரித்தானியாவுடன் அமெரிக்கா செய்து கொண்ட உடன்பாடு, 2014 டிசெம்பரில் காலாவதியாகிப்போவதால், மாலைதீவில் மாற்றுத் தளத்தை அமெரிக்கா தேடுகிறது என்கிற பார்வையும் உண்டு.

ஆனாலும், அமெரிக்காவின் ஆசிய- பசுபிக் சுழலச்சு என்ற புதிய மூலோபாய திட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாகவும் இந்த நகர்வு பார்க்கப்படுகிறது.

வரும் செப்டெம்பரில் மாலைதீவில் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அந்த ஆண்டிலுள்ள டிவெகி சிட்டீ என்கின்ற இணையம், அமெரிக்காவிற்கும் மாலைதீவிற்கும் இடையே முன்மொழியப்பட்ட வரைபு- பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்த ஆவணத்தை கசியவிட்டுள்ளது.

ஆனால், அப்படியானதொரு எண்ணம் தங்களுக்கில்லை என்று கூறினாலும், கசிந்துள்ள ஆவணம் போலியானதென்று அமெரிக்கா மறுக்கவில்லை.

இவ் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டால், உலக ஆதிக்கத்தின் முக்கிய பிராந்தியமான இந்துமாகடல், மோதல் களமாக மாறும் என்கிறார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

இலங்கையில் இந்த வல்லரசுகளின் பனிப்போர் 80 களிலே ஆரம்பித்த கதையை அமைச்சர் மறந்துவிட்டார் போல் தெரிகிறது. இன்னமும் அது தொடர்ந்து கொண்டிருப்பதையிட்டு அதிகார வாசிகளுக்கு கவலை இல்லை.

தென் ஆசியாவிலுள்ள பொருளாதாரவளம் குறைந்த நாடுகள், வெளிநாட்டு நேரடி முதலீடு எங்கிருந்து வந்தாலும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் படைத்தவர்கள் என்பது பொதுவான உண்மை. இதில் மாலைதீவும் விதிவிலக்கல்ல.

இருப்பினும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஏற்படும் போட்டியில், வல்லரசுகள் மேற்கொள்ளும் காய் நகர்த்தல்கள், இரு அணிகளை உருவாக்கிவிடும். அமெரிக்க சார்பு அணி, இந்திய சார்பு அணி என்கிற நிலைப்பாடுகளை அதிகாரப் போட்டியில் இறங்கும் அரசியல்வாதிகள் விரும்பி ஏற்றுக் கொள்வார்கள். இந்திய -சீன மற்றும் அமெரிக்க-சீன முரண்நிலைகளை கையாள்வதாகக் கற்பிதம்செய்து கொண்டு, ஏதோவொரு பலமான அணியைத் தேர்ந்தெடுப்பார்கள்.

இலங்கை போன்று மாலைதீவும், நீண்ட காலமாகவே இத்தகைய சீனா- இந்தியா- அமெரிக்கா இடையேயான ஆதிக்க முறுகல் நிலைக்குள் அகப்பட்டுள்ளது கவனிக்கத் தக்கது.

இலங்கையில் போர் முடிவுற்ற கடந்த நான்கு ஆண்டுகளில் பல மாற்றங்கள் பதிவாகியுள்ளன. பொருண்மிய ஆதிக்கத்திற்கான திரைமறைவு மோதல்கள் சீனாவிற்கும் இந்தியாவிற்குமிடையே தீவிரமடைவதையும் காண்கிறோம். பறிக்கப்படும் காணிகளை பங்கு போடுவதில் பன்னாட்டுக் கம்பனிகள் ஐந்து நட்சத்திர விடுதிகளில் அடிக்கடி கூடுவதையும் பார்க்கிறோம்.

ஆட்சி மாற்றமொன்றிற்கான அமெரிக்காவின் ஐ.நா. தீர்மானங்களும், இருக்கும் ஆட்சி, சீனாவின் கட்டுப்பாட்டிற்குள் சென்று விடக்கூடதென்பதற்காக சீபா ஒப்பந்தக் கனவோடு காத்திருக்கும் அண்டை நாடும், இயங்க முடியாத நிறுவனங்களைக் கையேற்க தருணம் பார்க்கும் சீனாவும், திருமலைத் துறைமுகம் தம்வசமாகாதா என்று ஏங்கும் இவையனைத்தும், இலங்கையில் குவிக்கும் கவனத்தை மாலைதீவின் பக்கம் திரும்பியுள்ளது போல் தெரிகிறது.

இருதரப்போடு விளையாடும் மாலைதீவு குறித்து, இந்தியாவின் கவனம் எப்போதும் உண்டு.

ஆனால் இலங்கை, மாலைதீவு மற்றும் சீசெல்ஸ் போன்ற சிறிய பிராந்திய நாடுகளுடன், கடல் கண்காணிப்பில் பாதுகாப்பு ஒத்துழைப்பு வழங்கும் இந்தியா, இந்த நாடுகளின் உட்கட்டுமான அபிவிருத்திப் பணிக்கான போதியளவு நிதி உதவியை வழங்க முடியாமல் இருக்கிறது. இந்த இடைவெளியை அல்லது இயலாத் தன்மையையே சீனா பயன்படுத்துகிறது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியா மேற்கொண்ட கடந்த காலத் தலையீடுகளை நோக்கினால், 1987 இல் அமைதிப்படையின் வருகை, 1988ல் இரவல் படை மாலைதீவில் மேற்கொண்ட சதியினை முறியடிக்க வழங்கிய உதவி என்பன குறிப்பிடத் தக்கன.

பிரச்சினைகளை உருவாக்குவதும், பின்னர் அதனைத் தீர்க்க ஓடிச்செல்வது போல் நடிப்பதும், இந்த நவீன யுக சதித் தத்துவத்தின் ஒரு பரிமாணமாகவும் இருக்கின்றது.

தற்போது, மத்தியில் நீர்த்தேக்கமுள்ள வட்டவடிவிலான 26 பவளப் பாறைகளின் [illegible] வலையமைப்பினை இந்தியா [illegible]ணித்துக் கொண்டிருக்கிறது.

டியார்கொர்கார்சியாவிலிருந்து ஆப்கானைத் தாக்கப் புறப்படும் விமானங்கள்-2001



தமது தேசிய- பிராந்திய நலனோடு உடன்படும் ஆட்சியாளர்கள் அண்டை நாடுகளில் இருக்க வேண்டும் என்பதைத்தான் எந்த நாடும் விரும்பும். இலங்கையிலும் மாலைதீவிலும் இதையே இந்தியா எதிர்பார்க்கிறது. ஆனால், அண்மையில் மாலைதீவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால், இந்திய தேசம் விசனமடைந்தது என்பதனை மறுக்கமுடியாது.

1965 இல் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் அடைந்த மாலைதீவில், முடியாட்சி போன்றதொரு எதேச்சாதிகார ஆட்சிதான் நடைபெற்றது.

அதிபர் மாமூன் கயூமின் 30 ஆண்டுகால ஆட்சி 2008 பொதுதேர்தலோடு முடிவிற்கு வந்தது. அக்டோபரில் தேர்தல் நடைபெற்று, நவம்பரில் முஹமட் நசீட் புதிய அதிபர் பதவியை ஏற்றார்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் அரச எதிர்ப்பாளர்களை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்ட, குற்றவியல் நீதிமன்ற தலைமை நீதிபதி அப்துல்லா முஹமட்டை, 2012 ஜனவரியில் கைது செய்தார், மாலை தீவின் வரலாற்றில் முதன்முறையாக ஜனநாயக ரீதியில் அதிபராகத் தெரிவானவர் என்று சொல்லப்படும் முகமட் நசீட்.

இதற்கு எதிராக பொலிசாரும் பொதுமக்களும் பெரும் போராட்டங்களில் ஈடுபட்டனர். இதன் எதிர்வினையாக ஆட்சி நிர்வாகம் சீர்குலைந்து, அதிபர் நசீட் பதவி விலகினார்.

இது ஆட்சிக் கவிழ்ப்பா அல்லது பதவி விலகலா என்கின்ற விவாதங்கள் நீடிக்கும்போது, நீதிமன்ற அழைப்பாணையையும், பயணத் தடையையும் மீறிய குற்றச்சாட்டினை முன்வைத்து, அவர்மீது பிடியாணை ஒன்று பிறப்பிக்கப்பட்டது.

பின்னர் அவர், இந்தியத் தூதரகத்தில் அடைக்கலம் புகுந்து, 10 நாட்கள் கழித்து வெளியே வந்தார்.

தற்போது ஆட்சியில் இருக்கும் முஹமட் வாஹீட், தனது அதிகாரத்தைப் பலப்படுத்தும் வகையில் இந்தியாவிற்கு எதிரான நகர்வொன்றினை மேற்கொண்டார்.

அதாவது, இந்தியாவின் பெங்களூரைத் தளமாகக் கொண்டியங்கும் ஜி.எம்.ஆர். என்கின்ற நிறுவனம், முஹமட் நசீட் காலத்தில் செய்து கொண்ட மாலே விமானநிலைய நிர்வாக ஒப்பந்தத்தினை வாஹீட் இரத்துச் செய்துவிட்டார்.

511 மில்லியன் டொலர் முதலீட்டில், புதுப்பிக்கக் கூடிய 10 வருட ஒப்பந்தத்தை இரத்துச் செய்த விவகாரம், தவறானது அல்ல என்கின்ற தீர்ப்பினை சிங்கப்பூர் உயர் நீதிமன்றமும் உறுதிப்படுத்தியுள்ளது. ஆனால், இதற்கான நஷ்டஈடாக 800 மில்லியன் டொலர்கள் வழங்க வேண்டுமென ஜி.எம்.ஆர் நிறுவனமும், அது அதிகமான தொகை, சரியான தொகை ஏறத்தாழ 150- 350 மில்லியன் டொலாராக இருக்குமென்று மாலைதீவு அரசு கூறுகிறது.

இந்த விடயம் பாதுகாப்பு மற்றும் பொருண்மிய உறவில் இவ்விரு நாடுகளுக்கிடையே உரசலை உருவாக்கியுள்ளது.

இந்த நிலையிலேயே அமெரிக்கப் பாதுகாப்பு ஒப்பந்த இரகசிய ஆவணமும் கசிந்துள்ளது.

ஆசியாவின் கடல்வழித் தலைவாசலில் நிலை கொண்டுள்ள மாலைதீவு, இலங்கை போன்ற நாடுகளின் அமைவிடம் என்பது, அவை கேந்திர முக்கியத்துவம் மிக்க மையங்களாகவும், மையச்சுழல் அச்சாகவும் மாறிக்கொண்டிருக்கிறது. என்பதனை சீனாவின் முத்துமாலைத் தந்திரோபாயங்கள் உட்பட, அமெரிக்கா- இந்தியா மேற்கொள்ளும் கடற் கண்காணிப்பு ராடர் நிர்மாணிப்புக்களும் உணர்த்துகின்றன.

வளம் குறைந்த சிறிய நாடுகளில், தமது பொருண்மிய மேலாதிக்க நலன்களுக்காக வல்லரசாளர்கள் மோதும் போக்கானது, அந்த நாடுகளில் வாழும் சிறுபான்மைத் தேசிய இனங்கள் தமது அடிப்படை உரிமை களை வெகுவிரைவில் இழக்கும் சூழ்நிலையை உருவாக்கப்போகிறது.

வடக்கில் அரசால் தீவிரமாக முன்னெடுக்கப்படும் நில அபகரிப்பிற்கு எதிராக குரல் எழுப்ப இவர்கள் மறுப்பது, இந்த யதார்த்தத்தை புரியவைக்கிறது.

-இதயச்சந்திரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குக் கிழக்கு இணைந்ததே தமிழர்களின் தாயக பிரதேசம்

## கூட்டமைப்பின் கொள்கைகளில் மாற்றம் கூடாது- அரியம் எம்.பி.



(கொழும்பு)

**தமிழர்களின் தாயகம் வடக்கு மாகாணம் மட்டும் தானா? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கேள்வியெழுப்பியுள்ளார். வடமாகாண சபைத் தேர்தல் தொடர்பாக சிவில் சமூகம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பல கட்சிகளின் நடவடிக்கைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.**

அவர் தொடர்ந்து கூறுகையில்,

தமிழர்களின் தாயகமென்பது வடகிழக்கு மாகாணங்கள் இணைந்ததே ஆகும். இவ்வாறு இருக்கும் போது தேர்தல் தொடர்பாகவும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் கிழக்கில் ஒரு நிலைப்பாட்டையும் வடக்கில் ஒரு நிலைப்பாட்டையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள பல கட்சிகள் மேற்கொண்டு வருவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் செயற்பட்டனவோ, அதேபோன்ற நடைமுறைகளைத் தான் வடக்கு மாகாணத் தேர்தலிலும் கூட்டமைப்பு கட்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

குறிப்பாக தமிழ்க் கட்சிகள் சுயேட்சைக் குழுவாக போட்டியிடுவதென்பது கிழக்கு மாகாணத்தையும் வடக்கு மாகாணத்தையும் பிரித்துப் பார்ப்பதாகவே அமையும். கூட்டமைப்பு என்பது கிழக்கில் ஒரு நிலைப்பாட்டையும் வடக்கில் இன்னுமொரு நிலைப்பாட்டையும் மேற்கொள்ள முடியாது.

தமிழர் தாயகம் என்பது வடகிழக்கு இணைந்த மாகாணங்கள் என்பதை வடக்கில் உள்ள அனைத்துக் கட்சிகளும் உணர்ந்து செயற்பட வேண்டும். கிழக்கில் தேர்தல் நடக்கும் போது ஒரு கொள்கையும் வடக்கில் தேர்தல் நடக்கும் போது இன்னொரு கொள்கையுமென செயற்படுவதை வடகிழக்கு தமிழர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

வடக்கில் தமிழ்த் தேசியம் பேசுகின்ற பல கட்சிகள், கிழக்கில் என்ன நடந்தாலும் அவை பற்றி அலட்டிக் கொள்வதில்லை. மாறாக் வடக்கில் தேர்தலோ அல்லது வேறு விடயங்களோ நடக்கும் போது வடக்கு மாகாணம் மட்டுமே தமிழர்களின் தாயகம் என நினைத்துக் கொண்டு கூட்டங்களை நடத்துகின்றனர். முடிபுகளை எடுக்கின்றனர். ஊடகங்களுக்கு அறிக்கைகளை விடுக்கின்றனர். இவற்றை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

வடக்கில் உள்ளவர்களுக்காக கிழக்கில் உள்ளவர்களும், கிழக்கில் உள்ளவர்களுக்காக வடக்கில் உள்ளவர்களும் என்ற கோட்பாட்டினை இணைத்து உருவாக்கியதே தமிழ்த் தேசியம். எனவே, தமிழ்த் தேசியம் பேசுபவர்கள் வடக்கிலும் கிழக்கிலும் ஒரே மாதிரியான நிலைப்பாட்டையே மேற்கொள்ள வேண்டும். அது தேர்தலாக இருந்தாலும் சரி வேறு விடயமாக இருந்தாலும் -சரி. வடமாகாண சபை தேர்தலுக்காக வியூகங்களை வகுக்கும் சிவில் சமூகமும், கூட்டமைப்பு கட்சிகள் உள்ளிட்ட அனைவரும் கிழக்கு மாகாணத்தையும் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

மிக முக்கியமாக கிழக்கு மாகாணத்தில் எவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டதோ அதேபோன்று வடமாகாணத்திலும் கூட்டமைப்பு போட்டியிட. வேண்டும்.

மாறாக வடக்கில் உள்ள ஒரு சிலரின் கருத்துக்களை உள்வாங்கி, வருகின்ற வடமாகாணத் தேர்தலில் கூட்டமைப்பு போட்டியிடுமாகயிருந்தால், அது வடகிழக்கு இணைந்ததே தமிழர் தாயகம் என்ற போக்கை நிச்சயம் மாற்றி விடும் என்றார். (அ-2)

## தனது வீட்டு மின் கட்டணத்தை அரசாங்க பணத்திலிருந்து செலுத்தினார் அமைச்சர்

### ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மார்ச் மாத வீட்டு மின்சாரக் கண்டனம் ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 14 ரூபா என ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.


அமைச்சரின் தனிப்பட்ட வீட்டுப் பாவனை மின் கட்டணத்தை அரசாங்கம் பொதுமக்கள் பணத்திலிருந்து செலுத்தி வருவதாக ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

இந்தக் கட்டணமானது அவரது உத்தியோக பூர்வ இல்லத்திற்கானது அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் தனிப்பட்ட வீட்டு மின்சாரக் கட்டணத்தை அரசாங்கமே மின் சார சபைக்குச் செலுத்தி வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களுக்கான மின்சாரக் கட்டணத்தை பொதுமக்கள் பணத்திலிருந்து செலுத்துவதை ஜனாதிபதியும் அமைச்சர்களும் நிறுத்த முடியாதாவென அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

புதிய மின்சாரக் கட்டண உயர்வுக்கு எதிராக மக்கள் நிச்சயமாக போராட்டம் நடத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

புதிய மின்சார கட்டண குறைப்பு தொடர்பில் திருப்தியடைய முடியாது எனவும் மின்சாரம் தொடர்பிலான அரசாங்கத்தின் பிழையான கொள்கைகளே நாடு இன்று பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்க எதுவாக அமையும் என கே.டி.லால்காந்த சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)



இணுவில் பரராச சேகரப் பிள்ளையார் தேர் உற்சவம் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது விநாயகர் திருவீதியுலா வருவதைப் படத்தில் காணலாம்.(படம்: மானிப்பாய் செய்தியாளர்)

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் விசேட அதிரடிப்படை பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப் பதவிக்கான வயதெல்லை விண்ணப்ப முடிவுத்திகதியன்று 18-25 இற்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

விண்ணப்ப தகைமைகளாக க.பொ.த. (சா. தர) பரீட்சையில் கணிதம் மற்றும் ஊடக மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அவசியம். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகள் முதலாவது தடவை ஒரே அமர்வில் 5 பாடங்கள் சித்தியடைந்திருக்க வேண்டும்.

உடல் தகுதி, 5 அடி 2 அங்குல உயரமாகும். விண்ணப்பப்படிவங்களை பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு) பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, ஸ்ரீசம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு-6 என்ற முகவரிக்கு அனுப்பி வைப்பதோடு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரை குறிப்பிட்டு பதிவுத் தபாலில் ஜூலை மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். மேலும் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖ ❖ ❖

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைய இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் வகுப்பு 2 தரம்II கால்நடை வைத்தியதிகாரி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பத் தகைமைகளாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட மிருக வைத்திய விஞ்ஞானத் துறையில் நான்கு வருட பட்டப் படிப்பை நிறைவு செய்திருப்பதோடு, விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 20-35 இற்குட்பட்டதாகவும், பட்டப்பின் படிப்பு தகைமை கொண்ட விண்ணப்பதாரியாயின் வயதெல்லை 40 ஆகவும் இருக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை ஜூன் மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், நால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், த.பெ.இல. 13, கெட்டம்போ, பேராதனை என்ற முகவரியுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **இலங்கை கால்நடை வைத்திய அதிகாரி** என மிகத் தெளிவாக குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖ ❖ ❖

உணவு ஆணையாளர் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தானிய ஆய்வாளர் - தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குரிய போட்டிப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகளின் தகைமைகளாக க்.பொ. த. (சா.து) பரீட்சையில் சிங்களம்,கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் ஏனைய பாடங்களுடன் ஆகக் குறைந்தது 6 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன், க.பொ.த. உயர் தர பரீட்சையில் இரசாயன விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம் உட்பட மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தலுடன், தேசிய உயர் தொழில்நுட்ப டிப்ளோமா (விவசாயம்) கற்கை நெறியில் தராதரப் பத்திரத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.HNDT (Agu culture)விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18-30 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப படிவங்களை ஜுன் 24 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிவாரி பரீட்சைப் பிரிவு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,பெலவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தானிய ஆய்வாளர் - தரம்III) பதவிக்கான பரீட்சை 2013" என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை எதிர்வரும் 23 ஆம் திகதி வெளியாகவுள்ள வர்த்தமானி பத்திரிகையிலோ அல்லது வலம்புரி அலுவலகத்திலோ பார்வையிடலாம். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பராக் ஒபாமா

### பாலியல் சம்பவங்களால்

# எமது நாட்டிற்கு அவமானம்

## குமுறுகிறார் அமெரிக்க ஜனாதிபதி

**அமெரிக்க இராணுவத்தில் பாலியல் சம்பவங்கள் நடப்பது வெட்கக்கேடாகவும், அவமானமாகவும் இருப்பதாக ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.**

அமெரிக்க இராணுவத்தில் பாலியல் சம்பவங்கள் நடைபெறுவது தொடர்பான செய்திகள் ஊடகங்களில் வெளிவந்தன. இதையடுத்து, அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் சக் ஹேகல், முப்படைகளின் தளபதி மார்ட்டின் டெம்ப்சே ஆகியோருடன் ஜனாதிபதி ஒபாமா முக்கிய விவாதம் ஒன்றை நடத்தினார். அதன பின் அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

இராணுவத்தில் பாலியல் சம்பவங்கள் நடப்பது குற்றம் மட்டுமின்றி வெட்ககரமானதும், அவமானகரமானதும் ஆகும். இது இராணுவத்தின் திறனைக் குறைத்துள்ளது. எனவே, நாட்டின் பாதுகாப்புக்கும் இது ஆபத்தானதாகும். சமீப காலமாக இராணுவத்தைப் பாதித்து வரும் இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க இராணுவத் தலைமை உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்று நம்புகிறேன்.

இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான முன் முயற்சிகளை எடுக்குமாறு பாதுகாப்புத் துறை அமைச்சனிரயும் முப்படைத் தளபதியையும் நான் கேட்டுக் கொண்டுள்ளேன்.

இதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க வேண்டியுள்ளது. குற்றம் இழைத்தவர்கள் அதற்கான விளைவுகளைச் சந்தித்தே ஆக வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் முன்வந்து புகார் அளிக்கும் சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டும் என்றார் ஒபாமா.

**சிரியா விவகாரம்**

அமெரிக்கா சென்றுள்ள எகிப்து பிரதமர் ரீசெப்தாயிப்எர்டோகனுடன் இணைந்து வோஷிங டனில் செய்தியாளர்களைச் சந்தித்த ஒபாமா, சிரியா பிரச்சினை என்பது சர்வதேசப் பிரச்சினையாகும். சிரியாவில் அமைதியைக் கொண்டுவர தீர்வு காண்பதற்காக, இதில் சம்பந்தப்பட்டுள்ள பல்வேறு தரப்பினருடனும் இணைந்து பணியாற்றவே விரும்புகிறோம்.

சிரியாவில் அஸாத் ஆட்சிக்கு எதிராக அமெரிக்கா ஒருதலைப்பட்சமான நடவடிக்கை எதையும் எடுக்காது. அங்கு அமைதியை ஏற்படுத்தும் இலக்கை எட்ட சர்வதேசத் தோழமை நாடுகள் மற்றும் சிரியாவின் எதிர்தரப்புக்கு அமெரிக்கா ஆதரவு அளிக்கும் என்றார்.

## குரங்கை கொன்ற குற்றத்துக்காக அமெரிக்காவில் விசித்திர தண்டனை

அமெரிக்காவில் குரங்கை கொன்ற இளைஞனுக்கு 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த 7 வருடங்களில் ஒரு வருடம் மிருகங்களுடன் காலம் கழிய வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது அமெரிக்க நீதிமன்றம்.

அமெரிக்காவின் இடாஹோ நகரை சேர்ந்தவர் மைக்கேல் வாட்கின்ஸ் (வயது 22). கடந்த நவம்பர் 17ஆம் திகதி அங்குள்ள மிருக காட்சி சாலை ஒன்றிற்குள் இரவு வேளையில் உட்புகுந்த மைகேல் இரு பட்டாஸ் வகை குரங்குகளை பார்த்துள்ளான். அவற்றை திருடி செல்வதற்கு முயற்சி செய்த மைக்கேல் தன்னிடம் இருந்த சாக்கு பைக்குள் அவற்றை பிடித்து திணித்தான். இந்த முயற்சியில் ஒரு குரங்கு தப்பி சென்றது. இதனை தொடர்ந்து சென்ற அவன் அந்த குரங்கினை கொடூரமாக அடித்து கொன்றான்.

இது தொடர்பான வழக்கு மாவட்ட நீதிபதி லின் ஜி. நார்டன் முன் வந்தது. அவர் அவனுக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பு கூறினார். அவற்றில் இரு வருடங்கள் உறுதி செய்யப்பட்டு உள்ளது. மிருக வதைக்காக அதிக அளவாக 6 மாதங்கள் தண்டனையும் விதிக்கப்பட்டு உள்ளது. மேலும், மைக்கேலுக்கு வழங்கப்பட்ட தண்டனை அவனுக்கு ஒரு பாடமாக இருக்கவேண்டும் என்று கருதிய நீதிபதி, அவனுக்கு மிருகங்களோடு ஒரு வருடம் காலம் கழிக்க வேண்டும் என்ற தண்டனையையும் விதித்து உத்தரவிட்டு உள்ளார். மீதமுள்ள தண்டனை குறித்து ஒரு வாரத்தில் அதிகாரிகள் முடிவு செய்வார்கள் என கூறப்படுகிறது.

பட்டாஸ் வகை குரங்குகள் அனைவருடனும இயல்பாக பழகுபவை. கடந்த டிசம்பரில் நியூயோர்க் நகரின் சிரகியூஸ் பகுதியில் உள்ள ரோசாமண்ட் கிப்பர்டு மிருகக் காட்சி சாலையில் இருந்து இரு குரங்குகள் போய்ஸ் மிருகக் காட்சிசாலைக்கு கொண்டு வரப்பட்டன. அங்கு அவை தனித்து விடப்பட்டன. அவை தாமாக ஒரு வாழ்விடத்தை அமைத்து கொள்ளும் என சுதந்திரமாக திரிய விடப்பட்டன. அவற்றை தத்தெடுதது கொள்வதற்கும் ஏற்ற வகையில் அங்கு விதிமுறைகள் இருந்தன. இந்த நிலையில் தான் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பாக்.ஜனாதிபதி வீட்டைத் தாக்க திட்டம்



பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி வீட்டை தாக்க தலிபான் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக பாகிஸ்தான் உளவுத்துறை அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில்,மேலும் கூறப்பட்டிருப்பதாவது, கராச்சியில் தங்கியுள்ள அரசியல் தலைவர்கள், பொலிஸ் அதிகாரிகள், நீதிபதிகள் உட்பட பலரைத் தாக்க தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

கராச்சியின் புறநகரில் அதிபர் ஆசிப் அலி சர்தாரி ஹபிலாவல் ஹவுஸ்" என்ற ஆடம்பர பங்களாவை சொந்தமாக கட்டியுள்ளார். அதன் மீது தாக்குதல் நடத்தவும் தீவிரவாதிகள் முடிவு செய்துள்ளனர். அப்போது சர்தாரியின் உறவினரும், முக்கிய புள்ளியுமான முஷாபர்தபே என்பவரையும் தாக்க திட்டமிட்டுள்ளனர்.

தீவிரவாதிகளின் தாக்குதல் பட்டியலில் கராச்சி நீதிபதி, 6 பொலீஸ் அதிகாரிகள், 10 அரசியல் தலைவர்கள், 12 மதத்தலைவர்கள், 2 பத்திரிகையாளர்கள், 2 வர்த்தகர்கள் பெயர்களும் உள்ளன. இந்த தாக்குதலில் தலிபான்கள், ஜுந்துல்லா, லஸ்கர் - இ - தொய்பா, லஸ்கர் - இ - ஜான்வி ஆகிய தீவிரவாத அமைப்புகள் ஈடுபட இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## கேன்ஸ் திரைப்பட விழாவில் துப்பாக்கிச் சூடு



பிரான்ஸ் நாட்டில் கேன்ஸ் திரைப்பட திருவிழாவில் துப்பாக்கிச்சூடு நடைபெற்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இத்தாக்குதலில் நடிகர்கள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. 12 நாட்கள் நடைபெறும் கேன்ஸ் திரைப்பட விழாவில் மூன்றாம் நாளான நேற்று பிரான்ஸ் நாட்டின் கேனல் பிளஸ் என்ற தொலைக்காட்சி நிறுவனம், ஒஸ்கார் விருது வெற்றி பெற்ற ஆஸ்திரிய நாட்டை சேர்ந்த கிறிஸ்டோப் வால்ட்ஸ் மற்றும் பிரான்ஸ் நாட்டு நடிகரான டேனியல் ஆடியுயில் ஆகியோரிடம் பேட்டி எடுத்து கொண்டிருந்தது.

நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சியான இதனை பார்வையாளர்கள் அனைவரும் பார்த்துக் கொண்டிருந்தபோது கூட்டத்தில் ஒருவன் திடீரென எழுந்து வானை நோக்கி இரு முறை துப்பாக்கியால் சுட்டுள்ளான்.

இதில் அனைவரும் சிதறி ஓடினர். இதனை தொடர்ந்து அங்கிருந்த பாதுகாவலர்கள் உடனடியாக தாவி சென்று அவனை மடக்கி பிடித்தனர். பின்னர் அவனை சோதனையிட்டபோது கையில் எறி வெடிகுண்டு இருப்பது தெரிய வந்தது. இதனை அடுத்து கூட்டத்தினரை உடனடியாக வெளியேறுமாறு பாதுகாவலர்கள் கூறினர்.

இதனைத் தொடர்ந்து பொலிசார் அவனை கைது செய்து அவனிடம் இருந்த கத்தியை பறிமுதல் செய்தனர். வெடிகுண்டு போலியானது என்பது பின்னர் தெரிய வந்தது.

## பெண்கள் அவுட்

ஈரானில் வரும் ஜூன் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த தேர்தலில் ஜனாதிபதி போட்டியில் கலந்துகொள்ள ஏராளமான பெண்கள் காத்திருந்தனர்.

ஆனால் இந்த நிலையில் அந்நாட்டின் மதத்தலைவர் அயதுல்லா முகமது யாஸ்டி 'ஜனாதிபதி தேர்தலில் பெண்கள் வேட்பாளராக நிற்க வாய்ப்பு இல்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது' எனக் கூறியுள்ளார். ஈரானின் அரசியல் அமைப்பு சட்டத்திலும் கூட ஆண்கள்தான் ஜனாதிபதியாகவரமுடியும்என்றுள்ளது.

## ஜப்பானில் நிலநடுக்கம்

ஜப்பான் நாட்டின் வடகிழக்கு பகுதியில் நிலநடுக்கம் உணரப்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 5.9 ஆக பதிவானது. எனினும் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.1 ஆக பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.


## ஒரு பால் திருமணங்களுக்கு பிரான்சில் அங்கீகாரம்

ஒருபால் உறவுத் திருமணங்களையும் ஒருபால் உறவு ஜோடிகள் குழந்தை தத்தெடுத்துக்கொள்வதையும் சட்டபூர்வமாக அங்கீகரிக்கும் சர்ச்சைக்குரிய சட்ட மசோதாவில் பிரஞ்சு ஜனாதிபதி ஃபிரான்சுவா ஒல்லோந்த் கையொப்பமிட சட்டம் அமுலுக்கு வந்துள்ளது.

ஒருபால் உறவுக்கு இப்படியான சட்ட அங்கீகாரங்களை வழங்கும் உலகின் 14ஆவது நாடாக பிரான்ஸ் வந்துள்ளது.


இந்த சட்டம் கொண்டு வரப்படுவது தொடர்பில் இந்நாட்டில் மாதக்கணக்கில் சூடான அரசியல் விவாதங்கள் நடந்துவந்தன. இந்நிலையில், இச்சட்டத்தை எதிர்த்து முறையீடு செய்திருந்தவர்களின் கோரிக்கையை பிரானஸின் அரசியல் சாசன நீதிமன்றம் நிராகரித்திருந்து விவாதங்களுக்கு முற்றுப் புள்ளி வைத்துள்ளது.

ஆயிரக்கணக்கான ஒரு பால் உறவு ஜோடிகள் திருமணம் செய்வதற்காக காத்திருக்கிறார்கள் என ஒருபால் உறவுக்காரர் உரிமைக்காக குரல்கொடுக்கும் ஆர்வலர்கள் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகத்துக்கு வருகிறார் சிம்பு



காதல் சர்ச்சை, சகநடிகர்களுடன் மோதல் என பல பிரச்சினைகளில் பரப்பரப்பாக பேசப்பட்ட நடிகர் சிம்புவின் நடவடிக்கைகளில் நாளுக்கு நாள் மாற்றங்கள் ஏற்படுவதாக திரையுலக வட்டாரங்கள் கூறுகின்றன. பேச்சில் அனைவரிடமும் மென்மையை கடைப் பிடிக்கிறார். அத்துடன் ஆன்மீக செயற்பாடுகளிலும் ஈடுபட தொடங்கியுள்ளார்.

சிம்புவுக்கு பிடித்த உணவாக இருப்பது அசைவம். சைவத்தில் நாட்டமில்லாது அசைவத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சிம்பு தற்போது அசைவ உணவுகளை சாப்பிடுவதை தவிர்த்துவருகிறார். நட்சத்திர ஹோட்டல்களில் நடக்கும் விருந்துகள், விழாக்களில் பங்கேற்பதையும் நிறுத்தி உள்ளார். நண்பர்களுடன் சுற்றி காலத்தைக் கடத்துவதையும் குறைத்துக் கொண்டுள்ளார். இப்போது அடிக்கடி தனியாக கண்களை மூடி பத்மாசனத்தில் உட்கார்ந்து தியானம் செய்து வருகிறாராம் சிம்பு.

# குவிகிறது வாய்ப்புக்கள்



இரண்டாவது இன்னிங்சில் களமிறங்கிய, சிம்ரன், தேவயானி போன்ற நடிகைகளே தோற்றுவிட்ட நிலையில் மீண்டும் முதல் ரவுண்டை போலவே தற்போது பிசியாக நடித்து வருகிறார் நயன்தாரா.

தமிழில் 'வலை', 'ராஜாராணி' உள்ளிட்ட படங்களில் நடித்துவரும் அவர், தற்போது வித்யா பாலன் நடித்த, 'கஹானி' படத்தின் தமிழ் தெலுங்கு ரீ-மேக்கில் நடித்து வருகிறார்.

ஹரி இயக்கும், 'அருவா' படத்திலும், நயன்தாரா தான், ஹீரோயினாம். 'ஐயா' படத்துக்காக, கேரளாவில் இருந்து நயன்தாராவை தமிழுக்கு அழைத்து வந்ததே ஹரி தான்.

அதனால் அவரே தன்னை மீண்டும் அழைத்திருப்பதால் புதிய உற்சாகத்தில் இருக்கிறார் நயன்தாரா.

## தெனாலிராமனில் வடிவேலுவின் பாடல்

நீண்ட இடை வேளைக்குப் பின்பு தெனாலிராமன் படத்தில் நடிக்கும் வடிவேலு, அப்படத்திற்கு பாடல் ஒன்றை பாடியிருக்கிறார்.

போட்டா போட்டி படத்தை இயக்கிய யுவராஜ் இயக்கும் கஜ புஜ கஜ தெனாலிராமனும் கிருஷ்ணதேவராயரும் என்ற படத்தில் நடித்து வருகிறார்.

இதில் வடிவேலு தெனாலிராமன், கிருஷ்ணதேவராயர் என இரட்டைக் கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இமான் இசையமைக்கும் இப்படத்தை ஏ.ஜி.எஸ்., நிறுவனம் தயாரிக்கிறது.

படத்தில் வடிவேலு நீண்ட இடைவெளிக்குப் பின்பு இமான் இசையில் பாடல் ஒன்றையும் பாடியிருக்கிறார். இந்த தகவலை இசையமைப்பாளர் இமான் தெரிவித்துள்ளார்.

இதுவரை 31 பாடல்கள் பாடிய வடிவேலு, கடைசியாக 12 வருடத்திற்கு முன்பு என் புருஷன் குழந்தை மாதிரி படத்தில் பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒரே நேரத்தில் இரு படங்கள்

கொலிவுட்டில் சூர்யா நடிக்கும் சிங்கம் 2 படப்பிடிப்பு முடிந்த நிலையில், தற்போது ஒரே நேரத்தில் இரண்டு படங்களில் நடிப்பதற்கு தீர்மானித்திருக்கிறார். கௌதம் வாசுதேவ மேனன், லிங்குசாமி இருவரின் படங்களில் யாருடைய படம் முதலில் என்ற சர்ச்சை, குழப்பங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் விதமாக இரண்டு படங்களிலும் ஒரே நேரத்தில் நடிப்பது என முடிவு செய்துள்ளார்.

கௌதம் இயக்கத்தில் நடிக்கும் துருவநட்சத்திரத்தின் படப்பிடிப்பு தொடங்கிவிட்டது. படத்திற்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார்.

இதனையடுத்து சூர்யா லிங்குசாமி படத்தில் நடிக்க இருக்கிறார். படப்பிடிப்பு ஓகஸ்ட் மாதம் தொடங்குகிறது. இப்படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக சமந்தா நடிக்கிறார்.

லிங்குசாமி–சூர்யா கூட்டணியில் உருவாகும் படத்திற்கு யுவன்சங்கர்ராஜா இசையமைக்கிறார்.

## 1/2 மணி நேரம் நடனம் ஆட 8 கோடி

டுபாயில் திருமண வீட்டில் அரை மணி நேரம் நடனம் ஆட 8 கோடி ரூபாய் சம்பளம் வாங்கினார் பாலிவுட் நடிகர் ஷாருக்கான்.

நடிப்பது தவிர கடை திறப்பு, விளம்பர படங்கள், நட்சத்திர நிகழ்ச்சி, விருது விழா, ஸ்டார் ஹோட்டல்களில் புத்தாண்டு நடன நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு சந்தர்ப்பங்களில் நடிகர், நடிகைகள் இலட்சணக் கணக்கில் கல்லா கட்டி வருகின்றனர்.

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் தவிர இப்போது திருமண வீடுகளில் நடனம் ஆடுவதற்காக அதிரடியாக சம்பளம் கேட்கிறார்களாம்.



சமீபத்தில் அதிகபட்ச சம்பளம் கேட்டு அசத்தியிருக்கிறார் ஷாருக்கான். திருமணத்துக்கு வந்து நிகழ்ச்சியில் பங்கேற்று நடனம் ஆடுவதற்காக இவர் ரூ. 8 கோடி கேட்டாராம்.

இது குறித்து பாலிவுட் பிரமுகர் கூறுகையில், துபாயில் நடந்த திருமண வரவேற்பு நிகழ்ச்சி ஒன்றில் அரை மணி நேரம் நடனம் ஆட ஷாருக்கானை கேட்டார்கள்.

இதற்கு அவர்கள் ரூ.8 கோடி சம்பளம் கொடுக்க தயார் என்ற போது ஓகே சொன்னார். திருமண விழாக்களில் நட்சத்திரங்கள் நடன நிகழ்ச்சிகளில் பங்கேற்பது தற்போது பேஷன் ஆகி வருகிறது.

தாங்கள் ஆசைப்பட்ட நடிகரோ, நடிகையோ வந்து ஆடுவதற்கு எவ்வளவு சம்பளம் கேட்டாலும் தர தயாராக இருக்கிறார்கள் என்றார்.



2012இல் மக்களை அதிகம் கவர்ந்த பெண்கள் பற்றிய கருத்துக்கணிப்பில் தமன்னாவுக்கு முதலிடம் கிடைத்துள்ளது. இதனால் சந்தோஷத்தில் சிறகடிக்கும் தமன்னா கருத்துவெளியிடுகையில்,

என் தோற்றம் என்பது இல்லாமல் சினிமாவில் எப்படி நடிக்கிறேன் என்பதை வைத்து முதலிடத்துக்கு என்னை தேர்வு செய்துள்ளனர். குடும்ப பாங்காகவும், ஜாலியான பாத்திரங்களிலும் நடித்து வருகிறேன். ஆண்கள் மட்டுமின்றி பெண் ரசிகைகளும் எனக்கு நிறைய இருக்கிறார்கள்.

ரசிகர்கள் எனது கட்அவுட்களுக்கு பூஜை, பால்அபிஷேகம் செய்கின்றனர். இது மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனாலும் இந்த மரியாதைகள் நிரந்தரம் அல்ல என்று எனக்கு தெரியும்.

இது வரும் போகும். தமிழில் அஜித்துடன் ஒரு படத்தில் நடிக்கிறேன். இந்த வருடம் அப்படம் ரிலீசாகும். பட உலகம் போட்டி நிறைந்ததாக உள்ளது. இன்று நான் இருக்கிறேன். நாளை வேறொருத்தர் வருவார். நம்பர் ஒன் இடம் என்பது நிரந்தரமானது அல்ல. இவ்வாறு தமன்னா கூறினார்.


## இயக்குநர் ஆவாரா சிநேகா

ரசிகர்களின் மனதை கொள்ளை கொண்ட புன்னகை இளவரசி சினேகா புதிய படத்தை தயாரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார். இதற்கு காரணம், சமீபகாலமாக சின்ன பட்ஜெட் படங்கள் தொடர்ந்து வெற்றி பெற்று வருவதுதான்.

அதனால் இத்தனை வருடம் சினிமாவில் இருந்ததற்கு எதையாவது சாதிக்க வேண்டும் என்று கருதும் சிநேகா, சமீபத்திய ரசனைக்கேற்ற கதைகளை தேடிக் கொண்டிருக்கிறார். தான் எதிர்பார்த்தது போன்ற கதை கிடைத்ததும் அதற்கேற்ற நடிகர்- நடிகையை தேடுவாராம்.

ஒருவேளை அந்த கதை தனக்கு பொருத்தமானதாக இருந்தால் தானே கதாநாயகியாகவும் நடிப்பாராம். தற்போது பிரகாஷ்ராஜ் இயக்கத்தில் அவருக்கு ஜோடியாக உன் சமையல் அறையில் என்ற படத்தில் நடித்து வரும் சிநேகா, சிறிய பட்ஜெட்டில் தரமான படத்தை எப்படி எடுப்பது என்கிற இரகசியத்தை பிரகாஷ்ராஜிடமிருந்துதான் கற்று கொண்டாராம்.

இந்த விடயத்தைக் கேள்விப்பட்ட நடிகர் ஸ்ரீகாந்தும், இப்போது சொந்த படமெடுக்கும் யோசனையில் இருக்கிறார். ஆனால் அப்படி அவர் எடுக்கும் படத்தில் அவர்தான் கதாநாயகனாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாது

## வைகோ கர்ஜிப்பு



பொதுநலவாய நாடுகளின் அமைப்பில் இருந்து இலங்கையை நீக்க வேண்டும் என்று சென்னையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் வைகோ தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் முள்ளிவாய்க்கால் படுகொலையில் உயிர் நீத்தவர்களுக்கு 4ஆம் ஆண்டு நினைவேந்தல் பொதுக் கூட்டம் சென்னை புரசைவாக்கம் தானா தெருவில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அக்கூட்டத்தில் அவர் உரையாற்றுகையில்,

கடந்த நான்கு வருடங்களுக்கு முன் இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்கள் இலங்கை அரசால் இனப் படுகொலை செய்யப்பட்டனர். இந்த இனப்படுகொலைக்கு கூட்டு குற்றவாளியாக இந்திய அரசு செயற்பட்டது.

ஆயினும் இலங்கை அரசை கூண்டில் நிறுத்தவில்லை. எனவே, அவர்களை தண்டிப்பது மட்டுமன்றி ஈழத் தமிழர்களை கொடுமைகளில் இருந்து காக்கும் பொறுப்பும் ஈழத்தில் தமிழீழத்தை அமைத்துக் கொடுக்கும் பொறுப்பும் தாய்த் தமிழர்களுக்கு உள்ளது.

றார். இலங்கையில் மனித உரிமை நசுக்கப்பட்டு இனப்படுகொலை நடைபெற்றுள்ளதால் இம் மாநாட்டில் இங்கிலாந்து கலந்து கொள்ளக் கூடாது என்று லண்டனில் கோரிக்கை எழுந்துள்ளது.


> **"இனப்படுகொலை நிகழ்த்தியுள்ள இலங்கை அரசு குறித்த அமைப்பில் இருந்து நீக்கப்பட வேண்டும். இலங்கையில் தமிழீழம் மலரும். அதற்கு தாய் தமிழர்களாகிய நாம் போராட வேண்டும்.**
>
> **-வைகோ-**

எதிர்வரும் நவம்பர் மாதம் 17, 18 ஆம் திகதிகளில் பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெற உள்ளது. அதன்பின் 2 வருடத்திற்கு குறித்த அமைப்பிற்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமை வகிக்க இருக்கி

இனப்படுகொலை நிகழ்த்தியுள்ள இலங்கை அரசு குறித்த அமைப்பில் இருந்து நீக்கப்பட வேண்டும். இலங்கையில் தமிழீழம் மலரும். அதற்கு தாய் தமிழர்களாகிய நாம் போராட வேண்டும் என அவர் மேலும் கூறினார். (அ-2)

# 26 இந்திய மீனவர்களை விரைவாக விடுவியுங்கள்

## இலங்கையிடம் இந்தியா கோரிக்கை



இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள 26 இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை அரசிடம் வெளியுறவு அமைச்சர் சல்மான குர்ஷித் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் இலங்கை வெளியுறவு அமைச்சர் பீரிஸ் உடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

குர்ஷித் - பீரிஸ் பேச்சுவார்த்தை குறித்து, மத்திய அரசு வட்டாரங்கள் கூறியதாவது.

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள 26 இந்திய மீனவர்களை விரைவாக விடுவிக்க வேண்டும். 2012 நவம்பரில் கடலில் மீன் பிடித்து கொண்டிருந்த ஐந்து இந்திய மீனவர்கள் போதை மருந்து கடத்தியதாக இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீதான வழக்குகளை விரைவாக முடித்து உடனடியாக விடுவிக்க வேண்டும் என குர்ஷித் வலியுறுத்தினார். இலங்கை வடக்கு மாகாண தேர்தலையொட்டி 13ஆவது சட்ட திருத்தம் கொண்டு வரப்படும் என எதிர்பார்த்ததாகவும் அதை உரிய வகையில் செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

வடக்கு மாகாணத்தில் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தனியார் நிலங்களை இராணுவம் எடுத்துக் கொண்டதாக பத்திரிகைகளில் வெளிவந்த தகவல்கள் பற்றியும் குர்ஷித் விசாரித்தார் என அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-2)

**பாரதச் செய்தி**

# மலேசியாவில் வாழும் இந்திய தமிழர்களை காப்பாற்றுக

## பாரதீய ஜனதா கோரிக்கை



மலேசியாவில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்கள் கடந்த மூன்று மாதங்களாக எவ்வித காரணங்களுமின்றி சுட்டுக் கொலை செய்யப்படுகின்றனர். எனவே, இம்மக்களைப் பாதுகாப்பதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாரதீய ஜனதா கட்சி மாநில தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

பல நூற்றாண்டுகளாக மலேசியாவில் வாழ்ந்து மலேசிய இந்தியர்கள் என்று அழைக்கப்படும் தமிழர்கள், அந்த நாட்டின் பிரஜைகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ள தமிழர்கள், இத்தகைய துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டு வருவது மிகவும் வேதனை அளிக்கக்கூடிய ஒன்றாகும்.

தமிழர்களுடைய நலன் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் மத்திய காங்கிரஸ் அரசு பாராமுகமாகவே உள்ளது. இதனை ஒரு போதும் நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. மத்திய அரசின் இந்த மாற்றாந்தாய் மனப்பான்மை தொடர்ந்து உலகத்தமிழர்களுக்கு பல பின்னடைவுகளை ஏற்படுத்தி வருகிறது.

மத்திய காங்கிரஸ் அரசு உடனடியாக இதனைக் கைவிட வேண்டும். மலேசியாவில் வாழும் தமிழர்களின் உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் உரிய பாதுகாப்பு ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். குற்றவாளிகள் உடனடியாக கைது செய்யப்பட்டு அந்நாட்டின் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். தமிழக முதலமைச்சரும் இதனை மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்றார். (அ-2)

# ஒபாமா-மன்மோகன் சந்திப்பு



பிரதமர் மன்மோகன் சிங்கை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சந்திக்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கிடையேயான பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற உள்ளது. அதற்காக அமெரிக்கா வரும்படி பிரதமர் மன்மோகன்சிங்குக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பெரும்பாலும் எதிர்வரும் செப்டெம்பர் அல்லது டிசம்பர் மாதங்களுக்கு இடையே மன்மோகன்சிங்கின் அமெரிக்கப் பயணம் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

சமீபத்தில் டில்லிக்கு வருகை தந்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து பேச முடிவு செய்திருந்தார்.


எனவேதான் மன்மோகன் சிங்கை அமெரிக்காவுக்கு வரும்படி அழைப்பு விடுத்துள்ளார்.

முன்னதாக அமெரிக்க வெளியுறவுத்துறை துணை மந்திரி வில்லியம்பர்ன்ஸ் இதுகுறித்து இந்திய அதிகாரிகளிடம் கூறியுள்ளார்.

அதையடுத்து இரு தலைவர்களின் சந்திப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. மன்மோகன்சிங் - ஒபாமா சந்திப்பின்போது உள்நாட்டு அணு கொள்கை, தீவிரவாதத் தடுப்பு, ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு பிரச்சினை, விண்வெளித் துறை வளர்ச்சியில் நாடுகளின் ஒத்துழைப்பு மற்றும் கல்வி குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு பிரதமர் மன்மோகன்சிங்கை மிகவும் பிடிக்கும். இவர்கள் நண்பர்கள் என்ற கோணத்தில் அடிக்கடி சந்தித்துள்ளனர்.

ஆனாலும் இருநாட்டு தலைவர்களுக்கு இடையேயான சந்திப்பு என்ற ரீதியில் தற்போது இவர்கள் இருவரும் 2ஆவது முறையாக சந்தித்துப் பேச உள்ளனர். (அ-2)



ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் ஆனந்த் சர்மா தலைநகர் டோக்கியோவில் பிரதமர் ஷின்ஜோ அபேயை சந்தித்ததை படத்தில் காணலாம்.

# இந்தியாவுக்கு இயற்கை எரிவாயு ஏற்றுமதி செய்ய அமெரிக்கா அனுமதி

அமெரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு இயற்கை எரிவாயுவை ஏற்றுமதி செய்ய அந்நாட்டு அரசு விதிமுறைகளுடன் கூடிய அனுமதியை வழங்கியுள்ளது.

அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் திரவ இயற்கை எரிவாயுவை அமெரிக்காவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்ட நாடுகளுக்கு மட்டுமே ஏற்றுமதி செய்ய முடியும்.

இந்தியா இதுபோன்ற ஒப்பந்தத்தை அமெரிக்காவுடன் செய்து கொள்ளவில்லை. எனினும், இந்தியாவுக்கு இயற்கை எரிவாயுவை ஏற்றுமதி செய்ய அமெரிக்காவின் எரிசக்தித்துறை, சிறப்பு விதி முறைகளுடன் கூடிய அனுமதியை அளித்துள்ளது.

இதனால் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள குயின்டானா தீவில் உள்ள ஏற்றுமதி முனையத்திலிருந்து திரவ இயற்கை எரிவாயு இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும். இந்தியாவின் எரிசக்தி தேவையின் ஒரு பகுதியை இதன் மூலம் பூர்த்தி செய்ய முடியும். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மனிதனும் பிறந்தது வெற்றிப் பெறத் தான். தோல்வியடைய அல்ல.
- ஹென்றி டேவிட் தோரா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நம்பிக்கையில்லா வெற்றிக்கு விழா எடுப்பது அர்த்தமற்றது

வன்னிப் போரின் வெற்றியை இலங்கை அரசு கொண்டாடுகின்றது.

ஒரு சாராருக்குக் கிடைத்த வெற்றி என்பது இன்னொரு பகுதியினருக்குத் தோல்வியாக அமைவது வழமையாயினும் இலங் கைத்தீவுக்குள், ஒரு இனம் இன்னொரு இனத்தின் படுகொலைப் பாதகத்தில் வெற்றி கண்டு அதனை விழாவாகக் கொண்டாடுவது உலக வரலாற்றில் புதுமையும் மிகப்பெரும் கொடுமையுமாகும்.

விடுதலைப் புலிகளை அழித்தமை சிங்களவர்களுக்கு வெற்றி என்று யாரேனும் வாதிடலாம்.

நாம் இங்கு பேசுவது வன்னியில் உயிர் விட்ட அப்பாவித் தமிழ் மக்களைப்பற்றியதாகும்.

இந்த நாட்டின் பிரஜைகளைக் கொன்று வெற்றி விழா எடுப்பதென்பது எக்காலத்திற்கும் ஏற்புடையதாகாது.

அதேநேரம் வெற்றி பெற்றவர் விழா எடுத்து குதூகலிப்பதென்பது,

தோல்வியுற்றவரின் - இழப்பைச் சந்தித்தவரின் அழுகையை நிறுத்துவதற்கானதல்ல என்பதை வெற்றிவிழா உபயகாரர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் வெற்றிவிழா கொண்டாடலாம். நாங்கள் இழந்தவர்களை நினைந்து அழவும் முடியாதா?

விடுதலைப்புலிகளைத் தோற்கடித்து விட்டதற்காகவே வெற்றிவிழா என்றால், தமிழர்கள் தங்கள் உறவுகளுக்காக அழுவதையும் மோட்ச தீபம் ஏற்றுவதையும் கண்டு பொறுக்க முடியாமல், போர்க்கால எடுப்பில் சீருடையினரைச் சந்திகளிலும் சந்நிதிகளிலும் குவிப்பது எதற்காக?

வெற்றிவிழாவுக்கு வில்லங்கம் வந்துவிடக் கூடாதென்பதற்காகவா?

வெற்றி என்று நிறுதிட்டமாகத் தீர்மானித்த பின்பே விழா எடுத்திருப்பீர்களாயின் தமிழ் மக்கள் தொடர்பில் நீங்கள் அஞ்சத் தேவையில்லை.

மாறாக வெற்றி தற்காலிகமானதென்று பயம் கொண்டால், வெற்றிக்கு விழாத் தேவையிருக்காது.

எதுவாயினும் தமிழ் மக்களை எதிரிகளாகவே பார்க்கின்ற உங்கள் பார்வையில் திருத்தம் ஏற்படாதவரை, இந்த நாட்டில் நிம்மதி ஏற்படாது.

ஆக, இலங்கை அமைதியும் சமாதானமும் நிறைந்த நாடாக மாறவேண்டுமாயின் இனவாதமும் மதவாதமும் வேரறுக்கப்படவேண்டும்.

இலங்கை பௌத்த நாடு என்று இப்போதும் மார் தட்டும் மடமைத் தனங்கள் எழுந்து நின்று ஏப்பம் விட்டால் - பௌத்த மதம் தவிர்ந்த ஏனைய மதங்களுக்கு இந்த நாட்டில் இடம் இல்லை என்று ஊளையிட்டால் - இதனை மதவாத முழக்கம் என்று ஆட்சியாளர் நினைக்கா விட்டால், பௌத்த மதவாதப் பேய்கள் சிங்கள மக்களை சன்னதம் கொள்ளவே வைக்கும்.

எனவே இனவாதமும் மதவாதமும் வேரறுக்கப்பட்டு நாங்கள் அனைவரும் இலங்கையர்கள் என்ற தேச உணர்வு கட்டியெழுப்பப்பட வேண்டும்.

இதற்கான வழிவகைகளை ஏற்படுத்துவதே இன்றைய தேவையாகும்.

# கறுப்புத் தேயிலை உற்பத்தியில் இலங்கைக்கு இரண்டாமிடம்

(கொழும்பு)

இவ்வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் மார்ச் மாதம் வரையான முதல் காலாண்டில் சர்வதேச அளவில் கறுப்புத் தேயிலை உற்பத்தி 18.18 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கறுப்புத்தேயிலை உற்பத்தி கடந்த வருடத்தின் இதே காலாண்டில் 26.48 கோடி கிலோவாக இருந்த நிலையில் இவ்வருடம் முதல்காலாண்டில் 31.48 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது.

இந்த காலாண்டில் கென்யாவின் கறுப்பு தேயிலை உற்பத்தி 4.48 கோடி கிலோவிலிருந்து 11.73 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது.

இதையடுத்து கறுப்பு தேயிலை உற்பத்தியில், கென்யா முதலிடத்தையும், இலங்கை 8.02 கோடி கிலோ கறுப்பு தேயிலை உற்பத்தி செய்து இரண்டாம் இடத்தையும் பிடித்துள்ளன.

இந்தியாவின் கறுப்பு தேயிலை உற்பத்தி 49.30 இலட்சம் கிலோ அதிகரித்து 7.92 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது.

உலகளவில் இந்தோனேஷியா மற்றும் மாலைத்தீவு ஆகிய நாடுகளைத் தவிர்த்து ஏனைய நாடுகளிலும் கறுப்பு தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது.

மாலைதீவு நாட்டில் தேயிலை உற்பத்தி 36 இலட்சம் கிலோ சரிவடைந்து 1.77 கோடி கிலோவாகவும், இந்தோனேசியாவில் இதன் உற்பத்தி 20 இலட்சம் கிலோ குறைந்து 1.37 கோடி கிலோவாகவும் சரிவடைந்து உள்ளது. (அ-2)

# மாட்டுவண்டி சவாரி

(யாழ்ப்பாணம்)

அண்ணமார் ஆலய கட்டட வளர்ச்சி நிதிக்காக புத்தூர் கிழக்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு புத்தூர் கிழக்கு சவாரித் திடலில் இடம்பெறவுள்ளது. (அ-5)

# யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

கருவலகஸ் வெவ பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட புளியங்குளம் பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்றைய தினம் அதிகாலையில் இடம்பெற்றுள்ளது.

குபுக்கல, இஹல புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான பி.எச்.பி.புஞ்சிலால் வயது 66 என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார். இது தொடர்பாகத் தெரியவருவதாவது,

தனது மகளின் வீட்டுக்கு பின்புறமாக உள்ள தனது தோப்பில் தென்னங்கன்றுகளை காட்டு யானைகளிடமிருந்து பாதுகாப்பதற்காக தோப்பில் உள்ள கொட் டிலில் அன்றைய தினம் இரவுவேளையிலிருந்து இவர் காவல் இருந்துள்ளார். இதன் போது அங்குவந்த காட்டுயானையை துரத்த முற்பட்ட வேளையிலேயே இவரை யானை தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணையை சாலியவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# கைலாச வாகன வெள்ளோட்டம்

(புன்னாலைக்கட்டுவன்)

கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்பாள் ஆலய திருக்கைலாச வாகன வெள்ளோட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது என கோவில் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ-78)

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦


(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மேற்கு சந்திர சேகரப் பிள்ளையார் ஆலயத்திற்கு புதிதாக அமைக்கப்பட்ட கைலாச வாகனத்தின் வெள்ளோட்ட நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

அத்துடன் நாளை திங்கட்கிழமை மாலை 8 மணிக்கு புதிய கைலாசவாகனத்தில் சுவாமி எழுந்தருள்வார் எனவும் ஆலய உபயகாரர்கள் அறிவித்துள்ளனர். (அ-2)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### கண்டேன்



சாந்தம் பொறுமையன்பு தாங்கொண்ட வடியார்
மாய்ந்துபோ காவண்ண மருள்தரும் ஒருவனை
காந்தள் முல்லை கானார் மல்லிகை
ஏந்திருக்கும் நல்ல இலங்கையிற் கண்டேன்
பொன்னார் மேனி புரிசடை யண்ணலை
பூதங்க ளைந்தும் பொருந்திநிற் பானை
தென்னா தென்னா வெனவண்டு பாடும்
சீரார் இலங்கை மாநகர் கண்டேன்

# வாழ்க்கையின் வெற்றிக்கு உதவிய கரங்களை நாம் மறந்து விடலாமா?

யூதர்களுக்கு அஞ்சி சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடிவைத்திருந்தார்கள். அப்போது இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" என்று வாழ்த்தினார். இவ்வாறு சொல்லிய பின் அவர் தம் கைகளையும் விலாவையும் அவர்களிடம் காட்டினார்.

வேதாகமத்தின் இப்பகுதி இன்று எமக்குத் தரப்படுகின்றது. எம் நல்வாழ்வுக்காக ஆணிகளால் துளையிடப்பட்டு காயப்பட்ட தம் கைகளை காட்டினார் எனும் பகுதியை நோக்கினார்.

மனிதர்களின் நல்வாழ்விற்காக தங்கள் கைகள் தேயும் அளவுக்குப் பணி புரிந்த பலரை நாம் பார்த்திருக்கின்றோம். இதனை எண்ணும்போது எமக்கு 'எங்கள் மூச்சுக்குள்ளே உண்டு பாட்டுச் சந்தம் என்றும் பாட்டுக்கள்தான் எங்கள் சூரியோதயம்' என்ற பாடல் வரிகளுடன் தருண்

## பரமபிதா காட்டிய பாதை

ஹீரோவாக நடித்த புன்னகை தேசம் படம் ஞாபகத்திற்கு வருகின்றது. பெற்றெடுத்த பெற்றோரும் துரத்திவிட ஒட்டி உறவாடியவர்களும் ஏளனம் செய்ய வாழ்க்கையின் விளிம்புக்குச் சென்ற மூன்று இளைஞர்களை தருண் நண்பர்களாக்கி அவர்களுக்காகத் தன்னைக் கரைத்து மாடாய் வேலை செய்து மற்றவர்களிடம் பரிந்துபேசி அவர்களுக்காக மற்றவர்களிடம் ஏளனம் பெற்று அவர்களை இசையில் சாதனை புரியவைத்து நட்புக்குப் பாடம் புகட்டியவர். அந்த நண்பர்களின் பயணப்பைகளையே கூலியாளாக தன் கைகளால் தூக்கிச்சென்று காட்டியவர். எமக்காக தன் கைகளில் ஆணிகளை ஏற்று இயேசு தம் கைகளை இன்று எமக்கும் காட்டுகின்றார். எமது பதில் என்ன?

1492 காலப்பகுதியில் ஜேர்மனியில் ஆர்வம்மிக்க ஆல்பிரட் ட்ரூரர் மற்றும் பிரான்ஸ் க்னிக்ஸ்டெயின் ஆகிய இரு நண்பர்கள் சிறந்த ஓவியர்களாக வேண்டும் எனத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஓரளவு ஓவியம் வரையத் தெரிந்திருந்தார்கள். ஆனால், ஓவியக் கல்லூரிக்குச் சென்று கற்பதற்குத் தேவையான பணமும் இல்லை. அவர்களில் ஒருவர் வேலை செய்து மற்றவர் படிப்பதற்கு பண உதவி செய்வதென்றும் அவ்வாறு படித்தவர் மற்றவருக்கு பின்பு உதவி செய்வதென்றும் உறுதி செய்து கொண்டனர்.

யார் முதலில் படிக்கச் செல்வதைக் கண்டறிய அவர்கள் பூவா தலையா போட்டுப் பார்த்து முடிவெடுத்தனர். ட்ரூரர் முதலில் படிக்கச் சென்றார். க்னிக்ஸ்டெ யின் வேலை செய்யச் சென்றார். ட்ரூரர் மிகத் திறமையான ஓவியர் ஆனார். தம் ஓவியங்களை நிறைய விலைக்கு விற்கத் தொடங்கினார்.

தம்முடைய ஒப்பந்தப்படி ஊருக்குத் திரும்பி தன் நண்பர் க்னிக்ஸ்டெயின் படிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வந்தார். அப்பொழுதுதான் தம் நண்பர் தனக்காகச் செய்திருந்த தியாகத்தை அவர் உணர்ந்தார். தம் நண்பரின் கடுமையான உழைப்புக் காரணமாக அவரது விரல்கள் விறைத்துப்போய் மென்மையான ஓவியம் தீட்டுவதற்கு தகுதியில்லாதவைகளாக இருந்ததைக் கண்டார். க்னிக்ஸ்டெயின் ஓவியர் ஆவதற்கென தன் கனவுகளை மறந்தாலும் வருத்தப்படவில்லை. தம் நண்பர்களுடைய வெற்றியில் இவரும் பெரும் மகிழ்ச்சி கொண்டார். ஒருநாள் ஆல்பிரட் ட்ரூரர் தம் நண்பர் க்னிக்ஸ்டெயின் கைகளைக் கும்பிட்ட படி செபித்துக் கொண்டிருந்த காட்சியை அவர் காணாத போது ஓவியமாகத் தீட்டினார்.

அந்த ஓவியம் விலைமதிப்பில்லாத மிகச் சிறந்த ஓவியமாக மதிக்கப்பட்டது. தம் வாழ்வையும் கைகளின் உழைப்பையும் தானமாகத் தந்த நண்பரின் கும் பிட்ட கைகள் இன்று காலமெல்லாம் மறக்க முடியாத மிகச் சிறந்த ஓவியமாக உலகெங்கும் போற்றப்படுகிறது. இன்று ஓவியக் காட்சிச்சாலைகளில் ட்ரூரர் பல சிறந்த ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டு கண்களையும் மனதையும் கொள்ளையடிக்கின்றன. ஆனால் எல்லோர் உள்ளத்தையும் கண்டிப்பாகக் கவர்வது கும்பிட்ட கைகள் என்ற



அவருடைய நண்பருடைய கரங்களாகும். அந்த ஓவியம் பல இலட்சம் பிரதிகள் உலகெங்கும் பிரதியெடுக்கப்பட்டு விற்கப்பட்டுள்ளது. இந்த ஓவியம் அந்தக் கைகளின் தியாகத்தை, நிபந்தனையில்லாத பேரன்பை, கடுமையான உழைப்பை, நன்றிப் பெருக்கை நினைவுபடுத்துகின்றது.

இயேசுவின் கைகள் இன்னும் மிகப் பெரிய கதையை நமக்குச் சொல்கின்றது. இதோ, என் கைகளைப் பாருங்கள் என இன்று இயேசு கூறுகிறார். நம் நெஞ்சைத் தொடும் இந்தக் காட்சியை சாட்சியாக்கி உயிரோடு வாழ்வதாகக் காட்டுகிறார். எம் மனதில் இயேசுவின் தழும்புகளும் சிலுவைச் சாவும் அழியாது பதிந்திருக்கின்றன.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

இயேசு நமக்கு நல்லதொரு நண்பராகவுள்ளார். வாழ்க்கையில் எம் வெற்றிக்குப் படியாக, ஏணியாக பின்புலத்திலிருந்து உதவிய கரங்களை நாம் மறந்து விடுகின்றோம். நம் வாழ்க்கையில் நாம் முன்னேற தம் கைகளைக் காயப்படுத்தி நமக்கு அன்பைப் பொழிந்து உதவியவர்களை நினைத்துப் பார்க்கிறோமா. நம்முடைய வருங்கால வெற்றிகளும் நமக்காகத் தன்னுயிரைச் சிலுவையில் தந்து ஆணிகள் துளைத்த அந்தக் கரங்களைக்காட்டும் இயேசுவின் கரங்களின் தியாகத்திற்கு எமது சமர்ப்பணம் என்ன? மற்றவர்களின் முன்னேற்றத்திற்கு அவர்களின் முதுகுக்குப் பின்னால் தட்டிக்கொடுக்கவாவது எம் கரங்களைப் பயன்படுத்துவோமா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சூதாட்டத்தில் மேலும் இரு ராஜஸ்தான் வீரர்கள்

சூதாட்ட விவகாரத்தில் ராஜஸ்தான் அணியின் ரகானே, ஹாட்ஜ் என, மேலும் இருவர் ஈடுபட்டுள்ளதாக சூதாட்ட பிரச்சினையில் சிக்கி காவலில் உள்ள அமித் சிங், பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த 2012 தொடரில், டில்லி-ராஜஸ்தான் அணிகள் மோதிய போட்டியில் சூதாட்டம் நடந்துள்ளது. டில்லியில் நடந்த இப்போட்டியில் டில்லியின் (152/6) இலக்கை துரத்திய ராஜஸ்தான் அணிக்கு, கடைசி 7 பந்தில் வெற்றிக்கு 12 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அப்போது பிராட் ஹாட்ஜ் அவுட்டானார்.

அடுத்து கடைசி பந்தில் 2 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், பந்தை சந்தித்த ரகானே (84 ஓட்டங்கள், 63 பந்து), அடிக்காமல் விக்கெட் கீப்பரிடம் விட்டுவிட்டார். ஒரு ஓட்டம் எடுக்க ஓடி வந்த ஓவைஷா 'ரன் அவுட்டானார்". கடைசியில் ராஜஸ்தான் அணி ஒரு ஓட்ட வித்தியாசத்தில் தோற்றது. இதில் ரகானே, ஹாட்ஜ் என, இருவரும் சம்பந்தப்பட்டதாக அமித் சிங் தெரிவித்தாராம்.

**நிர்வாகத்துக்கு தெரியும்**

சூதாட்டம் நடக்கவுள்ளது குறித்து ராஜஸ்தான் அணி நிர்வாகத்துக்கு தெரியும் என்கிறார் சண்டிலாவின் சட்டத்தரணி. இது குறித்து அவர் கூறுகையில்,

சூதாட்டகாரர்கள் தன்னை அணுகியது, நிழல் உலக தாதாக்களின் மிரட்டல் என்பன குறித்து அணி நிர்வாகத்திடம் சண்டிலா தெரிவித்தார். ஆனால், பொலிசிடம் கூறவில்லை. ஆனால், இதெல்லாம் நடக்கத்தான் செய்யும், நீங்கள் போட்டிகளில் மட்டும் கவனம் செலுத்துங்கள், என, நிர்வாகம் தெரிவித்தது, என்றார்.

**ஷில்பாவிடம் விசாரணை**

ராஜஸ்தான் அணி வீரர்கள் சிக்கியது தொடர்பாக, அணி உரிமையாளர் ஷில்பா ஷெட்டி, ராஜ் குந்த்ரா, அணித் தலைவர் டிராவிட்டிடம் விசாரணை நடத்தப்படலாம் எனத் தெரிகிறது. இவர்களுக்கும், சூதாட்டத்துக்கும் தொடர்பு இல்லை என, பொலிசார் ஏற்கனவே தெரிவித்துள்ள நிலையில், இந்த விசாரணை இடம்பெறவுள்ளது.

**ரஞ்சி பணம் பறிமுதல்**

பொலிசாரிடம் சிக்கியுள்ள அங்கித் சவான், மும்பை அணிக்காக 2012-2013 சீசன் ரஞ்சி கோப்பை தொடரில் பங்கேற்றார். கோப்பை வென்ற மும்பை அணிக்கு, மும்பை கிரிக்கெட் சங்கத்தின் (எம்.சி.ஏ.,) சார்பில் ரூ. 2 கோடி பரிசு அறிவிக்கப்பட்டது. இது எதிர்வரும் மே 29 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. இப்போது சவான் 'பிக்சிங்கில்' சிக்கியதால், இவருக்கான பரிசுப் பணத்தை திரும்பப்பெற எம்.சி.ஏ., முடிவு செய்துள்ளது.

**அரசு நடவடிக்கை**

மிகவும் பின்தங்கிய மக்களுக்கான மருத்துவம், இருதயம் சம்பந்தமான சிகிச்சைக்கு நிதி திரட்டும் வகையில், கேரள அரசு சார்பில் 'காருண்யா அதிர்ஷ்டம்" விற்கப்படுகிறது. இதற்கான விளம்பரத்தில் ஸ்ரீசாந்த் நடித்துள்ளார். இப்போது, சூதாட்டத்தில் சிக்கியதால், ஸ்ரீசாந்த் விளம்பரத்தை திரும்பப் பெற கேரள அரசு முடிவு செய்துள்ளது.

**அடுத்த மாதம் திருமணம**

அங்கித் சவான் சகோதரர் நிஹார் சவான் கூறுகையில், நாங்கள் சிறிய குடும்பத்தை சேர்ந்தவர்கள். சவானுக்கு அடுத்த மாதம் திருமணம் நடக்கவுள்ளது. இந்நிலையில் சவான் இதில் ஈடுபட்டிருக்க வாய்ப்பில்லை. சிறிய மீன்கள் எளிதாக சிக்கிவிடும், பெரிய மீன்கள் தப்பித்துவிடும். சவான் விடயத்தில் இதுதான் நடந்துள்ளது என்றார்.

## வளையல் போராட்டம்




பீகார் தலைநகர் பாட்னாவில் மகத் மஹிலா கல்லூரியின் கிரிக்கெட் வீராங்கனைகள் ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்ட வீரரின் படத்திற்கு வளையல் மாலை போட்டு போராட்டம் நடத்திய காட்சி.

# விலகினார் ஷரபோவா

ரோம் டெனிஸ் போட்டி இத்தாலியில் நடைபெற்று வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் கால் இறுதிக்கு முன்னேறிய முன்னாள் நம்பர் வன் வீராங்கனை ரஷ்யாவின் மரியா ஷரபோவா, கால் இறுதியில் இத்தாலியின் சாரா எர்ராணியை சந்திக்க இருந்தார்.

இந்த நிலையில் அவர் திடீரென போட்டியில் இருந்து விலகினார். உடல் தகுதி பிரச்சினை காரணமாக ஷரபோவா போட்டியில் இருந்து விலகியதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## இன்றைய ஆட்டங்கள்

PUNE WARRIORS INDIA


மாலை 4 மணி Vs

DELHI DAREDEVILS

SUNRISERS HYDERABAD

இரவு 8 மணி Vs

KOLKATA Knight Riders



இத்தாலியின் செராஸ்கோ நகரில் நடைபெற்ற சர்வதேச சைக்கிளோட்டப் போட்டியில் வெற்றிவாகை சூடிய பிரிட்டன் வீரர் மார்க் கே[illegible]

# ஐ.பி.எல்.2008- 2012 வரை எதிர்கொண்ட சர்ச்சைகள்

2008ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஐபிஎல் போட்டி மிக வேகமாக பிரபலமடைந்தது. ஆனால் அதே அளவுக்கு சர்ச்சைகளும் பல்கிப் பெருகியுள்ளன. இதுவரை ஐபிஎல் போட்டிகளில் நடைபெற்ற பிரச்சினைகள் மற்றும் சர்ச்சைகளின் விவரங்கள்:

2008:

- ✔ மொஹாலியில் நடைபெற்ற ஆட்டத்தின் போது மும்பை இந்தியன்ஸ் தலைவராக இருந்த ஹர்பஜன் சிங், பஞ்சாப் அணியில் இடம்பெற்றிருந்த ஸ்ரீசாந்த் கன்னத்தில் அறைந்தார். விசாரணைக் குப் பின்பு ஹர்பஜன் சிங் 11 ஆட்டங்களில் விளையாட தடை விதிக்கப்பட்டது. ஸ்ரீசாந்த் எச்சரித்து விடப்பட்டார்.

2009:

- ✔ மக்களவைத் தேர்தல் நடைபெற்றதால் போட்டி தென்னாபிரிக்காவுக்கு மாற்றப் பட் டது. அப்போது அந்நிய செலாவணி விதிமுறை மீறலில் ஈடுபட்டதாக அப்போதைய ஐபிஎல் ஆணையரான லலித் மோடிக்கு அமலாக்கப் பிரிவு இயக்குநரகம் நோட்டீஸ் அனுப்பியது.
- ✔ கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் உரிமையாளர்களில் ஒருவரான மோஹித் புர்மான், தென் ஆப்பிரிக்க பெண்ணிடம் தவறாக நடந்ததாகக் கூறி, பாதுகாவலரால் தாக்கப்பட்டார்.

2010:

- ✔ ஐபிஎல் போட்டிக்கான நிதியை தவறாக பயன்படுத்தியதாகக் கூறி அப்போதைய ஐபிஎல் ஆணையர் லலித் மோடியை பதவியில் இருந்து இடைநிறுத்தியது பிசிசிஐ.
- ✔ கேரள கொச்சி டஸ்கர் அணியில் தனது காதலி சுனந்தா புஸ்கருக்கு பங்கு வாங்கி கொடுத்ததன் எதிரொலியாக அப்போதைய மத்திய வெளியுறவு இணையமைச்சர் சசி தரூர் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

2011:

- ✔ புனே வாரியர்ஸ் அணி வீரரான மணீஷ் பாண்டே, 4ஆவது ஐபிஎல் போட்டி தொடங்குவதற்கு முன்னதாக, தனது அணி நிர்வாகத்திடம் கூடுதல் பண[illegible] கேட்டார். இதையடுத்து அவருக்கு [illegible] ஆட்டங்களில் விளையாட தடைவிதிக்கப்பட்டது.
- ✔ ஐபிஎல் நிர்வாகத்துக்கு செலுத்த வேண்டிய ஏலத் தொகையை செலுத்ததால் கொச்சி டஸ்கர்ஸ் அணி ஐபிஎல் போட்டியிலிருந்து நீக்கப்பட்டது.

2012:

- ✔ கூடுதல் வெளிநாட்டு வீரரை சேர்ப்பதற்கு பிசிசிஐ நிர்வாகம் அனுமதி அளிக்காததாலும், 94 ஆட்டங்கள் 74 ஆட்டங்களாகக் குறைக்கப்பட்ட நிலையில் அதற்கான கட்டணம் குறைக்கப்படாததாலும் ஐபிஎல் போட்டியில் இருந்து வெளியேறுவதாக புனே வாரியர்ஸ் அணி மிரட்டல் விடுத்தது.
- ✔ பெங்களூர் அணியில் இடம்பெற்றிருந்த அவுஸ்திரேலிய வீரர் போமர்ஸ்பே[illegible] டில்லி ஹோட்டலில் வெளிநாடு வாழ் இந்திய பெண்ணிடம் தவறாக நடந்த தால் கைது செய்யப்பட்டார்.
- ✔ சூதாட்டத்தில் ஈடுபட்டதாக 5 வீரர்கள் சிக்கினர். இதில் டெக்கான் வீரரான சுதிந்திராவுக்கு வாழ்நாள் தடையும், ஸ்ரீவஸ்தவாவுக்கு 5 ஆண்டு தடையும், மோனிஷ் மிஸ்ரா, அமித் யாதவ், அபினவ் பாலி ஆகியோருக்கு தலா ஓர் ஆண்டு தடையும் விதிக்கப்பட்டன.
- ✔ புனே அணியில் இடம்பெற்றிருந்த ராகுல் சர்மா, வேயன் பர்னெல் ஆகியோர் போதை விருந்தில் கலந்து கொண்டதாக கைது செய்யப்பட்டனர்.
- ✔ ஐபிஎல் நிர்வாகத்துக்கு செலுத்த வேண்டிய ஏலத் தொகையை செலுத்தாததால் டெக்கான் சார்ஜர்ஸ் அணி ஐபிஎல் போட்டியில் இருந்து நீக்கப்பட்டது.

# ஸ்கொட்லாந்தை வீழ்த்தி பாகிஸ்தான் வாகை சூடியது

ஸ்கொட்லாந்துக்கெதிரான முதலாவது ஒருநாள் போட்டியில், பாகிஸ்தான் அணி 96 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஸ்கொட்லாந்து சென்றுள்ள பாகிஸ்தான் அணி இரண்டு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டி எடின் பர்க் நகரில் நடந்தது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் மிஸ்பா துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர் முடிவில் 7 விக்கெட்டுக்கு 231 ஓட்டங்கள் எடுத்தது.

தொடக்க வீரர் இம்ரான் பர்கத் 46 ஓட்டங்களும், சயீத் அஜ்மல் 28 ஓட்டங்களும், மிஸ்பா உல் ஹக் ஆட்டமிழக்காமல் அரைசதம் கடந்து 83 ஓட்டங்களும் எடுத்தனர். ஸ்கொட்லாந்து சார்பில் மஜித் ஹேக் 3 விக்கெட் வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணி 39.4 ஓவரில் 135 ஓட்டங்களுக்கு சுருண்டு தோல்வியடைந்தது. எட்டக் கூடிய இலக்கை விரட்டிய ஸ்கொட்லாந்து அணி பாகிஸ்தான் பந்துவீச்சில் திணறியது.

அதிகபட்சமாக ஜோஷ் டேவி 20 ஓட்டங்களும், அணித்தலைவர் கைல் கோட்சர் 32 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். [illegible]கிஸ்தான் சார்பில் ஜுனைடு கான், சயீஜ் அஜ்மல் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பையை வீழ்த்தியது பஞ்சாப்

ஐ.பி.எல். கிரிக்கெட்டின் 69-வது லீக் நேற்று மாலை 4 மணிக்கு தர்மசாலாவில் நடைபெற்றது. இப்போட்டியில் கிங்ஸ் லெவின் பஞ்சாப்- மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி 20 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 183 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் 184 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை அணி களம் இறங்கியது.

ஆனால் பஞ்சாப் அணியின் பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் மும்பை அணி 19.1 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 133 ஓட்டங்களே எடுத்தது. கடைசி விக்கெட்டுக்கு தவான் குல்கர்னி களம் இறங்காததால் பஞ்சாப் அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

# சென்னையை வீழ்த்தியது பெங்களூர்

பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் பெங்களூர்- சென்னை அணிகளுக்கு இடையேயான போட்டி நேற்று இரவு 8 மணிக்கு தொடங்குவதாக இருந்தது. மழை குறிக்கிட்டதால் ஆட்டம் தொடங்குவது தாமதமானது. மழை நின்ற பிறகு போட்டி 11 மணிக்கே தொடங்கியது. நேரம் இல்லாததால் போட்டி 8 ஓவராகக் குறைக்கப்பட்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற சென்னை அணி களத்தடுப்பைத் தேர்வு செயதது. பெங்களூர் அணியின் கெய்ல்- விராட் கோலி தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

கெய்ல் ஆட்டமிழக்க, கோலி எதிர்முனையில் அதிரடியாக விளையாடினார். அவர் சிறப்பாக விளையாடி 29 பந்தில் 4 சிக்சர், 6 பவுண்டரியுடன் அவுட் ஆகாமல் 56 ஓட்டங்கள் எடுத்தார். இவரது ஆட்டத்தால் பெங்களூர் அணி 8 ஓவருக்கு 2 விக்கெட் இழந்து 106 ஓட்டங்களைக் குவித்தது.

107 ரன் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் சென்னை அணி களம் இறங்கியது. பெங்களூர் அணியின் சிறப்பான பந்து வீச்சால் சென்னை அணி ஓட்டங்களை அடிக்க முடியாமல் திணறியது. சென்னை அணியால் 8 ஓவரில் 6 விக்கெட்டுகளை இழந்து 82 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது.

இதனால் பெங்களூர் அணி 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சென்னை , பெங்களூர் அணிகள் தனது அனைத்து லீக் போட்டியிலும் விளையாடி விட்டது.

சென்னை அணி 16 போட்டியில் 11 வெற்றி, 5 தோல்வியுடன் முதலிடம் பெற்றுள்ளது.

பெங்களூர் அணி 16 போட்டிகளில் 9 போட்டிகளில் வெற்றி பெற்று 4-வது இடத்தில் உள்ளது.

இன்று நடைபெறும் கொல்கத்தா- சன் ரைசர்ஸ் அணிகளுக்கு இடையேயான போட்டியில் சன் ரைசைர்ஸ் வெற்றி பெற்றால் பெங்களூர் அணி 5-வது இடத்தை பெற்று பிளே-ஆப் வாய்ப்பை இழக்கும். அதற்கு மாறாக கொல்கத்தா அணி வெற்றி பெற்றால் பெங்களூர் அணி பிளே-ஆப் சுற்றுக்கு தகுதி பெறும்.

## வடக்கு மக்களின் இதயத்தை ...

மனித கேடயங்களாக தடுத்துவைக்கப்பட்ட மூன்று இலட்சம் மக்களை மீட்டெடுத்த சிரேஷ்டத்துவமான சந்தர்ப்பமாகும்.

தாய்நாட்டை மீட்டெடுப்பதற்காக இலட்சக்கணக்கானோர் பலியானார்கள்- கண்-காது- அவயவங்களை இழந்தனர். இரத்தம் மற்றும் வியர்வையை பூமிக்கு பூஜை செய்தனர்.

அவ்வாறான சிரேஷ்டத்துவமிக்க படையினரை சிலர் சர்வதேச தூக்கு மேடைக்கு கொண்டு செல்வதற்கு முயற்சித்தனர். இன்னும் சிலரோ படையினருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் தேவையான நலன்புரி விடயங்களை செய்துவருகின்றனர்.

ஒருகாலத்தில் காலிமுகத்திடல் மூடப்பட்டிருந்தது. மத்திய வங்கி கட்டிடம் தரைமட்டமாக்கப்பட்டது. அதற்கு அருகிலிருக்கின்ற ஜனாதிபதி மாளிகைக்கும் குண்டு லொறி அனுப்பப்பட்டது. அவற்றுக்கு அருகிலிருக்கின்ற ஹோட்டல்களின் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அனுராதபுரம் மகாபோதி விகாரையின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. 1990களில் காத்தான்குடியில் தொழுது கொண்டிருந்த முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. மாத்தறையில் நடத்தப்பட்ட முஸ்லிம் பேரணியின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்த அமைச்சர் இன்னும் சுகமடையாத நிலையில் இருகின்றார்.

நாட்டில் பல இடங்கள் மற்றும் சந்திகள் புலிகளினால் தாக்குல்கள் நடத்தப்பட்ட சந்திகளாவும் இடங்களாகவுமே அடையாளம் காணப்பட்டன. அவ்வீதியாக இன்றும் அந்த இடங்களை கடந்து செல்கையில் இந்த இடத்தில் தான் ஜனாதிபதி பிரேமதாச கொல்லப்பட்டார்.

இந்த சந்தியில் தான் பாரமி குலத்துங்க கொல்லப்பட்டார் என்று அடையாளப் படுத்துகின்றனர். என்னிடமும் சில இடங்களை இப்படித்தான் அடையாளப்படுத்தினர்.

நாட்டில் எங்கும் எவ்விடத்திற்கும் சென்று எதனையும் செய்யும் வகையில் புலிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட காலமொன்றும் இதயத்தில் மரணபயமிருந்த நாடாகவும் இந்நாடு இருந்தது. மக்களை மீட்டெடுப்பதற்கு யாருமே முன்வரவில்லை.

மக்கள் தாக்கப்பட்டபோது ஆறில் ஐந்து பங்கு அதிகாரத்துடன் இருந்த ஜனாதிபதி மக்களே தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று கூறிவிட்டார். புலிகளுக்கு ஆயுதங்களை கொடுத்துதவிய ஜனாதிபதி புலிகளினாலேயே கொல்லப்பட்டார்.

புலிகளுக்கு குண்டு துளைக்காத ஆடையை வழங்கி சமாதானத்திற்கு அழைத்துவந்த இந்திய பிரதமரையும் புலிகள் இந்தியாவில் வைத்தே கொலைச் செய்தனர்.

புலிகளுடன் மோதவேண்டாம் அவர்கள் கேட்பதைக் கொடுக்குமாறு சர்வதேசம் எங்களிடம் அடிக்கொருத்தடவை கேட்டது. எனினும்- நாம் இளைஞர்களின் சக்தி மற்றும் வீரத்தில் நம்பிக்கை கொண்டோம். பயத்தை இல்லாது செய்து நம்பிக்கையூட்டினோம்.

அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட வெற்றி சிறுபிள்ளைகளின் இதயங்களுக்கே நன்றாக புரிகின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாக நாட்டை பிரித்து கொடுக்கவும் முயற்சித்தனர்.

வட மாகாணத்தை பொறுத்தவரையில் 12 கட்சிகள் தங்களுடைய அரசியல் செயற்பாடுகளை சுதந்திரமாக முன்னெடுக்கின்றனர். பயந்துக்கொண்டு கொழும்பிலிருந்து அன்று அரசியல் செய்தவர்கள் இன்று எவ்விதமான அச்சமும் இன்றி அரசியல் செய்கின்றனர்.

வடக்கு கலாசாரத்தை நாசப்படுத்துவதற்கு பிரபாகரனும் புலம்பெயர்ந்தவர்களும் முயற்சித்தனர். மனித கேடயங்களாக தடுத்து வைக்கப்பட்ட மக்களை மீட்டெடுத்தபோது அவர்களுக்கு சாப்பாடு கொடுப்பதற்கு யாரும் முன்வரவில்லை. புலம்பெயர்ந்தவர்களும் முன்வரவில்லை. அவர்களுக்கு இராணுவமும் அரசாங்கமுமே உணவு கொடுத்தது.

தூக்குமேடை வரை செல்லவேண்டியவர்களுக்கு நாம் மன்னிப்புக் கொடுத்தோம். பலர் புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளனர். வேறு நாடுகளில் இவ்வாறான நடைமுறை இல்லை.

சிவில் படைக்கு தமிழர்கள் 4000 பேரை இணைத்துள்ளோம். முப்படைகளிலும் இணைவதற்கு வரிசைகளில் நிற்கின்றனர்.

படைகளில் தமிழர்கள் இணைவதை தெற்கில் உள்ளவர்கள் எதிர்க்கவில்லை. வடக்கில் உள்ள சிலரும் புலம்பெயர்ந்தவர்களுமே எதிர்த்தனர்.

அதனால் தான் அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் பிரேரணை கொண்டுவரப்பட்டபோது கிளிநொச்சியில் அந்த பிரேரணைக்கு எதிராக மக்கள் அணித்திரண்டு எதிர்ப்பு ஆரப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு கிழக்கு மக்களின் இதயங்களை நான் நன்கறிவேன். ஒரு தேர்தலில் பொன்னம்பலத்தை தோல்வியடையச்செய்து கொப்பேகடுவையை வெற்றி பெறச்செய்தனர்.

காலத்திற்கு காலம் புரட்சி-ஊடக சுதந்திரம மற்றும் மனித உரிமை பிரச்சினைகள் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் குரல் கொடுப்பர் அதற்கெல்லாம் நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை நாங்கள் பதிலளித்து கொண்டிருக்கின்றோம் என்பதுடன் ஒரு அங்குலத்தையேனும் பறிப்பதற்கோ இன்றேல் நாட்டை பிரிப்பதற்கோ ஒருபோதும் இடமளியேன் என்றார். (செ-11)

## உறவுகளுக்கு ...

முள்ளிவாய்க்காலில் மரணித்த தமது உறவுகளுக்கு மக்கள் பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் வன்னியில் பரவலாக தமது வீடுகளிலும், ஆலயங்களிலும் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தியதுடன் சிறப்புப் பூசைகளும் செய்தனர்.

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது கடந்த 2009ஆம் ஆண்டு மே 17,18 ஆகிய தினங்களில் நடைபெற்ற யுத்தத்தால் பல ஆயிரக்கணக்கான அப்பாவி பொதுமக்கள் யுத்தத்தினால் உயிரிழந்த தினமான நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமையும் நேற்று சனிக்கிழமையும் மக்கள் தமது உறவுகளின் ஆத்ம சாந்திக்காக பூசை செய்தனர்.

இதேவேளை மக்களுடைய அஞ்சலி நிகழ்வுகளைத் தடுக்கும் நோக்கில் மர்ம நபர்கள் அவர்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டதையும் காணமுடிந்தது.

ஆயினும் முள்ளிவாய்க்கால் புதுமாத்தளன் உட்பட பல்வேறு இடங்களில் உள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்களிலும் வீடுகளிலும தீபங்களை ஏற்றி மக்கள் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

### தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் ஏற்பாட்டில்...

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டின்கீழ் வவுனியா நகரசபை மண்டபத்தில் அமைக்கப்பட்ட சிறப்பு நினைவு துாபியில் வன்னி இறுதிப் போரில் மரணித்த மக்களுக்கான அஞ்சலி நிகழ்வுகள் நேற்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம் பெற்றது.

நகரசபை மண்டபத்திற்கு செல்கின்ற பகுதிகளுக்கான பாதைகளை தடைபோட்டு பொலிஸார் தடுத்தபோதும் ஆயிரக்கணக்கான மக்களும் தமிழத் தேசிய கூட்டமைப்பின் அனைத்துக் கட்சிகளுடைய தலைவர்கள் உறுப்பினர்கள் உட்பட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதேச சபைகளின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் உள்ளடங்கலாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், பாஸ்கரா, ஜனநாயக சோசலிச கட்சியின் சிறிதுங்க ஜெயசூரிய உட்பட பலர் கலந்து கொண்டு தீபம் ஏற்றி மலரஞ்சலி அக வணக்கம் என்பவற்றை செலுத்தினர்.

இந்நிகழ்வில் மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம், மனோ கணேசன், சிறிதரன், ஆனந்தசங்கரி, பவான், சரவணபவான் உட்பட மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் அம்பலவாணர் தனிநாயகம எனப்பலரும் நினைவுரைகளையும் சிறப்புரைகளையும் ஆற்றினர்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமான அறிவகத்தில் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் ஆத்ம சாந்தி நிகழ்வு பா.உ. சி.சிறிதரன் தலைமையில் உணவுர்பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

முள்ளிவாயக்காலில் இறந்துபோன

## முள்ளிவாய்க்கால் ...

அமைக்கப்பட்டிருந்த நினைவுததூபி திட்டமிட்ட வகையில் விஷமிகளினால் இடித்தழிக்கப்பட்டுள்ளது.

வவுனியா - சம்மனங்குளம் சனசமூக நிலையத்தால் திறந்துவைக்கப்பட்ட இந்த நினைவுத்தூபி தமிழ்த் தேசியத்திற்கு எதிரான குழுக்களால் இடித்தழிக்கப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா நகரசபை பதில் தலைவர் எம்.எம்.ரதன் கூறினார்.

சம்பவம் நடைபெற்ற இடத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம், வவுனியா நகரசபை பதில் தலைவர் எம்.எம்.ரதன் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் நேற்று காலை நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. போர்முடிபுற்ற பின்னர் தமிழர் தாயகத்தில் நினைவிடங்கள், தூபிகள் இடித்தழிக்கப்பட்டு வரும் நிலையில், முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த தமிழ் உறவுகளின் நான்காம் ஆண்டு நினைவுதினம் அனுஷ்டிப்பதற்கு முதல் நாள் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது ஏற்றுக்கொள்ள முடியாத சம்பவமாகும். இதில் சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இது தொடர்பாக தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.(செ-11)

ஆன்மாக்களின் ஈடேற்றம் வேண்டி நேற்று காலை 8 மணிக்கு சைவ ஆராதனை நிகழ்வும் கிறிஸ்தவ ஆராதனை நிகழ்வும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமான அறிவகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களை நினைவுகூரும் அஞ்சலி நிகழ்வு வவுனியாவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

முன்னதாக வவுனியா சம்மளங்குளம் என்னுமிடத்தில் முள்ளிவாய்க்காலில் இனப் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டவர்களை நினைவுகூர்ந்து மனித உரிமை அமைப்பு ஒன்றினால் கடந்த 2010ஆம் ஆண்டு அமைக்கப்பட்டிருந்த நினைவுச் சிலைக்கு மலர்தூவி வணக்கம் செலுத்தும் நிகழ்வுக்கும், அதனைத் தொடர்ந்து அருகில் உள்ள மண்டபம் ஒன்றில் நினைவு வணக்க கூட்டம் நடத்துவதற்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட கிளை ஏற்பாடு செய்திருந்தது.

எனினும் விஷமிகள் சிலர் நேற்று முன் தினம்(17-5-2013) இரவு குறித்த நினைவுத் தூபியை உடைத்து நொருக்கியிருந்தனர். அத்துடன் நேற்று அதிகாலை முதல் அப் பகுதியில் சிவிலுடையில் நின்ற பெருமளவு இனந்தெரியாத நபர்கள் குறித்த நிகழ்வுக்காக வந்த மக்களை அச்சுறுத்தி திருப்பி அனுப்பி நிகழ்வை குழப்ப முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

எனினும் உப தலைவர் சிவபாதம் கஜேந்திரகுமார் மற்றும் மாவட்ட அமைப்பாளர் வசந்தரூபன் உள்ளிட்ட கட்சி ஆதரவாளர்கள் உடைத்து சேதமாக்கப்பட்ட நினைவுக்கல் அருகில் மலர்தூவி அஞ்சலி செலுத்திய பின்னர் வேறு இடம் ஒன்றில் வணக்கம் செலுத்துவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொண்டு, திட்டமிட்டபடி காலை 11.00 மணியளவில் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கான உறவுகளை நினைவுகூரும் வணக்க நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உப தலைவர் சி.கஜேந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன்(சட்டத்தரணி), இளைஞர் அணித் தலைவர் இ.சத்தியசீலன், செயற்குழு உறுப்பினர் வி.முபில்ஜான் உட்பட கட்சி உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கு சுடரேற்றி, மலர்தூவி வணக்கம் செலுத்தினர்.

இதேவேளை முள்ளிவாய்க்கால் பகுதியில் இறந்தவர்களின் நினைவாக லண்டனில் நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றில் ஆயிரககணக்கான புலம்பெயர் தமிழர்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

பிரிட்டிஷ் தமிழர் பேரவையினால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. லண்டனின் மையப்பகுதியில் ஆரம்பித்த இந்த ஊர்வலம் "பிக்காடிலி சர்க்கஸ்" வரை தொடர்ந்தது.

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டும் என்ற தொனிப்பொருளை மையமாகக் கொண்டு இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டாலும், இலங்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் வரை, அந்த நாட்டை பிரிட்டன் பகிஷ்கரிக்க வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரினார்கள்.

இலங்கையில் கொல்லப்பட்ட மக்களுக்கு உரிய நீதி கிடைக்காத நிலையில், அங்கு நடக்கவிருக்கும் பொதுநலவாய மாநாட்டை பிரிட்டிஷ் பிரதமரும், பக்கிங்ஹாம் அரண்மனையும் புறக்கணிக்க வேண்டும் என்று பிரித்தானிய தமிழர் பேரவையின் ஊடகத் தொடர்பாளரான சாம் கிருஷ்ணா தெரிவித்தார். (செ-11,15,3,250,266)

## மக்களை பிளவு ...

போதும், இது தொடர்பில் அரசாங்கம் இது வரையில் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. இது கவலைக்குரிய விடயம்.

இந்த வெற்றி விழா கொண்டாட்டங்களை காண்பித்து நாட்டில் உள்ள சிங்கள மக்கள் மத்தியில் அரசாங்கம் தங்களின் செல்வாக்கை தக்கவைத்துக் கொள்ள முயற்சிக்கிறது.

இது நாட்டினை மேலும் பிளவுபடுத்தும் என்றும் சமாதான பேரவை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிரந்தர வேலைவாய்ப்புகள்

**வாழ்க்கைப் பாதையை மாற்றிக் கொள்ள...**
**அதிக சம்பளத்துடன் 18,000/= , 25,000/=, 32,000/= வேலைவாய்ப்புக்கள்!**

கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான ஜேம்/கோடியல்/பிஸ்கட்/கிளவு/PVC/பொலிதீன்... போன்றவற்றுக்கு உற்பத்தி, லேபல், பொதியிடல், தரம்பிரித்தல் பிரிவுக்கு ஆண், பெண் 17 - 50 வயதினர் தேவை.
உணவு, தங்குமிடம் சகாய விலைகளில்...
(தம்பதியினர்/ குழுக்கள்/ நண்பர்கள் ஒரே தொழிலில்)
வருகை தரும் நாளிலே வேலை.

**077 8430179 / 077 556 1883**

வவுனியா காரியாலயம் (3361)



## செங்கற்கள், ஓடுகள் விற்பனைக்குண்டு

**தங்கொட்டுவ செங்கற்கள், NO 1 ஓடுகள் யாழ், வன்னி போன்ற பிரதேசங்களுக்கு விநியோகம் செய்துதரப்படும்.**



**பிரணவன் என்ரபிறைசஸ்**
இல :365, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(சங்கிலியன் சிலைக்கு முன்பாக) 0773818799.



## தேவை

மனதிற்கு நிறைவான வேலை. அதியுயர் சம்பளம் (தொழில் அடிப்படையில்) 18,000/=, 45,000/= கொழும்பு துறைமுகம்/விமான நிலையம் தனியார் பிரிவுகளில் கப்பல் திருத்துநர்/வெல்டர்/பெயின்டர்/சாதாரண ஊழியர்கள் மற்றும் சுத்திகரிப்பாளர்கள். பிரிவுக்கு ஆண்-பெண் 18-50 வயதினர் தேவை. உணவு, தங்குமிடம் சகாய விலைகளில். உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

**077 556 1883**

வவுனியா (3362)



## உடனடியாக தேவை

கட்டிட நிர்மாணத்துறையில் கொழும்பு/ மல்லாவி/ கம்பஹா பிரதேசங்களில் கட்டிட நிர்மாணத்துறைக்கு மேசன், கையுதவியாளர், செடலின் பாஸ், இலற்றீசன், பிளம்பர் தேவை.
சம்பளம் 25,000/=, 48,000/= உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.

**தொடர்பு: 077 556 1883**

வவுனியா (3363).



## கணினி மலிவு விற்பனை

Tablet Pc -20,250/= (1Y)
Branded Pc Hp - 24750/= தொடக்கம் (1Y)
Assemble Pc Intel - 39,500/= தொடக்கம் (3Y)
Laptop i3 - 60,250/= தொடக்கம் (3Y)



Free 4 GB Pen/Skypecam/ Headphone

(15 ஆவது வருட சேவையில்)

**ST.Antony's**
# 187, K.K.S. Road, Jaffna Town
021 222 4865, 0750698608 (C-3369)



## நாய்க்குட்டி விற்பனைக்கு

cocker spaniel ஆண், பெண் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. (2673)

தொலைபேசி:-0213007253


## யாழ்.பல்கலைச் ...

நினைவு கூர முடியும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய அறிவித்திருந்த நிலையிலும், இராணுவ மற்றும் புலனாய்வுத்துறையின் கெடுபிடிகள் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி உட்பட ஏனைய தமிழர் வாழும் பிரதேசங்களில் அதிகரித்தே காணப்பட்டன.

இந்நிலையில், யாழ்.பல்கலையில் இவ்வாறான பாதுகாப்புக்களிற்கு முகம் கொடுக்காத மாணவர்கள் முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவு தினமான நேற்றைய தினத்திற்கு முன்தினத்திலேயே அனுஷ்டித்திருந்தனர்.

இவ் நினைவு நிகழ்வு உடன் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதனால் இதன்போது பாதுகாப்பு பிரிவனரின் கெடுபிடிகள் அங்கு காணப்படவில்லை.

எனினும் ஒரு சில இனந்தெரியாத நபர்கள் தங்களோடு நின்றதாக மாணவர் கள் தெரிவித்தனர்.

நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழகத்தைச் சூழ இராணுவததினர், கலகமடக்கும் பொலிஸார் புலனாய்வு பிரிவினர் என அனைவரும் கண்காணிப்பு நடவடிக்கையில் களமிறக்கப்பட்டிருந்தனர்.

பல்கலைக் கழகத்தின் கிழக்குபக்கமாக பெரிய வாகனமொன்றில் 30 இற்கும் மேற்பட்ட கலகமடக்கும்பொலிஸாரும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

மேலும் நேற்றைய தினம் அங்கு மாணவர்களின் நடமாட்டம் வழமையிலும் பார்க்க குறைவாகவே காணபட்டது.

எனினும் யாழ். பல்கலையில் விரிவுரைகள் எவையும் நேற்றைய தினம் பாதிக்கப்படவில்லஎனபல்கலை நிர்வாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-4)

## கஜேந்திரன் ...

இரங்கல் கூட்டமொன்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் உள்ளிட்ட சிலர் மன்னார் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். (செ-250)


## PRE-SCHOOL TEACHER WANTED

**ஆங்கில மொழியில் முன்பள்ளியில் கற்பிக்கக் கூடிய ஆசிரியை தேவை**

விண்ணப்ப முடிவு திகதி 23-5-2013

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
*English Language Teaching College (Pvt)Ltd*
*A9 Road, No.92 Ananthapuram.*
*Klinochchi. Or eltc.sl@gmail.com*
077 074 3131



## STUDY in LONDON

June/July Intake started now

- G.C.E O/L தகைமை போதுமானது.
- மிகக்குறுகிய காலத்தில் பயணிக்க கூடிய அரிய சந்தர்ப்பம்.(3/4 வாரங்களில் வீசா)

City&Guilds Approved centre

City&Guilds B1 or IELTS பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களா நீங்கள்...? உங்களுக்காக, "கல்லூரிக்கட்டணம்" மற்றும் "Sponsor" ஏற்பாடுகளிற்கு எமது நிறுவனமே பணத்தை செலவு செய்கின்றது.

வீசா கிடைப்பதற்கு முன்னதாக எவ்விதமுற்பணமும் உங்களிடத்திலிருந்து அறவிடப்படமாட்டாது.

France(French), German(Deutch), City&Guilds (A1,B1/B2) IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றது.

இந்த பொன்னான அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாது எம்முடன் இணைந்து உங்கள் கனவை நனவாக்குங்கள்.



கடந்த வாரங்களில் வீசா கிடைக்கப்பெற்ற மாணவர்கள்

City&Guilds நிறுவனத்தில் ஆசிரிய பயிற்சி பெற்ற ஆசிரியரின் வழிகாட்டலில் வகுப்புக்கள். பரீட்சையில் 100% சித்தியடைவதற்கான உத்தரவாதம்.

WORLD EDUCATION & CONSULTANCY(PVT)LTD
No:377, Sangaththanai, Chavakachcheri.
T.P: 021 7200 989 Mob: 0779 265447
e mail: chec.usr@gmail.com
Gov.Reg No:TN/DS/UC/0324



## Direct Marketing International Pvt (Ltd)

DS MAX

**வேலைவாய்ப்பு** புதியதோர் எதிர்காலத்தை நோக்கி...

நீங்கள் Management துறையில் ஆர்வம் கொண்டவரா? தனியாக ஒரு அலுவலகத்தைக் கொண்டு நடத்தும் திறன் படைத்தவரா? அப்படியானால் உங்களுக்கான ஒரு புதிய சந்தர்ப்பம். வடக்கில் ஆரம்பிக்கவுள்ள எமது புதிய கிளைகளுக்கு office Administration, Management Trainee, Supervisors, customer care, Account ஆகிய பதவிகளுக்காக துடிப்பான ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் தேவைப்படுகின்றனர்.

- அடிப்படைத் தகைமைகள்: O/L
- 6, 8 மாதகால பதவி உயர்வு அனுபவப் பயிற்சி வழங்கப்படும். அதன்மூலம் அடிப்படையாக 12,000-14,000/= பெறலாம்.
- தங்குமிட வசதிகள் உண்டு. வயதெல்லை: 18-35

தொடர்புகளுக்கு: 0775566226, 0770771377, 0217200867,
உங்கள் திறமைகளை வெளிப்படுத்த புதிய சந்தர்ப்பம்: www.grantonsrilanka.com (C-3667)



## Deutsch, Dutch, French, English

**2013 புதிய வகுப்புகள் விபரம்**

ஜேர்மன் - டொச், நெதர்லாந்து - டச்
தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புக்கள் அனைத்தும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. மேலும் London செல்பவர்களுக்கான ஆங்கிலம் AI, French, Italian வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
குறிப்பு: திங்கள் முதல் புதிய வகுப்புகளுக்கான பதிவுகள் நடைபெறும்.

**தொடர்பு: விவேகானந்தா அக்கடமி**
221/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: Hotline, 0774842464/ 021 321 6928
(C-3366)



# புதுக்கடைத் திறப்பு விழா



மீண்டும் புதுப்பொலிவுடன் உங்கள்

*Sarasas's Center*
Opening Ceremony
19th May 2013, Sunday am 10

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



சகலவிதமான வீட்டுப் பாவனைக்குரிய மின்சாதனப் பொருட்களை மலிவு விலையிலும் தரம் உள்ளதாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய நம்பிக்கைக்குரிய ஒரே இடம் உங்கள்

**Sarasas's Center**
789, K.K.S Road,
Sivalingapuliyady, Jaffna.
021 222 8540
(சி-3368)



## கடை விற்பனைக்கு

ஸ்ரான்லி றோட் (வெலிங்டன் சந்தியில்) யாழ்ப்பாணத்தில் உள்ள கடை விற்பனைக்கு உண்டு.

T.P:-0777111400



## உங்கள் அன்பு உறவுகளுக்கு ... !

www.creativedesk.lk/shop

மேலதிக விபரங்களுக்கு :-
(2610) 077 777 8529



## வீடு வாடகைக்கு

வீடு வாடகைக்கு உண்டு.

NO.9, மருதடி றோட், நல்லூர், யாழ்ப்பாணம். (2644)

T.P:-0759656565
0777350003



## காணி விற்பனைக்கு

அளவெட்டிஅலுக்கைச் சந்தியிலிருந்துஅம்பனைக்குப் போகும் றோட்டில் (அளவெட்டி மத்தி) 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:-0114949234 (2644)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.